பொதுசன நூலகம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
19 JUL 2004

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 04 | திங்கட்கிழமை | (19.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 213

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## கருணாவுக்கு பாதுகாப்பு வழங்க அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு அரசாங்கம் தகுந்த பாதுகாப்பை வழங்க வேண்டும் என ஈ.பி.டி.பி கோரியுள்ளது. இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்துக்கு கொண்டுவந்ததாகவும்,

கடந்த வாரம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணாவின் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய சச்சி மாஸ்டர் கொலை செய்யப்பட்டதையடுத்தே இக் கோரிக்கையை தாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாகவும் ஈ.பி.டி.பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கருணா புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கி அரசியல் நீரோட்டத்திற்குள் வருவதற்கு தான் பூரண ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-121)

## அரசு - புலிகள் சமாதான முயற்சியில் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன?

### விளக்கமளிக்கும் பொறுப்பு பீரிஸிடம்

(கொழும்பு)

அரசு - புலிகள் சமாதான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடுகள், நகர்வுகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஜீ.எல். பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவினை ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு எடுத்துள்ளது.

நாட்டின் சமாதூன முயற்சிகளில் அதிக அக்கறையுடன் நீண்டகாலம் ஈடுபட்டு வந்தவர் என்ற அடிப்படையிலேயே இப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகளுக்கும் ஐ.தே.க அரசுக்கும் இடையில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலேயே அரச பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் இப் பொறுப்பை அவரிடமே ஒப்படைப்பதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடனான சமா

(12ம் பக்கம் பார்க்க)

# புலிகளுடனான சமாதானப் பேச்சை அரசாங்கம் உடன் ஆரம்பிக்க வேண்டும்

## இந்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் இலங்கைப் பிரதமருக்கு ஆலோசனை

(புதுடில்லி)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆறு சுற்றுடன் இடைநடுவில் தடைப்பட்டுள்ளமை இந்தியாவுக்கு வருத்தத்தைத் தந்துள்ளது.**

**இந் நிலையில் தடைப்பட்டுப்போன சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என இந்தியா நம்புவதாக இந்திய மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ள பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய மத்திய நிதியமைச்சரை நேற்றுக் காலை 11.30 மணிக்கு புதுடில்லியில் உள்ள ஒபரேய் ஹொட்டலில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இப் பேச்சுவார்த்தையின் பின்னர் நிதியமைச்சர் சிதம்பரம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(12ம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள் சமூகக்கல்வியும் வரலாறும் - 1
ஆக்கம்:
எஸ்.தம்பையா (B.A. Dip. in. Ed)
ஆசிரியர்

## இந்தியப் பிரதமருடன் இன்று இலங்கைப் பிரதமர் பேச்சு

(புதுடில்லி)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ள இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங்கையும், ஜனாதிபதி டாக்டர் ஓ.பி.ஜே. அப்துல் கலாமையும் இன்று சந்தித்துப் பேசவுள்ளதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சந்திப்புக்களின்போது இரு

(12ம் பக்கம் பார்க்க)

## விடார் ஹெல்கிசன் இன்று வருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் இன்று இலங்கை வரவுள்ளார்.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து அவசர கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுவதற்காகவே அவர் இன்று வரவுள்ளதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வரும் ஹெல்கிசன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

(12ம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறைச்சாலை சூட்டுச் சம்பவம்

களை மீள ஆரம்பிப்பது குறித்து

(12ம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறைச்சாலை சூட்டுச் சம்பவம்

# மொனராகல சிறைக்கு சந்தேக நபர் மாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான மகேந்திரம் புவிதரன் மொனறாகல சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் போதிய பாதுகாப்பு வசதி இல்லாமையினாலேயே அவர் மொனறாகல சிறைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் ஆயுதத்துடன் சரணடையும்போது தன்னை மட்டக்களப்பு சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்க வேண்டுமென நிபந்தனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்

(12ம் பக்கம் பார்க்க)

# கடலுக்குச் சென்ற மீனவர்கள் ஆறு பேரைக் காணவில்லை

(திருநெல்வேலி)

வடமராட்சி இன்பருட்டிக் கடற்பரப்பில் கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் ஆறு பேர் காணாமல் போயுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கடற்தொழிலுக்கென மூன்று படகுகளில் சென்ற மேற்படி ஆறு மீனவர்களும் மறுநாள் வரை கரையை அடையவில்லை. இதனையடுத்து, இவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் நேற்றையதினம் முழுவதும் மீனவர்கள் ஈடுபட்டனர்.

எனினும், காணாமல்போன மீனவர்களை கண்டுபிடிக்கமுடிய வில்லை.

இன்பருட்டியைச் சேர்ந்த ப. இராமலிங்கம் (வயது 48), இ. அஜந்தன் (வயது 19), க. அன்பழகன் (வயது 23) மற்றும் த. கிறிஸ்ரி (வயது 26) ஆகியோர் உள்ளிட்ட ஆறு பேரே அன்றைய தினம் காணாமல் போனவர்கள் ஆவர்.

(18-43)

# கொழும்பு செல்லும் பயணிகள் மீது புத்தளத்தில் சோதனைக் கெடுபிடி

(வவுனியா)

வடபகுதியில் இருந்து புத்தளம் ஊடாக கொழும்புக்குச் செல்லும் பயணிகள் புத்தளம் பகுதியில் இராணுவச் சோதனைக் கெடுபிடிகளுக்கு ஆளாகிவருகின்றனர்.

வடபகுதியில் இருந்து கொழும்புக்குச் செல்லும் பயணிகள் நேற்று முதல் புத்தளம் வீதியில் சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

வாகனங்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு அடையாள அட்டை மற்றும் உடைமைகள் என்பன தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன.

சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் நிறுத்தப்பட்டு துருவித் துருவி சோதனை செய்யப்படுவதுடன் சந்

(12ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளுடன் பேச ஹெல உறுமய முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடலை நடாத்துவதற்கு ஹெல உறுமய ஆயத்தங்களை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் ஆயத்தங்கள் தற்போது ஆலோசனைகள் மட்டத்திலேயே இருப்பதாகவும இக் கலந்துரையாடல்கள் புலிகளின் சிங்களம் பேசக்கூடிய உயர்மட்ட உறுப்பினர்கள் ஊடாக நடத்தப்படும் என்று ஹெல உறுமயப் பேச்சாளர் தெரிவித்தார். சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு தொடர்வது என்பது பற்றியே கலந்துரையாடப்படவுள்ளது. இது பற்றி ஹெல உறுமய மேலும் தெரிவிக்கையில்,

எதைப் பற்றியும் சிங்கள மக்களின் அபிப்பிராயங்கள் புலிகளுக்குச் சரியான முறையில் அறிவிக்கப்படுவதில்லை. சகல கட்சிகளையும் தொடர்புபடுத்தி தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா சமாதானப் பேச்சுக்களை நடத்தியதைப் போன்றே இங்கும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என முன்னர் விளக்கி

(12ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை

# ஏற்கப்பட்டால் அரசுடன் இணைவோம்

## ஸ்ரீ.மு.கா.தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**யாழ்.குடாநாட்டில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் குறித்துத் தொடர்ந்தும் பேச்சு நடாத்தி வருவது அரசியலுக்கு அநாகரிகமானது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் தென்னிலங்கை ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

யாழ்.குடாநாட்டிலிருந்து கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுயில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் குறித்து, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனிப்பட்ட வகையில் வருத்தம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்துத் தொடர்நதும் பேசுவது அரசியலுக்கு அநாகரிகமானதொன்றாகும். எனவே இதுகுறித்துத் தொடர்நதும் பேசுவது முறையல்ல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே முஸ்லிம் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளை உள்ளடக்கியது. அரசாங்கத்துடன் இணைநதிருக்கும் ஒருசில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒட்டுமொத்தமான முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் வென்றெடுக்க முடியாது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் தனித்தரப்புக கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அரசுக்கு ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏந்நேரமும் தயாராகவிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். (18-121)

## ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய ஆடிப்பூரத்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் மூலமூர்த்தி அம்பாளுக்கு 108சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும் நவோத்திர சகஸ்ர மஹாசங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

(10)

## பெருவிழா

(பொன்னாலை)

நாரந்தனை சின்னமடு தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப் பெருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் ஏற்பாட்டுக் குழு மேற்கொண்டு வருகிறது.

(4-49)

## ஐ.தே.க.வின் தலைமைப் பதவியிலிருந்து ரணிலை விலகுமாறு பலதரப்பும் அழுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வைத் தலைமைப்பதவியில் இருந்து விலகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பல தேர்தல்களில் தாம் தோல்வி யடைந்ததிற்கு முக்கிய காரண கர்த்தா ரணில் விக்கிரமசிங்க தான் அதனால், அவரைத் தலைமைப்பதவியல் இருந்து விலகு மாறு கட்சியின் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 1956ஆம் ஆண்டிலும், 1970ஆம் ஆண்டிலும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்த போது, அப்போது பதவியிலிருந்த ஜோன் கொத்தலாவையும், டட்லி சேனநாயக்கவும் தலைமைப்பதவியில் இருந்து விலக்கியமையைச் சுட்டிக்காட்டிய கட்சி ஆதரவாளர்கள், தற்போது ரணில் விக்கிரமசிங்கவும் இதனையே பின்பற்ற வேணடும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, கடசியின் சிரேஷ்ட தலைவர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்க தனது தலைமைப் பதவியை, பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவிடம் கையளிக்க வேண்டும் எனவும் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இதனால் கருஜெயசூரிய தற்போது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பிரபலயம் அடைந்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் வெளிநாட்டு அமைச்சருமான டிரோன் பெர்ணாண்டோவும் தற்போதைய கட்சியின் தலைமைப் பீடத்திற்கு எதிராக முக்கியஸ்தர்களை அணிதிரட்டி வருகின்றார்.

இதற்கிடையில், ரணில் விகக்கிரமசிங்க கட்சி ஆதரவாளர்களின கவனததைத் திசைதிரும்பும் முயற்சியாக சபாநாயகர் டபிள்யு.யே. எவ்.லொக்கு பண்டாரவைப் பதவியில் இருந்து விலகுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் திட்டத்திற்கு எதிராக ஆளணியைத் திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுவருகிறார். (18-121)

## பிரபாவின் படத்துடன் இரு இளைஞர்கள் கைது

(மாத்தறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின தலைவர் வே.பிரபாகரனின் புகைப் படங்கள் மற்றும் புலிகளின் விடுதலைக் கீதங்கள் அடங்கிய இரு வெட்டக்களைத் தம்வசம் வைத்திருந்த இரு இளைஞர்கள் மாத்தறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டகலவைச் சேர்ந்த இத் தமிழ் இளைஞர்கள் கடந்த மூன்று மாத காலமாக விசுவமடுப்பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அங்கிருந்து கொட்டகலக்குத் திரும்பும் வழியிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவாகள் பஸ் வண்டியில் சென்று கொண்டிருந்தபோது பொலிஸார் நடத்திய திடீர் சோதனைகளின் போது இப் பொருட்களை வைததிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.(18-1218)

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாக் காட்சிகள்






படங்கள்: க.பவன்

Tour de France Diary

# 13வது சுற்றில் அமெரிக்கர் ஆம்ஸ்ரோங் முத்திரை பதித்தார்

ஒலிம்பிக், உலகக்கிண்ண உதைபந்து ஆகிய போட்டிகளுக்கு அடுத்தபடியாக உலகின் மாபெரும் விளையாட்டு நிகழ்வாகக் கருதப்படும் ரூர் டி பிரான்ஸின் 13வது சுற்றில் அமெரிக்க போல்டன் அணியின் வீரரும் 5வது தடவையாகவும் இப் போட்டியின் கிரீடத்தைச் சூடுவார் என்று எதிர்பார்க்கப்படுபவ



ருமான லான்ஸ் ஆம்ஸ்ரோங் வெற்றிபெற்று முத்திரை பதித்தார்.

32வயதான ஆம்ஸ்ரோங் லான் மெஸானுக்கும் பிளேட்டோ 4 பெயிலிக்குமிடையிலான 205.5கிலோமீற்றர் தூரத்தை 6மணி 4நிமிடம் 38விநாடிகளில் ஓடிமுடித்து வெற்றிபெற்றார். இதுவரைகாலமும் அவர் கலந்துகொண்ட போட்டிகளில் அவர் பெற்ற 17சுற்று வெற்றி இதுவாகும்.


ஏழுமலைத் தொடர்களுக்கூடாக நடைபெற்ற இப் போட்டியில் மலைகளின் அரசன் எனப்படும் றிச்சட் விரன்கோ, ஜேர்மனியின் ஜான் உல்றிச், பிரெஞ்சு மக்களின் அன்புக்குரிய மேயோ ஆகியோர் மிகவும் பின்தள்ளப்பட்டனர். ஆம்ஸ்ரோங்கின் பிரதான போட்டியாளரான உல்ரிச் 66விநாடிகள் பின்நிலையிலிருந்து 6 நிமிடங்கள் பின்னிலையடைந்து வெற்றிவாய்ப்பை இழந்துள்ளார். பொதுப்பார்வையில் 2வது இடத்திலிருக்கும் ஆம்ஸ்ரோங் அடுத்து வரவிருக்கும் அல்ப்ஸ் மலைத்தொடர்போட்டியில் முன்னிலை வகிப்பார் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (யே)

## ஆசியக் கிண்ணம் 2004

# பாகிஸ்தான் அணி 343-5
# ஹொங் கொங் அணி 25-1

நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் பாகிஸ்தனுக்கும் ஹொங்கொங் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியொன்றில் பலம்வாய்ந்த பாகிஸ்தான் அணி இளம் ஹொங்கொங் அணியைப் பந்தாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது 50ஓவர்களில் 5 விக்கெற்றை இழந்து 343ஓட்டங்களை அவ்வணி பெற்றது.



சொஹைப் மலிக்கும் யூனிஸ்கானும் செஞ்சரிகளைப் போட்டனர். யூனிஸ் 122பந்துகளைச் சந்தித்து 144ஓட்டங்களை எடுத்தார். இது அவரது முதலாவது ஒருநாள் சதமாகும். மலிக் 110பந்துகளை எதிர் கொண்டு 118ஓட்டங்களை எடுத்தார்.

ஹொங்கொங் அணி சார்பாக காலிட்கான் 62 ஓட்டங்களுக்கு

## ஆசிய கால்பந்து போட்டி பெய்ஜிங்கில் ஆரம்பமானது

சீனத் தலைநகரில் ஆசியக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் கோலாகலமாக நேற்றுத் துவங்கியது. பதினாறு அணிகள் பங்கேறகும் ஆசியக்கோப்பை கால்பந்துப் போட்டிகள் சீனத் தலைநகர் பீஜிங் நகரில் கோலாகலமாக நேற்றுத் துவங்கியது. கண்கவரும் வகையில் துவக்க விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன.



பின்னர் நடந்த துவக்க ஆட்டததில், நடத்தும் நாடான சீனா, கால்பந்தில் அதிக அனுபவமற்ற பஹ்ரைன் அணிகள் மோதின. குட்டி அணியாக இருந்தாலும் சிறப்பான ஆட்டம் வெளிப்படுத்தியது பஹ்ரைன். 41வது நிமிடத்தில் அந்த அணியின் முக்மது ஹுபைல் முதல் கோல் அடித்தார். சுதாரித்துக்கொண்ட சீனா, வேகம் கூட்டியது. அந்த அணியின் ஜெங் ஜீ 58வது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை கோலாக்கினார்.

60வது நிமிடத்தில் லீ ஜின்யூ இரணடாவது கோல் அடித்து முன்னிலை ஏற்படுத்திக்கொடுத்தார்.

ஆனால், சீனாவின் வெற்றியை, ஆட்டம்முடிய சில நிமிடங்களே இருக்கும்போது பஹ்ரைன் வீரர் ஹுசைன் அலி அகமது ஒருகோல் அடித்துப் பறித்தார். 2-2என்ற கோல் கணக்கில் இந்தப் போட்டிப் ரோவில் முடிந்தது. (யே)

## 200மீற்றர் போட்டியிலிருந்து ஜோன்ஸ் வெளியேறினார்


தற்பொழுது நடைபெற்றுவரும் அமெரிக்க, ஒலிம்பிக் தெரிவுப்போட்டிகளின் 200மீற்றர் போட்டியில் பங்குபற்றுவதிலிருந்து மேரியன் ஜோன்ஸ் வெளி யேறியதாக அறிவிக்கப்படுகிறது.




தான் மிகவும் களைப்படைவதாகவும், 100வீத தகுதியில்லாமல் ஒரு போட்டியில் பங்கெடுபபதைத் தான் ஒரு பொழுதும் விரும்புவதில்லையென் றும் தெரிவித்துள்ள ஜோன்ஸ, இதன் காரணமாகவேதான் 200 மீற்றர் போட்டித் தெரிவில் பங்கெடுக்க வில்லை என்று தெரிவித்தார். 5பேர் பங்கெடுத்த 100மீற்றர் தெரிவில் கடைசியாக வந்த அவர் அப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தபோது நீளம்பாய்தலில் முதலிடம் பெற்றார்.

கடந்த வருடம் ஒரு ஆண்குழந்தைக்குத் தாயான அவரது சாதனைகள் இந்த வருடம் அவ்வளவு தரம்வாய்ந்ததாக அமையவில்லை. கடந்த சிட்னி ஒலிம்பிக்கில் அவர் ஐந்து பதக்கங்களை வென்றார். தற்பொழுது ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச்சாட்டை எதிர்நோக்கும் அவர் அதனை வன்மையாக மறுத்துவிடுகிறார். (யே)

# விளையாட்டுச் செய்திகள்



அணியைப் பந்தாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது 50ஓவர்களில் 5 விக்கெற்றை இழந்து 343ஓட்டங்களை அவ்வணி பெற்றது.

சொஹைப் மலிக்கும் யூனிஸ்கானும் செஞ்சரிகளைப் போட்டனர். யூனிஸ் 122பந்துகளைச் சந்தித்து 144ஓட்டங்களை எடுத்தார். இது அவரது முதலாவது ஒருநாள் சதமாகும். மலிக் 110பந்துகளை எதிர் கொண்டு 118ஓட்டங்களை எடுத்தார்.

ஹொங்கொங் அணி சார்பாக காலிட்கான் 62 ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணியினர் ஒரு விக்கெற் இழப்பிற்கு 10ஓவர்களில் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

நஸீர் ஹமீட் ஆட்டம் எதுவும் பெறாமல் மொஹமட் சமியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். ஸ்மார்ட் 12 ஓட்டங்களுடனும், ஃபிரெஞ் ஒரு ஓட்டத்துடனும் இச் செய்தி அச்சுக்குப் போகும்போது களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர். உதிரிகளாகப் 12 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன. (யே)



# செய்திகள்

ATHENS 2004

XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 25 தினங்கள்

## மேஜர் முரளி நினைவு

# உதை பந்தாட்ட இறுதியில் சகல பிரிவிலும் யாழ். அணிகள்

கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் நடைபெற்றுவந்த மேஜர் முரளியின் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இச் சுற்றுப்போட்டியின் 14,17,19வயதுக்கான ஆண்கள் பிரிவிலும் பெண்கள் அணி கலந்துகொள்ளும் ஒரே பிரிவான 19வயதிலும் யாழ்.மாவட்ட அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தன.

நேற்றுக்காலை இடம்பெற்ற 14வது அரையிறுதிப் போட்டிகளில் சுவிஸ் அணி அம்பாறை அணியை 4-0எனும் கோல்கணக்கில் தோற்கடித்தது. யாழ்.அணி கிளிநொச்சி அணியை 2-1எனும் கோல்க் கணக்கில் தோற்கடித்தது.

### சுவிஸ் அணி அன்பளிப்பு

இப் போட்டித் தொடரில் காலணிகள் இல்லாமல் விளையாடிய முல்லைத்தீவு அணியினருக்குச் சுவிற்சர்லாந்தில் இருந்துவந்து பங்குபற்றும் அணியினர் ஒருதொகை விளையாட்டு உபகரணங்களையும், நிதியையும் அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (யே)

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி IV

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் ஷைனாஸ் மத்திய ஸ்ரேடியம்

எதென்ஸின் ஒலிம்பிக் கிராமத்திற்கு வடகிழக்கே சுமார் 47கிலோ மீற்றர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ள ஷைனாஸ் மத்திய ஸ்ரேடியத்திலே கனோயிங், ரோயிஸ் என்றழைக்கப்படும் துடுப்புப்படகுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.



14ஆயிரம் பார்வையாளர்கள் அமர்நது பார்க்கக் கூடிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்ரேடியத்தில் 800போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். ஓகஸ்ட் 15ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதிவரை போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. பரா ஒலிம்பிக் நிகழ்வுகள் எவையும் இங்கு இடம்பெறமாட்டா.

2,250மீற்றர் நீளமான பிரதான நதியில் உருவாக்கப்பட்டிருக்கும் இப் போட்டித்துறை மக்காரியா நீர் வீழ்ச்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் மிகுந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் ஒருவாறு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளமை பலருக்கும் ஆறுதலையும், உற்சாகத்தையும் வழங்கியுள்ளது. (யே)

# தென் கொரியாவில் பணிபுரிய இலங்கையர்கள் நாட்டம்

(கொழும்பு)

தென்கொரிய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அபரிவிதமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் அறிவித்துள்ளார்.

தென்கொரியாவில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும், 24 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் விண்ணப்பித்திருக்கின்றார்கள் எனவும், இதனால், விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையொன்றை நடாத்தி தகுதியானவர்களைத் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (18,10)

# நேர்முகத் தேர்வில் தெரிவான பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நியமனங்கள் ஓகஸ்டில் வழங்கப்படும்

(கொழும்பு)

வேலைவாய்ப்பு வழங்குவ தற்கு பட்டதாரிகளை தெரிவு செய்யும் நடைமுறை தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாக நிதி அமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.


திறைசேரி முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான விண்ணப்பங்களை பிரித்தெடுக்கும் பணியில் தகுதியானவர்களைத் தெரிந்தெடுக்கும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விண்ணப்பங்கள்ளைத் தெரிவு செய்யும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டதும்.கணனிமயப்படுத்தப்படும் பொருட்டு அவை கொழும்பு பல்கலைக்கழகத் துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அதன் பின்னர் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் செயற்பாடுகள் எதிர் வ்ரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன்,5 ஆயிரம் பட்டதாரிகளுக்கு சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் படிவங்கள் அஞ்சலிடப்பட்டுள்ளதாகவும் இவ் வாரத்துக்குள் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இவற்றை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்க சேவையில், ஏற்கனவே குறைந்த தரங்களில் கடமையாற்றும் பட்டதாரிகள் சங்கம் தற்போயை பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தினால் தங்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்பது குறித்து அரசு உறுதி தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறில்லையானால்; 2 ஆயிரத்து 500 உறுப்பினர்களைக் கொண்ட தங்களின் சங்கம் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்க நேரிடும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (18,60,10)



# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் ,2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.00மணிவரை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும், பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் ICTAD கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு M-9 தரங்களையுடைய அல்லது அதற்கு மேல்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றை வரை செய்யபட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள், திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று பெறியியலாளரிடம் சமர்ப்பித்தல்வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரியகேள்வி வைப்புப்பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி,பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 2004ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள், திணைக்களம் (மாகாணம்); நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விதாரர் அல்ல்து அவரது பிரதிநிதி சமுகம் அளிக்க முடியும்.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப் படாதகேள் விவைப்புப் பணம்ரூபா |
|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை, மாவட்ட வைத்தியசாலையின் சமையலறை அபிவிருத்திவேலை. | 1,200.00 | 250.00 |
| 02. | ஊர்காவற்றுறை, மாவட்ட வைத்தியசாலையின் ஆண்கள் விடுதி திருத்த வேலை. | 1,200.00 | 250.00 |
| 03. | கைதடி,மத்திய மருந்தகத்தின் தண்ணீர்தாங்கி | | |


| | | | |
|---|---|---|---|
| 03. | கைதடி, மத்திய மருந்தகத்தின் தண்ணீர்தாங்கி அபிவிருத்தி வேலை. | 600.00 | 250.00 |
| 04. | கொக்குவில், மத்திய மருந்தகத்தின் தண்ணீர்த் தாங்கி அபிவிருத்தி வேலை. | 1,200.00 | 250.00 |
| 05. | வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையின் மகப் பேற்று மனையும், வெளிநோயாளர் பிரிவும் திருத்த வேலை. | 3,600.00 | 250.00 |
| 06. | பருத்தித்துறை, மாவட்ட வைத்தியசாலையின் வாட்டுக்கள் திருத்தவேலை. | 8,400.00 | 250.00 |
| 07. | கோப்பாய், சுற்றியல் கூறு வைத்தியசாலையின் சமையலறை அபிவிருத்தி வேலை. | 1,200.00 | 250.00 |
| 08. | அளவெட்டி, மத்திய மருந்தகமும், மகப்பேற்று மனையிலும் குடும்பநல அலுவலர் விடுதிகள் அபிவிருத்தி வேலை. | 600.00 | 250.00 |
| 09. | கொடிகாமம் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையிலும் குடும்ப நல அலுவலர் விடுதிகள் திருத்த வேலை. | 2,400.00 | 250.00 |
| 10. | வரணி, மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையிலும் பதிவு வைத்திய அதிகாரி விடுதிகள் திருத்தவேலை. | 1,800.00 | 250.00 |
| 11. | தொல்புரம் மத்திய மருந்தகத்தில் வெளிநோயாளர் பிரிவும், சிகிச்சைக் கூடமும் திருத்த வேலை. | 1,200.00 | 250.00 |

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்
அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
(மாகாணம்), கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
யாழ்ப்பாணம்.

(C/ 374)



உரும்பிராய் பர்வத வர்த்தனி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெரு விழாவன்று நடைபெற்ற தூபி அபிஷேகக் காட்சியை முதலாவது படத்திலும், வீதியுலா செல்வதற்கு ஆயத்தமாக வசந்த மண்டபத்தில் எழுந்தருளிய அம்பாளின் அழகுறு தோற்றத்தை மறு படத்திலும் காணலாம்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004


## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**சமூகக்கல்வியும் வரலாறும் I**

**மணி - 1**

ஆக்கம் :
திரு. S.தம்பையா B.A. Dip-in-Ed
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

♣ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
♣ 1 முதல் 40 வரையுள்ள ஒவ்வொருவினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியானதைத் தெரிவு செய்க.
♦ உலகப் படத்தினைப் பயன்படுத்தி 1-5 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.



(1) அமேசன் நதியைக் குறித்துக் காட்டும் எழுத்து?
1. A 2. B 3. C 4. D


(2) றொக்கிமலைத் தொடரைக் குறித்துக் காட்டும் எழுத்து யாது?
1. அ 2. ஆ 3. இ 4. ஈ

(3) புள்ளடி அடையாளங்களால் குறித்துக் காட்டும் புல் நிலம்
1. பிரேரீஸ் 2. டவுண்ஸ் 3. ஸ்ரெப்ஸ் 4. பம்பாஸ்

(4) இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்ற நகரத்தைக் குறிக்கும் எழுத்து?
1. M 2. L 3. F 4. E

(5) G என்ற எழுத்து காட்டப்படும் இடத்தில் அமைந்துள்ள கடல்
1. செங்கடல் 2. வடகடல்
3. கருங்கடல் 4. கரிபியன் கடல்

♦ **6-10' வரை உள்ள வினாக்களுக்கு இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி விடை அளிக்குக.**



(6) வரலாற்று ஏடுகளுக்கு அமைய விஜயனும் அவனது தோழரும் இலங்கையில் வந்திறங்கிய இடத்தைக் காட்டும் அம்புக்குறி
1. A 2. B 3. C 4. D

(7) X-Y கோட்டினால் காட்டப்படும் நெடுங்கோடு / நெட்டாங்கு யாது?
1. கிழக்கு நெட்டாங்கு 79°
2. கிழக்கு நெடுங்கோடு 80°
3. கிழக்கு நெடுங்கோடு 81°
4. கிழக்கு நெடுங்கோடு 82°

(8) G என்ற எழுத்துக் குறித்துக் காட்டும் மாவட்டம் யாது?
1. கம்பகஹா 2. இரத்தினபுரி
3. காலி 4. மன்னார்

(9) F என்ற எழுத்துக் குறித்துக்

2. புவிவெப்பம், இயற்கைவாயு, நீர்மின், ஞாயிற்று வெப்பம்
3. ஞாயிற்றுவலு, புவிவெப்பம், கடலலை, உயிரியல் வாயு
4. மசகு எண்ணெய், நிலக்கரி, ஞாயிற்றுவலு

(18) இலங்கை மன்னன் ஒருவன் இலங்கைக்கு வந்த அந்நிய அரசொன்றை வெளியேற்றுவதற்கு மற்றோர் அரசை அழைத்தான். இச்செயல் "இஞ்சிக்குப் பதிலாக மிளகாய் பெற்றுக் கொண்டதாகும்" என விபரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தோடு தொடர்புடைய அரசன் யார்?
1. 1ம் இராஜசிங்கன் 2. மாயாதுன்னை
3. 1ம் விமலதர்மசூரியன் 4. 2ம் இராஜசிங்கன்

(19) தெற்கு ஆசிய நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை வளர்ப்பதற்கென தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு எது?
1. ஒபெக் 2. சார்க் 3. ஆசியான் 4.கொழும்புத் திட்டம்

(20) ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக 1818ஆம் ஆண்டுக் காலத்தில் முன்னணியிலிருந்த தலைவர்களில் ஒருவர்
1. கெப்பற்றிப்பொல திசாவை 2. வீரபுரன் அப்பு
3. எகலப்பொல திசாவை 4. சுமங்கல தேரர்

(21) "சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துடையவன்" எனும் கூற்று பின்வருவனவற்றுள் எந்த நிகழ்சியோடு தொடர்புடையதாகக் கூறப்படுகின்றது?
1. 1688ஆம் ஆண்டு ஆங்கிலப்புரட்சி
2. 1917ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி
3. 1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி
4. 1776ஆம் ஆண்டு அமெரிக்க சுதந்திரப் போர்

(22) பின்வருவனவற்றுள் கோல்புறுக் சீர்திருத்தத்தில் அடங்காத விடயம் எது?
1. இராசகாரியமுறை ஒழிக்கப்பட்டது
2. சட்டவாக்கக் கழகம் தாபித்தமை
3. நிர்வாகக் குழுமுறை ஆட்சி
4. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டது

(23) 1ம் விமலதர்மசூரிய மன்னனை முதன் முதலிற் சந்தித்த ஒல்லாந்துத் தூதுவர்
1. ஜோன் பைபஸ். 2. வெஸ்டர் வோல்ட்
3. பில் போர்ஜன் 4. சீ போல்டி வாட்

(24) ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மட்டத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுவது
1. வர்த்தக நிலுவை 2. வர்த்தக விகிதம்
3. சென்மதி நிலுவை 4. பொருட்களின் அடிப்படை விலை

(25) குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றும் உறுப்பு
1. அணைக்கட்டு 2. கலிங்கறதொட்டி 3. அலைதாங்கி 4. சுருங்கை

(26) இலங்கை மக்கள் ஒரே தேர்தல் தொகுதியின் வாக்காளராகச் செயற்படும் சந்தர்ப்பம் எது?
1. உள்ளூராட்சித் தேர்தல் 2. ஜனாதிபதித் தேர்தல்
3. மாகாணசபைத் தேர்தல் 4. பாராளுமன்றத் தேர்தல்

(27) மத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை யாது?
1. 5 2. 4 3. 2 4. 3

(28) இலங்கையில் மலையக இராச்சியம் பிரித்தானியர் வசமானபோது இலங்கையில் இருந்த ஆளுநர் யார்?
1. பிரடறிக் நோத் 2. தோமஸ் மெயிற்லண்ட்
3. கோல்புறுக் 4. றொபேட் பிறவுண்றிக்

(29) புதிய கைத்தொழில் மயமாகிவரும் நாடுகளில் அடங்காதது
1. நேபாளம் 2. தென்கொரியா 3. தாய்வான் 4. சிங்கப்பூர்

(30) மானிடச் சுட்டெண் உயர்வாக உள்ள நாடுகளில் ஒன்று
1. எகிப்து 2. நோர்வே 3. அவுஸ்ரேலியா 4. இந்தியா

(31) தென்கொரியாவின் தலைநகரம் எது?
1. டோக்கியோ 2. சியோல் 3. மணிலா 4. பாங்கொக்

(32) ஐ.நாடுகள் அமையத்தில் இலங்கை சேர்ந்துகொண்ட ஆண்டு
1. 1948 2. 1972 3. 1955 4. 1960

(33) "மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சி" எனக் கூறியவர்
1. ரூசோ 2. சீலர் 3. ஆபிரகாம்லிங்கன் 4. பிளேட்டோ

(34) சர்வஜன வாக்குரிமையை இலங்கை மக்களுக்கு வழங்கிய யாப்பு
1. கோல்புறுக் 2. டொனமூர் 3. சோல்பெரி 4. மக்கலம்

(35) குடியியல் உரிமையில் அடங்காதது
1. வாழும் உரிமை
2. அரசியல் கட்சியில் சேரும் உரிமை
3. கருத்துவெளியிடும் உரிமை
4. தனியார் சுதந்திரம் பற்றிய உரிமை

(36) ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்று
1. இத்தாலி 2. நோர்வே
3. ஜேர்மனி 4. ஐக்கிய இராச்சியம்


(37) உலக போதைப்பொருள் ஒழிப்புத் தினம் கொண்டாடப்படுவது
1. ஒக்டோபர் 15 2. ஒக்டோபர் 24
3. யூன் 26 4. [illegible] 10

1. கிழக்கு நெடுங்கோடு 79°
2. கிழக்கு நெடுங்கோடு 80°
3. கிழக்கு நெடுங்கோடு 81°
4. கிழக்கு நெடுங்கோடு 82°

(8) G என்ற எழுத்துக் குறித்துக் காட்டும் மாவட்டம் யாது?
1. கம்பகஹா 2. இரத்தினபுரி
3. காலி 4. மன்னார்

(9) F என்ற எழுத்துக் குறித்துக் காட்டும்ஆரியர்களின் குடியிருப்புக் களில் ஒன்று
1. கோகன்ன 2. உருவெல
3. தீகவாவி 4. கல்யாணி

(10) E எனக் காட்டப்படும் கால்வாயின் பெயர்
1. எலஹர
2. யோதக் கால்வாய்
3. மணிமேகலைக் கால்வாய் 4.பப்பநந்தக் கால்வாய்




(11) இலங்கையின் தென்மேற்குக் கரையோரம் தீவிர கடலரிப்புக்குள்ளாகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.
1. பெரிய இராவணன் பாறை 2. காரைதீவு 3. நெடுந்தீவு 4. சீனி கமத்தீவு

(12) மகாசேனன் கட்டிய குளங்களில் ஒன்று
1. நாச்சதுவாக்குளம் 2. மகாவிலாச்சியா 3. கவுடுலு 4. அபயவாவி

(13) வைத்தியத்துறைக்குச் சேவையாற்றிய மன்னார்களின் சரியனா தொகுதி
1. முதலாம் அக்போ, துட்டகைமுனு
2. முதலாம் சேனன், ஐந்தாம் காசியப்பன்
3. முதலாம் பராக்கிரமபாகு, மகாசேனன்
4. 2ம் சேனன், வலகம்பாகு

(14) அரசமாளிகையின் உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட விசேட நிலம்
1. நிந்தகம் 2. விகாரக்காணி 3. மானிய நிலம் 4. கபாடகம்

(15) நாயக்க வம்சத்தின் இறுதி மலையக மன்னன்
1. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 2. சிறி விஜய இராஜசிங்கன்
3.. சிறி விக்கிரம இராஜசிங்கன் 4. இராஜாதிராஜசிங்கன்

(16) சூழலிலுள்ள பல்வேறு பொருட்கள் மனிதனது எந்தத் தொழிற்பாடு காரணமாக வளமாக மாற்றப்படுகின்றது?
1. வருங்கால சந்ததியினரின் பயன்பாட்டிற்கென அவற்றைப் பேணிக்காப்பது
2. அறிவையும் திறனையும் பிரயோகித்து அவற்றைப் பயன்படுத்துவது
3. பெரியளவிலான கைத்தொழிலை ஆரம்பிப்பது
4. சூழல் மாசடைவதை இயன்றளவு குறைப்பது

(17) சக்தியை உற்பத்தி செய்யும் பொருட்கனிய எண்ணெய்க்குப் பதிலாக வருங்காலத்தில் மாற்றுச் சக்தி மூலங்கள் பயன்படுத்தப்படலாம் என நம்பப்படுகின்றது. அந்தச் சக்தி மூலங்கள் எந்தத் தொகுதியில் உள்ளன.
1. நிலக்கரி, ஞாயிற்றுவலு, கடலலை, உயிரியல் வாயு

4. தனியார் சுதந்திரம் பற்றிய உரிமை

(36) ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்று
1. இத்தாலி 2. நோர்வே
3. ஜேர்மனி 4. ஐக்கிய இராட்சியம்

(37) உலக போதைப்பொருள் ஒழிப்புத் தினம் கொண்டாடப்படுவது
1. ஒக்டோபர் 15 2. ஒக்டோபர் 24
3. யூன் 26 4. டிசம்பர் 10

(38) அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் ஒத்த தன்மையுள்ள அம்சம் யாது?
1. ஆள்வீத வருமானம் 2. உயர்தொழில்நுட்பம்
3. குடித்தொகை அதிகரிப்பு வீதம் 4. குறைந்த இறப்பு வீதம்

(39) பின்வருவோருள் எவரிடம் அரசாங்க சேவையாளருக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பாக மேன்முறையீடு செய்ய முடியும்
1. நீதி அமைச்சர் 2. தேர்தல் ஆணையாளர்
3. ஒம்புட்சுமன் 4. பிரதம நீதியரசர்

(40) உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிவகை அல்லாதது?
1. உண்ணும் உணவின் கலோரியைக் குறைத்தல்
2. விளை நிலப்பரப்பளவை அதிகரித்தல்
3. ஏக்கருக்கு உள்ள விளைச்சலை அதிகரித்தல்
4. புதிய உணவு வகைகளை விருத்தி செய்தல்

**நாளை, சமூகக்கல்வியும் வரலாற்றுக்குமான பகுதி - I -இன் விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**


**க.பொ.த. (சா.த)**
**மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு

# பல்வேறு தரப்பினராலும் நிதியுதவிகள்

(சென்னை)

**கும்பகோணம் தீ விபத்தில் பலியான 80 குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் தலா 1 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படுமென்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.**

தனி விமான மூலம் கும்பகோணம் சென்ற அவர், அங்கு தீ விபத்துக்குள்ளான பள்ளிக் கூடத்தைப் பார்வையிட்டார்.

பின்னர் கும்பகோணம் அரசு மருத்துவ மனைக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்றுவருபவர்களைப் பார்த்தார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய ஜெயலலிதா, தீ விபத்தில் பலியான குழந்தைகளின் குடும்பத்தினருக்குத் தலா 1 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்குத் தலா ரூபா 25 ஆயிரமும் அரசு நிவாரண உதவியாக வழங்கும் என்றார்.

மேலும், தீ விபத்து நிகழ்ந்த பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதாகக் கூறிய முதலமைச்சர் இப் பள்ளியை ஆய்வு செய்யாத கல்வித்துறை அதிகாரிகள் 4 பேர் பணி நீக்கம் செய்யப்படுவர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இத் துயரச் சம்பவம் குறித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கும்புசாமி அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகக் குறிப்பிட்ட கருணாநிதி, சம்பவ இடத்திலிருந்து கோ.சி.மணி உள்ளிட்ட தி.மு.க.வினர் நிவாரணப் பணிகளைக் கவனித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் 90 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படுமென்றும் கருணாநிதி அறிவித்துள்ளார்.


அத்துடன், இத் தீ விபத்தில் இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தமிழ்த் திரைப்படக் கலைஞர்கள் 30 இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்குவதாக அறிவித்துள்ளனர். இத் தொகையை தமிழக முதல்வரிடம் ஓரிரு நாட்களில் அவர்கள் கையளிக்கவுள்ளனர்.

இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்குத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் 10 இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்குகிறது. தென்னிந்திய நடிகர் சங்கம் 5 இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்குகிறது.

இயக்குநரும் நடிகருமான சேரன் 3 இலட்சம் ரூபாவும் நடிகர் சூர்யா, சரத்குமார் ஆகியோர் தலா 2 இலட்சம் ரூபாவும் சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம், நடிகர் நெப்போலியன், இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரன், சத்யராஜ், கே.எஸ்.ரவிக்குமார், அர்ஜுன் ஆகியோர் தலா 1 இலட்சம் ரூபாவும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-18)



நீலகிரி மலைத் தொடர்களின் உச்சிகளைத் தொட்டு குளிரவைத்துக் கொண்டிருக்கும் மூடுபனிக்கு இடையே, பவானி ஆற்றில் இருந்து பிரிந்த ஓடை ஒன்று அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் காட்சி.




# கடந்த கால தீ விபத்துகளால் ஏற்பட்ட மரணங்கள்

(சென்னை)

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட தீ விபத்துக்களிலேயே கும்பகோணத்தில் நிகழ்ந்த தீ விபத்துச் சம்பவம் தான் மிகப் பெரியது.

2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இராமநாதபுர மாவட்டத்தில் ஓர் வாடியில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. 28 பேர் உடல் கருகிப் பிணமானார்கள்.

அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி சேலம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்து 20 பேரைப் புலி வாங்கியது.

இந்தச் சம்பவம் நடந்த ஒரே வாரத்தில் - அதாவது 2002 செப்ரெம்பர் 24 ஆம் திகதி - தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டியிலுள்ள தனியார் தீப்பெட்டித் தொழிற்சாலையில் 11பேர் உயிரிழந்த இன்னுமோர் விபத்து நேரிட்டது.

இச் சம்பவம் நிகழ்ந்து ஒரு வாரம் கழித்து 2002 ஒக்டோபர் 22 ஆம் திகதி விழுப்புரம் மாவட்டம் மதப்பப்பட்டு என்ற ஊரில் சட்ட விரோதமாக நடத்தப்பட்டபட்டாசுத் தொழிற் சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் இறந்து போயினர்.

இதை விட கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் கல்யாண மாப்பிள்ளை உட்பட 59 பேர் பலியானார்கள்.(து)

# இந்தியச் செய்திகள்

# காங். செயற் குழுவில் புதுமுகங்கள் அறிமுகம்

(சென்னை)

அகில இந்திய காங்கிரஸ் கட்சி

இணைக்க சோனியாகாந்தி உத்தரவிட்டுள்ளார்.

## பள்ளியில் தீ விபத்து சந்தேகத்தில் ஐவர் கைது

(சென்னை)

கும்பகோணம் தொடக்கப் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் பள்ளி நிர்வாகிகள் உட்பட 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்து இடம் பெற்ற ஸ்ரீ கிருஷ்ணா உதவிபெறும் தொடக்கப் பள்ளியின் நிர்வாகி புலவர் ரா.பழனிச்சாமி, பள்ளியின் மேலாளர் எஸ். சரஸ்வதி, பள்ளியின் முதல்வர் வி.சாந்தலெட்சுமி



# புதுமுகங்கள் அறிமுகம்

(சென்னை)
அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவில் பலவேறு புதியவர்களை கட்சித் தலைவர் சோனியாகாந்தி சேர்த்துள்ளார்.

கட்சியின் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் அமைப்பான இக்குழுவில், இளைய தலைமுறைகளான ரமேஷ் சென்னிதலா, முகுல் வாசினிக், மனீஷ் திவாரி, ஹரீஷ் பிரசாத் உள்ளிட்டோரை இணைக்க சோனியாகாந்தி உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் தவிர, பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் ஷிவ் ராஜ் பட்டீல், ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் அஷோக் கெலாட், மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் திக் விஜய் சிங் உள்ளிட்டோரும் செயற்குழு உறுப் பினர்களாகச் சேர்க்கப்பட்டுளளனர். (18)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்து இடம் பெற்ற ஸ்ரீ கிருஷ்ணா உதவிபெறும் தொடக்கப் பள்ளியின் நிர்வாகி புலவர் ரா.பழனிச்சாமி, பள்ளியின் மேலாளர் எஸ். சரஸ்வதி, பள்ளியின் முதல்வர் வி.சாந்தலெட்சுமி ஆகியோருடன் சத்துணவு தயாரிப்பாளர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கவனக்குறைவினால் ஏற்படுத்தப்பட்ட தீ விபத்தையடுத்தே உரிழப்பு ஏற்பட்டதாக இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (18)



ஞானஇரத யாத்திரைத் தொடக்க விழாவில் அருளாசி வழங்குகிறார் திருவண்ணாமலை ரமணாலயத் தலைவர் ரமண சுவாமிகள.



புதுடில்லியில் நேற்று முன்தினம் திட்ட கமிஷன் துணைத் தலைவராக மாண்டேக் சிங் அலுவாலியாவுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார் பிரதமர் மன்மோகன் சிங்.

# ஆந்திர முதல்வரின் சகோதரர் அரசியலில் இருந்து ஓய்வு !

(ஹைதராபாத்)
அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாக ஆந்திர மாநில முதல்வர் ராஜசேகர ரெட்டியின் சகோதரரும் கடப்பா லோக்சபா தொகுதி எம்பியுமான ஒய்எஸ் விவேகானந்த ரெட்டி அறிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்,

கடந்த சில வருடங்களாகவே அரசியலில் இருந்து ஓய்வு பெற முயற்சி செய்து வந்தேன். ஆனால், வளர்ச்சிப் பணிகள் ஏதும் இல்லாத கடப்பா மாவட்டத்தைக் கருத்தில் கொண்டும், அங்குள்ள மக்களின் விருப்பத்தாலும் எனது ஓய்வு முடிவை அறிவிக்கமுடியவில்லை.

ஆனால், தற்போது எனது சகோதரர் கைகளில் மாநிலம் பாதுகாப்பாக இருப்பதால் ஓய்வு பெறும் முடிவை எடுத்துள்ளேன். மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்காக, இத்தனை வருடங்களாக எனது சகோதரருக்கு உதவியாக இருந்தேன். இனி அது அவசியமில்லை. அமெரிக்கா சென்று அங்கு இருக்கும் எனது மகள் மற்றும் குடும்பத்தினரோடு இருக்கப் போகிறேன்.

கடப்பா தொகுதி எம்.பி. பதவியை நான் இராஜினாமாச் செய்த பின்னர், அத்தொகுதியில் முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜகன்மோகன ரெட்டியை நிறுத்தினால் மகிழ்ச்சி அடைவேன். எதுவாயினும் கடப்பா தொகுதியில் நிச்சயம் வலுவான வேட்பாளரே நிற்பார் என்று உறுதியளிக்கிறேன் எனக் குறிப்பிட்டார். (18)

## டென்மார்க் செ.சங்க உதவியுடன்
## மருதங்கேணியில் சுகாதார சேவையை
## மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமங்களின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இச் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கமாக முதற்கட்டமாகக் கலந்துரையாடல் ஒன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இதில் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள், யாழ்.செஞ்சிலுவைச் சங்க அதிகாரி மற்றும் அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இக் காலந்துரையாடலின் இறுதியில் கிராமங்கள் தோறும் சுகாதாரப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதெனவும், நடமாடும் வைத்திய சேவைகளை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (18,35)

## வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் நிலவும்
## ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையை
## நீக்குவதற்கு ஜி.ரி.சற் நடவடிக்கை

(சாவகச்சேரி)

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக் குறைகளை நீக்குவதற்கு ஜி.ரி.சற் நிறுவனம் முன்வந்துள்ளது.

வடக்கு' - கிழக்கில் உள்ள அநேகமான பாடசாலைகளில் ஆங்கிலப்பாட ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவிவருகிறது. இதனால், மாணவர்கள் எதிர்கொள்ளும் பின்னடைவுகளைக கவனத்தில் கொண்டே ஜி.ரி.சற் நிறுவனம் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதனடிப்படையில், தற்பொழுது ஆசிரியர் சேவையில் உள்ள ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைத் தெரிவு செய்து ஆங்கிலப்பாட போதனைக்குரிய மேலாதிக விஷேட பயிற்சிகளை இந் நிறுவனம் வழங்கவுள்ளது.

(18,4,29)

## மனித உரிமைகள் அமைப்பு
## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை
## ரத்துச் செய்யத் தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இரத்துச் செய்வதற்கான முயற்சிகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் மற்றும் மனித உரிமைகள் அபிவிருத்திக்கான அமைப்பும் மேற்கொண்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு இலங்கையில் தற்காலிகமாக அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் 1982 முதல் நிரந்தரமாக்கப்பட்டது.

இதனடிப்படையில் கடந்த 25 வருடங்களாக நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதனால் இச்சட்டத்தின் கீழ் நாட்டில் பல்வேறு மனித உரிமை மீறல்களும் பலதரப்பினராலும் புரியப்பட்டு வந்தன.

இதனைக் கவனத்தில் கொண்டே இதனை இரத்துச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இதில் மனித உரிமைகள் மற்றும் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(4)

## ஜனாதிபதியைக் கொல்லமுயன்ற

# முல்லையில் 70 குடும்பங்கள் பெரும் அவல நிலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கை கடற்படை மற்றும் வான் படையின் தாக்குதல்களினால் உயிரிழந்த 70 பேரின் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளன.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் 1993 ஆம் ஆண்டு முதல் போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட காலம் வரையான காலப் பகுதியில் கடற்படையாலும், வான் படையாலும் மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 70 பேர் வரையில் உயிரிழந்துள்ளதுடன் 216 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீட்டு நிவாரணங்கள் எதுவும் அரசினால் வழங்கப் படவில்லை. படுகாயம் அடைந்தவர்களில் பெருமளவானவர்கள் ஊனமுற்றவர்களாகத் தொழில் முயற்சிகளில் முழுமையாக ஈடுபடமுடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (18,121)

## இலங்கை அகதிகள் விடயத்தில் சம்பந்தப்பட்டோர் அசண்டையீனம்

(மன்னார்)

இந்தியாவில் இருந்து இலங்கை வர விரும்பும் இலங்கை அகதிகள் தொடர்பில் இரண்டு நாட்டு அரசாங்கங்களும் கண்மூடித்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதாக மன்னார் பதில் நீதவான் எம்.பி.பாரூக் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலை தொடர்ந்தால் இந்தியாவில் இருந்து வரும் இலங்கை அகதிகள் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாக வேண்டியேற்படும். எனவே, இரண்டு அரசாங்களும் உரிய முனைப்பை மேற்கொண்டு இலங்கை அகதிகளை நாட்டுக்குத் திருப்பியழைக்க வழிவகுக்க வேண்டும் எனவும் நீதவான் கேட்டுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி தலைமன்னார் ஊடாக இலங்கைக்கு வந்த 34 அகதிகள் தம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட வேளையிலேயே, நீதவான் இந்த விமர்சனத்தை வெளியிட்டார்.

(18,121)






உள்ளூராட்சி வாரத்தையொட்டி கொட்டடி சனசமூக நிலையச் சூழலில் யாழ்.மாநகர சபையினரும் அப்பகுதி மக்களும் இணைந்து நேற்றைய தினம் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

## நற்கருணைப் பெருவிழா

(கொழும்புத்துறை)

குருநகர் புனித யாகப்பர் ஆலய நவநாள் கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் மாலை 5.30 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 24 திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் காலை 7.00 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌவுந்தரநாயகம் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு புனித யாகப்பர் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது. (18,51)

## வருடாந்த உற்சவம்

(பொன்னாலை)

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை வீரமாபிடாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆலயத் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-49)

மாக்கப்பட்டது.

இதனடிப்படையில் கடந்த 25 வருடங்களாக நாட்டில் பயங்கர வாதத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதனால் இச்சட்டத்தின் கீழ் உரிமைகள் மற்றும் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர். (4)

# ஜனாதிபதியைக் கொல்லமுயன்ற தமிழ் இளைஞர்கள் இருவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவைக் கொலை செய்வதற் குச் சூழ்ச்சி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

முகத்துவாரம் பகுதியில் வைத்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கைதாகிய இரண்டு இளைஞர் களில் முதலாவது சந்தேக நபர் இரண்டு நாட்களுக்கு முன்னர் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டிருந்தார்.

இவரை விசாரணைக்கு உட் படுத்தியபோது வழங்கிய தகவ லின் அடிப்படையிலேயே இரண் டாவது சந்தேக நபர் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸ் தக வல் தெரிவிக்கின்றன. (18)

# பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த கருத்தரங்கு

(திருநெல்வேலி)

கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையு டன், 'பெண்களுக்கு எதிரான வன் முறைகளும், சட்டம் சம்பந்தமான அறிவும்' தொடர்பான கருத்தரங் கொன்று கடந்த வெள்ளி, சனிக் கிழமைகளில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

காலை 8.30 மணிமுதல் பி.ப.4.30 மணி வரை கொழும்பு மனித உரிமைகள் அலுவலகத் தின் பெண்கள் செயற்றிட்ட இணைப்பாளர் திலகா சேவியர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் மனித உரிமைகள் பற்றிய அறிமுகவுரையை சட்டத் தரணி கே.தயாபரனும், சட்ட வைத் திய நடைமுறைகள் குறித்து டாக் டர் சந்திரபாலனும், கருத்துரை வழங்கினர். அத்துடன், தகவல் பரி மாற்றங்கள் குறித்தும் பொலிஸாரி னால் விளக்கமளிக்கப்பட்டது.(உ-)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி கொட்டடி சனசமூக நிலையச் சூழலில் யாழ்.மாநகர சபையினரும் அப்பகுதி மக்களும் இணைந்து நேற்றைய தினம் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

# திலக்கின் பதவி விலகலையடுத்து அவரது ஆதரவாளர்கள் பலர் கட்சியிலிருந்து இடைவிலகல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடன் அதிருப்தியடைந்த நிலையில் அதன் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ண கட்சியிலிருந்து விலகிச் சென்றதையடுத்து. மேலும் பல ஆதரவாளர்களும் அக்கட்சியிலிருந்து விலகிச் சென் றுள்ளனர்.

அத்துடன், இதுவரை காலமும் கட்சிக் காரியாலயமாகப் பயன் படுத்தப்பட்டு வந்த தனது வீட்டி லிருந்து ஜாதிக ஹெல உறுமய வினர் விலகிச் செல்ல வேண்டும் எனவும் திலக் கருணாரட்ண கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சியில் உள்ள சாதாரண மக்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வகையில், பௌத்த பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கள் தமது பதவிகளை இராஜினா மாச் செய்ய வேண்டுமென திலக் கருணாரட்ணாவால் விடுக்கப்பட் வேண்டுகோள், ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப் பீடத் தால் நிராகரிக்கப்பட்டமை காரண மாகவே கட்சியின் சகல பொறுப் புக்களிலிருந்தும் திலக் கருணா ரட்ண விலகிச் செல்வதென தீர் மானிக்கப்பட்டதாகத் தெரியவரு கிறது.

இதேவேளை, கட்சியில் அங் கம் வகிக்கும் சாதாரண மக்களை நாடாளுமன்றத்துக்கு அனுமதிக் கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பிக்கு கள் ஒருபோதும் இராஜினாமாச் செய்யமாட்டார்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மலோக தேரர் தெரி வித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவைப் பிரதிநிதித் துப்படுத்துபவர்களாகப் பிக்குகள் இருக்கின்றவரை மட்டுமே கட்சி யினால் அரசியலில் நீண்ட தூரம் பயணிக்க முடியுமெனவும், கட்சி யில் அங்கம் வகிக்கும் சாதாரண மக்கள் கட்சியின் வளர்ச்சிக்கான ஆலோசகர்களாக மட்டுமே இருக்க முடியுமெனவும் உடுவே தம்மலோக தேரர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (18-121)

ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆலயத் தேர், தீர்த்த உற்ச வங்கள் முறையே எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள் ளன. (உ-49)

# விலை நிர்ணயக் குழுக் கூட்டம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் இன்று பி.ப.2.30 மணிக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்தில் கட்டட உதி ரிப்பாகங்களான கல், மணல், இரும்பு, மரம் ஆகியவற்றின் விலை நிர்ணயம், போக்குவரத்துக் கூலி என்பன குறித்தும் ஆராயப்படவுள்ள தாகத் தெரியவருகின்றது. (உ-49)

# மருந்தகம் புனரமைப்பு

(பொன்னாலை)

வடமராட்சி கிழக்கு - முள்ளி யான் மருந்தகத்தைப் புனரமைப் பதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் மேற் கொண்டு வருகின்றது.

முன்னர் நித்திய வெட்டையில் அமைந்திருந்த இம் மருந்தகம் கடந்தகாலப் போர் காரணமாக முற்றாகச் சிதைந்து போயிருந்தது.

இம் மருந்தகத்தை மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்குமாறு முள்ளியான் பகுதி மக்கள் தொடர்ச்சியான கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக் கது. (உ-49)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



விவாதஅரங்கு - 4

# சமூக, கலாசாரப் பிறழ்வுக்கு காரணமாக அமைபவர்கள் தற்கால யுவதிகளே!

விவாதம் - 1

**சமூக கலாசாரப் பிறழ்வுக்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே! என்ற விவாத அரங்கிற்கு யுவதிகளே காரணம் எனத் தன் வாதத்தினை முன் வைக்கிறார் நீர்வைமணி**

ஒரு சமூகத்தின் கலாசாரப் பிறழ்விற்குப் பக்கபல மாக அமைபவர்கள் இளம் சமூகத்தினரே. எப்பொழு தும் எதிர்கால வளர்ச்சியும் நலமும் கட்டிக்காக்கும் பாரிய பொறுப்புக்கு உரியவர்கள் வளரும் இளைஞர்களும்- யுவதிகளுமே என்பதிற் சந்தேக மில்லை. இது ஆண்கட்கு மட்டுமோ அல்லது பெண்கட்கு மட்டுமோ உரியதல்ல.

எனினும் கலாசாரச் சீரழிவுகட்கும், அதனால் ஏற் படும் தாக்கங்கட்கும் இளைஞர்களை விட யுவதிகளே பெரிதும் க்ாரணகர்த் தாக்களாக விருப்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் பாரிய பொறுப்பாகவுள்ளது.

உலகளாகிய ரீதியிற் தொன்றுதொட்டு இன்றும் தமிழ்ப் பெண்மைக்குத் தனித்துவமான பெருமையும், மதிப்பும் இருந்து வருகின்றது.

த்னித்துவத்திறகும், பெருமைக்குமுரிய எமது சமூகத்தில் உள்ள இளம்யுவதிகள் அந்நிய நாகரிக, கலா சாரப்பண்பாட்டு மோகங்களாற் தம் உடை, நடை பாவ னைகளையெல்லாம் மாற்றி தமிழ்ப் பெண்மைக்குரிய தனித்துவச் சிறப்பைக் கீழ்மைப்படுத்துகின்றனர். இயற்கை நியதியில் ஒரு ஆண்வழிதவறினாற் சமூ கம் அதனைப் பெரிதுபடுத்துவதில்லை. ஆனால் ·பெண் வழிதவறினாற் தன் சமூகத்திலிருந்து ஒதுக் கப்பட்டுவிடுகின்றாள்.

யார் செய்தாலும் குற்றம் குற்றமேதான்! என நாம் வாதாடினாலும் பெண்மைக்குரிய தனித்துவம் அவர்களை வேறுபட்ட கண்ணோட்டமாகவே கவனிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு இல்லத்தை, அதில் வதியும் குடும்பத்தை , பிள் ளைகளை வழிநடத்துபவள் இல்லாள் என்பதும், அவ ளுக்குப் பக்கபலமாக உதவுபவனே இல்லான், என்பதும் எமது பாரம்பரியமான அமைவாகும். இதனாலே தான் 'இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை' என்றனர் ஆன்றோர்.

மேலும்'மங்கையராகப் பிறப் பதற்கே நல்ல மாதவம் செய் திடவேண்டும் பங்கயற்கைநலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் தழைக்குமம்மா? எனப் பாரதி பாடியிருப்ப தும் எம்மங்கையரின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டு வதாயுள்ளது.

ஒருசபையிலே, மக்கள் கூடும் இடங்களிலே எமது யுவதிகள் எமது கலாசாரப் பண்பாடுகளுக்கு அமைய உடையணிந்து, பக்குவமாக வரும் பொழுது தம்மை யறியாமலேயே பிறர் அவர்கட்கு மரியாதையும், மதிப் பும் கொடுப்பதனையும்,

நாகரிக உடைநடையுடன் வரும் பொழுது கேவலமான முறையில் மக்கள் வெட்கத்திற்கும் அஞ்சாது யுவதி களைப் பார்ப்பதும் பரிகாசம் செய்வதும் அன்றாட வாழ்க்கையில் நாளும் நாம் காணவும், கேட்கவும் முடிகிறது. எனவே யுவதிகள் தம் மானம், மரியாதையைக் காப்பாற்றும் விதமாக நடப்பதன் மூலம் தமது சமூ கத்தின் .நலனையே காப்பாற்றி விடுவார்கள்.

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமமாக நடக்கவேண் டும் என்பது ஒருவிதமான பசப்புவார்த்தை யேயல் லாமல், முற்றுமுழுதாக ஏற்கக்கூடியதல்ல. ஒருவரை ஒருவா மதித்து நடக்க வேண்டும். கல்வி, தொழில், வேலை வாய்ப்புப் போன்ற வழிகளில் ஒருவரோடொருவர் இணைந்து கலந்தா லோசித்து செயற்படவேண்டும். அன்றி ஆண்களைப்போல் பெண் களும் எல்லா விதத் திலும் வாழ முற்படுவதாயின் அதுதான் கலாசாரப் பிறழ்விற்கு வழிவகுப்பதாய் அமையும்.

**-நீர்வைவ மணி-**

இன்றைய சமூக, கலாசாரப் பிறழ்வுகள் இன்றைய யுவதிகளின் சீர்கேடான செயற்பாடுகளால் தான் அதி கமாகப் பரவுகின்றன.

தெல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, குறுந் தொகை போன்ற பண்டைய தமிழ் நூல் களிற் தமிழ் பெண்மையும், அவர் வீரத்தையும் சிறப்புக்களையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளனர். இன்றைய யுவதிகள் அவற்றை நன்கு படித்தார்கள் ஆயின் எமது சமூகத்தின் கலாசார சீரழிவுகளுக்குத் தம்மை ஆளாக்காமற் தலை நிமிர்ந்து வாழமுடியும்.

எனவே தமிழ்ப் பெண்மையின் தனித்துவத்தைக் காப் பாற்றவும், அதனைச்சீரழிக்காது காத்திடவும் இன்றைய தமிழ் யுவதிகள் ஆவன செய்ய வேண்டும்.

---

**சமாதானத்திற்கான தீர்வுத் திட்டம்**

## மூவினத்திற்கும் திருப்தி தராவிடின் அரசைவிட்டு வெளியேறுவோம்

---

## மட்டுவில் அபிவிருத்திக்கென புதிய அமைப்பு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கிராமப் பகுதிக ளைப் புனரமைப்புச் செய்வதற்

இவ் அமைப்பின் தலைவ ராக டாக்டர் கே.எட்வேட், உப தலைவராக ஆசிரியர் க. அருந்த

# அரசைவிட்டு வெளியேறுவோம்

## பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாளை கூடவுள்ள நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் என கிழக்கு மாகாணக் கட்டமைப்பு பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

அரசாங்கம் தமது நாடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் மூவரும் உதவுவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத் துவம் தொடந்தும் ஐக்கிய தேசிய கட்சிக்குச் சார்பாக நடந்து கொள்ளும் கட்சியாகவே செயற்பட்டு வருகிறது. இதனால், முஸ்லிம் மக்களுக்குப் பாரிய பாதிப்பு எற்பட்டு வருகிறது.

நாட்டில் சமாதானமானது மூன்று இனங்களுக்கும் திருப்தி தரககூடிய வகையிலேயே அமைய வேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கரிசனையாக இருக்கிறார். எனவே தான் சமாதானப் பேச்சுவார்த்தையை எந்த இடத்தில் இருந்து ஆரம்பிப்பது என்பதில் சற்று தாமத நிலை ஏற்படடுள்ளது.

சமாதானம் மூவினத்துக்கும் திருப்தியாக அமைய வேண்டும் என்பதற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நாம் ஜனாதிபதி எமக்குத் துரோகமிழைத்தால், உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் எனத் தெரிவித்தார். (18,121)

# மருத்துவர்களின் போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் கடந்த 3 தினங்களாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் மகிந்த லியனகே அறிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சருடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தமது கோரிக்கைகளுக்குச் சுகாதார அமைச்சர் சாதகமான பதிலைத தந்துள்ளதினாலேயே தாம் போராட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார். (18,10,8)

# பதிவு செய்யக் கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஜே/62 கிராம சேவகர் பிரிவில் இதுவரை பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளாமல் உள்ள 50 வயதிற்குட்பட்ட அனைவரையும் உடனடியாக தங்கள் பெயர் விபரங்களை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கிராம சேவகர் எஸ்.தேவராணி கேட்டுள்ளார். (18,51)

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கிராமப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமென 'மட்டுவில் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம்' என்ற பெயரில் புதிய அமைப்பொன்று நேற்று முன்தினம் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் தலைவராக டாக்டர் கே.எட்வேட், உப தலைவராக ஆசிரியர் க. அருந்தவராசா, செயலாளராக க.சிவராசா, உபசெயலாளராக நா.சிவபாதம், பொருளாளராக ஆசிரியை திருமதி பவானி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (18,16)


**விவாத அரங்கு -4**

**விடயம்**

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

### மாலுமியற்ற மரக்கலம்

ஒரு கப்பல் கடலில் போய்க்கொண்டிருக்கின்றது. புயல், சூறாவளி அவை பெரிது பெரிதாக மிக உயர உயரமாக உண்டாகிறது. கடுமையான காற்றிலும் வேகமான அலைகளில் சிக்கி அந்தக் கப்பல் தடுமாறுகிறது. திசைமாறி எந்தப்பக்கம் போய்க் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை.

அந்தக் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்த மாலுமி மிகவும் சாமர்த்தியமாகச் செயற்பட்டார். தனது அறிவாற்றலையும், திறமையும் முழுதாகப் பயன்படுத்தினார். அந்தக் கப்பலை கட்டுப்படுத்தினார். மெதுவாக அந்தச் சூறாவளியிலிருந்து கப்பலைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்.

மாலுமி என்ற ஒருவர் இருந்ததனால் தான் அந்த மரக்கலம் காப்பாற்றப்பட்டது. மாலுமி என்ற ஒருவர் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கப்பலின் கதி என்னவாகியிருக்கும்? யோசித்துப்பாருங்கள். ஒருகோபக் காரனின் நிலையும் அப்படித்தானாம். "கோபக்காரன் என்பவன் மாலுமியில்லாத மரக்கலம்" என்கிறார் நபிகள் நாயகம். கொந்தளிக்கும் கடலில் கொடுமையான அலைகளின் உச்சியில் அல்லல்படும் மரக்கலத்தை விட மோசமானது கோபக்காரனின் நிலமை என்பது அவரது கருத்து.

அதுபோலவே இதுவும் என்று கூறவில்லை. அதை விடமோசம் இது என்கிறார் ஏன் தெரியுமா? ஒருகப்பல் கடலில் தடுமாறினால் அதைச் சரிப் படுத்த மாலுமி இருக்கிறார். அவர் தனது சாமர்த்தியத்தினால் அதைக் கட்டுப்படுத்தி சரியான வழிக்குக் கொண்டுவந்து விடுவார். ஆனால் கோபக்காரனுடைய நிலை அப்படி இல்லை என்றார் நபிகள் நாயகம்.

மனித மனம் ஒரு மரக்கலம். அறிவு அதிலுள்ள ஒரு மாலுமி. மாலுமி மரக்கலத்தைச்செலுத்துகிறான். அவனுக்குக் கட்டுப்பட்டு அது ஓடுகிறது. ஆனால் கோவக்காரன் என்ற மனிதனிடம் அறிவு என்ற மாலுமி சரியாக வேலை செய்யமாட்டார். ஏனென்றால் கோபம் அந்த மாலுமியின் கண்களைக் கட்டிவிடும். காதுகளைக் கேட்காமல் செய்துவிடும். கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு கப்பலைச் செலுத்துஎன்றால் எப்படி? அதனால் கோபக்காரன் மாலுமியில்லாத மரக்கலம். இடி மின்னலில் மாட்டிக் கொண்டு சிரமப்படும் கப்பல் மாதிரி கஷ்டப்படுகிறான்.

பெரியவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் உனக்குக் கெடுதல் செய்தவனுக்கும் நீ நன்மையே செய். எவருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாதே பரம எதிரிக்கும் நீ நன்மை செய்ய ஆரம்பித்தால் உனது துயநிலையைப் பார்த்து விட்டு அவனும் உனக்கு நெருக்கமான நண்பன் ஆகிவிடுவான். இது தான் பெரியோர் நமக்குச் சொல்லியிருப்பது.

செல்வந்தர் ஒருவரிடம் ஒருசிறுவன் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தான். பெரியவர் அவனைக் கூப்பிட்டு "நீநேரே போய் ஒரு ஆட்டில் உள்ளமிக நல்ல பகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டுவா" என்றார். இவன் போனான். ஒரு ஆட்டின் உடம்பில் இருந்த நாக்கு, இதயம் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். பெரியவர் அவற்றை வாங்கிக் கொண்டு சொன்னார்" இப்போது நீ போய் இன்னொரு ஆட்டில் உள்ள மிகவும் கெட்டபகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டுவா" என்றார். இவன் போய் எடுத்துக் கொண்டு வந்தான். இப்போது அவனது கையிலிருந்தது அதே நாக்கு இதயம் இரண்டும் தான்.

" என்ன இது இப்போதும் அதையே கொண்டு வந்திருக்கிறாய்?" என்றார் பெரியவர். இவன், சொன்னான்."ஒரு உடம்பிலுள்ள மிக நல்ல பகுதியும் இது தான். மிகக் கெட்டபகுதியும் இதுதான்." என்றான். இளம் வயதில் இப்படிப் பதில் சொன்னவர் தான் பேரறிஞர் லுக்மானுல் ஹக்கீம் அவர்கள்.

கோபப்படாமல் இருந்தால் இவையிரண்டும் நன்றாக வேலை செய்யும் கோபப் பட்டால் இரண்டும் மோசமாக வேலை செய்யும் அதைப் புரிந்து கொள்வதற் குத் தான் இன்று இந்தத் தகவல். கோபம் வந்து விட்டால் நாம் என்ன செய்கிறோம் என்று நமக்கே தெரியாது.

ஒருவர் டாக்டரிடம் அவசர அவசரமாகச் சென்றார். "டாக்டர் எனக்கு இப்போது கடுமையான கோபவெறி எனக்குக் கண்மண் புரியவில்லை. உடனே அதைக் கட்டுப் படுத்த வேண்டும். உடன் இதற்கு ஏதாவது ஒரு மருந்து தாருங்கள் பிளீஸ்" என்றார். அந்த டாக்டரும் உடனே ஒரு மருந்தைக் கொடுத்து " இதை உடனே போடுங் கள் நான் நீர் கொண்டுவருகிறேன்" என்று உள்ளே சென்றார். தண்ணீருடன் திரும்பி வந்தார். இவர் சொன்னார்."டாக்டர் நீங்கள் கொடுத்த மருந்து மிகப் பெரிதாக இருந்தது. இருந்தாலும் கஷ்டப்பட்டு விழுங்கினேன்" என்றார். டாக்டர் சந்தேகமாக மேசையைப்பார்த்தார். மருந்து அங்கே இருந்தது. பேப்பர் வெயிட்டைக் காண வில்லை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எந்த வகையான நிதி உதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கக் கூடாது

## வி.நு. கூ.ச.ச. அமெரிக்காவிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக போராடி உயிர்த்தியாகம் செய்து வரும் தமிழீழ விடுதலைப்பு புலிகளை பயங்கரவாத அமைப்பாகக் கருதி அமெரிக்கா தடை செய் துள்ளமை குறித்து தமிழ் மக்கள் மிகவும் கவலையுடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவராலய அரசியல் துறைச் செயலா ளரிடம் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம் கையளித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு ஒரு போதும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதில்லை.தமிழ் மக்களின் அரசியல் சமூக பொருன்மிய அபிலாசைகளை வென்றெடுக்வே அவர்கள் போராடிவருகின்றார்கள் . என்பதை இன்று சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளன.

அரசும் இதனை ஏற்றுக்கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்ததியது.

முன்னைய அரசு விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடாத்தியதன் அடிப்படையில்,விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அவர்களுக்கு வழங்குவதன் மூலம்தான் நிரந்தர சமாதானம், அமைதி ஏற்பட வழிபிறக்கும் என்பதை உறுதி பட தெரிவிக்கின்றோம்.

கடந்த காலங்களில் அரசு வெளிநாடுகளிடம் பெற்ற நிதி உதவிகளை தமிழீழ மக்களை கொள்றொழிக்கவும் தமிழரது நிலங்களை. ஆக்கிரமிக்கவும் சொத்துக்களை அழிக்கவுமே பயன்படுத்தியது. ஆதலால் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப் படும் வரை அமெரிக்கா எந்த வகையான நிதியுதவி களையும் வழங்கக் கூடாது.

தமிழ் தேசிய இனம் சுய நிர்ணய உரிமையோடு வாழ அமெரிக்கா உதவ வேண்டுமென யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தமிழ்மக்களின் பேரில் கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது.

(உ)

# உலக உணவுத் திட்டத்தின் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(கொழும்பு)

கடந்த 2 வருட காலமாக புனரமைப்பு மீள் குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சின் கீழ் இயங்கி வந்த உலக உணவுத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக கடமையாற்றிய டி.எச். ஜே. சேனாதீரவின் சேவைக் காலத்தை தற்போதைய அரசு நீடிக்காதது தொடர்பாக கவலை தெரிவித்து, உலக உணவு திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெப் டப் டிக்புனரமைப்பு மீள் குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்கவுக்கு 2004.07.05 ஆம் திகதியிட்டு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில், யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் உணவு நிவாரணம் வழங்கும் பிரிவே உலக உணவுத் திட்டமாகும் இதன் மூலம் கடந்த 2 வருட காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 20 அமெரிக்க டொலர் மில்லியன் பெறுமதிக்க 50 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான உணவு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் மூலம் கடந்த 2 வருட காலமாக வடக்கு-கிழக்கு உட்பட மாவட்டங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலைக்கு உணவு , தாய், சேய்போசாக்கின்மை ஒழிப்பு பாடசாலை மாணவர்களுக்கான பகலுணவு போன்ற எண்ணற்ற வேலைத் திட்டங்கள் உலக உணவுத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இவையனைத்தும் பாதிப்புற்ற வடக்கு-கிழக்கு மக்களின் நலன் கருதி அப்போதைய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராகக் கடமையாற்றிய டாக்டர் ஜயலத் ஜயவர்தனவின் பங்களிப்புடன் செயற்படுத்த முடிந்தது. 2004 ஆம் ஆண் டிலும் பெருந்தொகையான உணவை யுத்தத்தால் பாதிப்புற்ற அகதிகளுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புனரமைப்பு,மீள் குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சின் கீழ் இயங்கிய உலக உணவு திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக கடமையாற்றிய டி.எச்.ஜே. சேனாதீர உலக உணவுத் திட்டத்தின் மூலம் விஷேசமாக பயிற்று விக் கப்பட்டவர். ஆனால் உலக உணவுத் திட்டத்தின் வேண்டு கோளையும் பொருட்படுத்தாது அவரது சேவைக்காலத்தை நீடிக்காததால் இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எமது வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதமடையலாம்.

எங்களது எந்த வேண்டுகோளையும் பொருட்படுத்தாது உலக உணவு திட்டத்தை நடைமுறைப்படுத்த விஷேட தகுதியும் அனுபவமும் பெற்ற அதிகாரியொருவரை நீக்கி விட்டு அனுபவமற்ற தகுதியில் குறைந்த ஒருவரை நிய மிப்பதால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பல மில்லியன் பெறுமதியான வேலைத் திட்டங்கள் ஸ்தம்பி தமடையலாம் என்று தாம் சந்தேகிப்பதாகவும் இலங்கைக் கான உலக உணவு திட்டத்தின் பிரதிநிதி அவரது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(உ)

## இராசி பலன்

19.07.2004

(ஆடி 04, திங்கட்கிழமை)

துதியை மு.இ. 07.55 மணி வரை

ஆயிலியம் சித்தம் பி.இ.1.36 மணி வரை

இராகுகாலம் 07.31-9 .01 மணி வரை

சுபநேரம் 12.01-1.31 மணி வரை

**மேடம்**
மனக்கிலேசம், மாதா சுகம், காரிய தாமதம், உடல் நலக் குறைவு.

**இடபம்**
பிரயாணநன்மை, குடும்ப மகிழ்ச்சி, நல்ல முயற்சி, எடுத்த காரியம் கைகூடும்.

**மிதுனம்**
சிந்தனை மிகுதி, நண்பர் விவாதம், கௌரவக்குறைவு, முயற்சி தாமதம்.

**கடகம்**
செய்தொழில் நன்மை, கலந்துரையாடல், உடல் நலம், காரிய சித்தி.

**சிங்கம்**
சத்துருஜெயம், எடுத்தகாரியம் தாமதம், பணவிரயம், சயனசுகக் குறைவு,

**கன்னி**
புதிய விடயம், உறவினர் சந்திப்பு, விருந்து பசாரம், நல்ல காரியம்.

**துலாம்**
நிலைமாற்றம், நல்லசெய்தி, தொழில் நன்மை, இஷ்டசித்தி.

**விருச்சிகம்**
புதிய திட்மிடல்,பித்தரோகம், காரிய தாமதம், பிரயாணம்.

**தனுசு**
மனக்குழப்பம், எதிர்பாராத அச்சம், முயற்சி தாமதம், ஆரோக்கியகுறைவு.

**மகரம்**
அபூர்வ சந்திப்பு, உறவினர் உதவி, காரிய அனுகூலம், செல்வாக்கு.

**கும்பம்**
எடுத்த காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, உற்சாகம், செய்தொழில் முன்னேற்றம்.

**மீனம்**
பெரியோர் வெறுப்பு, முயற்சி தாமதம், மனச்சோர்வு, பிராயண நன்மை.

(பழைய நோப்படி கணிப்பிடப்பட்டது)

வள்ளுவன்

## அரசும்- புலிகளும் யுத்தநிறுத்தத்தை மீறினால் அதற்கு நாம் பொறுப்பல்ல

### க.கா.குழுவின் தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டினை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மீறுகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே தெரிவித்துள்ளார். அரசுக்கும், விடுதலைப்புகளுக்கும் அனுப்பிவைத்துள்ள பிரத்தியேகக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவார்களானால் அதன் விளைகளுக்கு கண்காணிப்புக்குழுவை பொறுப்பாளி ஆக்க முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பிரத்தியேகமான முறையில் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதம் குறித்து இருதரப்பும் எதுவிதக் கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (121-8)

## அமைச்சர் ஜயலத் வன்னிக்கு விஜயம்

(வன்னி)


முன்னாள் புனரமைப்பு மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சரும், கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வன்னிப் பிரதேசத்திற்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மருதமடு தேவாலயத்திற்குச் சென்று திருப்பலியில் கலந்து கொண்டார். கடந்த பல வருடங்களாக மடுதேவாலய முகாம் அகதிமுகாமாக மாறியிருந்தது. கடந்த இரண்டு வருட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடவே இவர் அங்குசென்றுள்ளார். (18)

# ∴பாத்தின் 38 வது நினைவில் ஈராக் நகரங்கள் அதிர்ந்தன

(பக்தாத்)

ஈராக்கில் ∴பாத்கட்சி 36 வருடங்களுக்குமுன் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த நினைவு





தினத்தின்போது ஈராக் எங்கும் பரவலாக நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் ஒரு அமெரிக்க வீரர் உட்பட ஏழு ஈராக்கியர் கொல்லப்பட்டதோடு 25க்கும் அதிகமான ஈராக்கியர் காயமடைந்தனர்.

சதாம் ஹுசெய்ன் பின்நாளில் ∴பாத் கட்சியைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து 80 களிலிருந்து ஈராக்கை ஆளத்தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் ஈராக்கின் தென்பகுதிப் பொலிஸ் தலைமையதிகாரியும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ம∴முறியா, பக்தாத் ஆகிய இடங்களில் பாரிய குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன. ஈராக்கின் நீதி அமைச்சரைக் குறிவைத்து நடாத்தப்பட்ட பாரிய கார்க் குண்டு வெடிப்பில் மயிரிழையில் உயிர்தப்பினார். ஆயினும் 5 பொதுமக்கள் அங்கு பலியாகினர்.

இஸ்லாமபாத் தீவிரவாதத் தலைவர் அல்-ஸ்ர்க்காவி இத்தாக்குதலுக்கு உரிமைகோரியிருக்கிறார். பிரதமர் மீதான தாக்குதல் தோல்வியில் முடிந்தததைத் தொடர்ந்து இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# பலஸ்தீனப் பிரதமர் ராஜினாமா தடைச் சுவரால் அரபாத் சீற்றம்

(ஜெருசலேம்)



பலஸ்தீனம் குழப்பமடைந்துள்ளது. சமாதான முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்று காரணம் காட்டிப் பலஸ்தீன அதிகாரசபையின் பிரதமர் அஹமட் ஊரி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இதேவேளை நூற்றுக்கு அதிகமான அரபாத்தின் ∴பட்டா கட்சி ஆதரவாளர்கள் அவரது ஜனாதிபதி மாளிகையின் முன்னால் குழுமி இஸ்ரேல் நிர்மாணித்துவரும் தடைச்சுவருக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காஸா பிராந்தியத்தில் மூன்று இஸ்ரேலியர்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை அங்கு அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது. பின்னர்

# மேர்சிடிஸ் பென்ஸ் கார் உற்பத்தி நிறுத்தம்

(பேர்ளின்)

ஆயிரக் கணக்கான டெயில்மர் கிறிஸ்லர் மோட்டார் வாகன் உற்பத்தி நிறுவன தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மேர்சிடிஸ் பென்ஸ் கார் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.




சுமார் 14,500 தொழிலாளர்கள் டெயில்மர் நிறுவனத்தின் தொழிலாளர் குறைப்பு நடவடிக்கை மற்றும் வேலை நேர அதிகரிப்புக்கெதிராகத் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். ஸ்ரட்கார்ட் தொழிற்சாலையில் மாத்திரம் நாளொன்றுக்கு 1000 கார்களின் உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

டெயில்மரின் செயற்பாட்டை ஆளும் தொழிற்கட்சி கடுமையாகச் சாடியுள்ளது. 100 வருடத்திற்கு முந்திய தொழிலாளர் அடிமைத்தனத்தை நோக்கிச் சில ஜேர்மன் கம்பனிகள் செல்வதாக அது அறிக்கை வெளியிட்டுள்ளது. ஜேர்மன் சான்சிலர் ஸ்குரோடர், இப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்று கோரியுள்ளார். டெயில்மர் தலைவர் ஜேர்கன் ஸ்ரெம்ப், இது தொடர்பில் விரைவில் முடிவு எட்டப்படும் என்று கூறியுள்ளார். (யே)

# இரண்டு பத்திரிகைகளை ஈரான் தடை செய்தது

(தெஹ்ரான்)

ஈரானின் அரசியல் சீர்திருத்தங்களுக்குச் சார்பான இரண்டு சுதந்திர பத்திரிகைகள் மீது ஆளும் கடும்போக்கு இஸ்லாமிய அடிப்படைவாத அரசாங்கம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜொமுரிட்டா மற்றும் வகாய் ஆகிய இரண்டு பத்திரிகைகள் மீதும் தற்காலிக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதும், இதற்கு முன்னர் தற்காலிக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட பத்திரிகைகள் மீண்டும் இயங்குவதற்கு இடமளிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

பத்திரிகை ஏன் தடைசெய்யப்பட்டது என்பது குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது என்று 'ஜொமுரிட்' பத்திரிகையின் தலைமை ஆசிரியர் லாஹிட் தெரிவித்தார். அரச தொடர்புச் சாதனத் தலைமை அதிகாரியின் தொலைபேசிகள் நேற்றைய தினம் செயலிழந்து காணப்பட்டன.

இப்பத்திரிகைகள் அரசுக்கெதிராகப் பிரசாரம் செய்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது. சுதந்திர (போட்டோ) பத்திரிகையாளர் ஒருவர் ஈரானிய உளவு அதிகாரி ஒருவரால் கொல்லப்பட்டது தொடர்பில் இப்பத்திரிகைகள் குற்றம் சுமத்தின. (யே)





காஸா பிராந்தியத்தில் மூன்று இஸ்ரேலியர்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை அங்கு அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது. பின்னர் நிலமை சுமுகமடைந்து கைதிகள் விசாரிக்கப்பட்டனர்.

இதேவேளை, பலஸ்தீன அதிகார சபை இஸ்ரேலின் தடுப்புச்சுவர் நடவடிக்கைக்கு எதிராக எடுக்கவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைக்களை யாஸீர் அரபாத் அங்கீகரித்துள்ளதுடன், பலரும் பிரதமரின் ராஜினாமாவை வாபஸ் பெறவைக்குமாறு ஜனாதிபதி அரபாத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். பிரதமர் ஊரியின் ராஜினாமா பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும் என்று அரபாத்தும் நம்புவ்தால் அதனைக் கைவிடுமாறு அவர் பிரதமரை விநயமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (யே)

# WORLD NEWS உலக தரிசனம்

## சிங்கப்பூர் பிரதமர் பதவி மீண்டும் லீ குடும்பத்திடம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் தற்போதைய பிரதமர் கோச்சொக் ரொன்ங் தனது பதவியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம், உதவிப் பிரதமர் லீ ஷீன் லூவிடம் கையளிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக, ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளதாக நேற்று முன்தினம் அவர் அறிவித்தார். இவர் சிங்கப்பூரின் இரண்டாவது பிரதமராகக் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் ஓகஸ்ட் 12இல் புதிய பிரதமர் லீ ஷீன் ரொஸ் பதவியேற்பார் என்றும் பிரதமர் அறிவித்தார்.

சிங்கப்பூரின் பிதாமகர் என்று கருதப்படும் முதலாவது பிரதமரும் தற்போதைய அரசின் மூத்த அமைச்சருமான லீ குவான் யு, ஒரு கட்டத்தில் பதவியிலிருந்து விலகி கோச்சொக் இடம் தமது பதவியை ஒப்படைத்தார். இப்பொழுது கோ, தனது பதவியை லீ குவான் யு வின் மகனான லீ ஷீனிடம் ஒப்படைக்கிறார். தந்தையைப் போலவே இவரும் மிகுந்த இறுக்கமான போக்குடையவர் என்று கருதப்படுகிறது.

(யே)

## 2020ஆம் ஆண்டு தாய்வான் சீன அரசுடன் இணைக்கப்படும்!

(ஹொஸ்கொஸ்)

2020ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பாகத் தாய்வான் நாட்டைச் சீன அரசாங்கத்துடன் இணைப்போம் என்று சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் முந்நாள் தலைவரும் தற்போதைய சீன இராணுவத் தலைவருமான ஸியாங் ஸெமின் தெரிவித்துள்ளார்.

ஒருவாரகால இராணுவ ஒத்திகைகளை தாய்வான் எல்லைக்கருகில் ஆரம்பித்து வைத்து உரை யாற்றும்போதே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார். 1949ல் சீனாவுடனான சிவில் யுத்தத் திற்குப் பிற்பாடு தாய்வான் சுதந்திர ஜனநாயக நாடாக இயங்கத் தொடங்கியது. தாய்வானின் ஜனாதிபதி ஸென்-சுயி-பியான் இரண்டாவது தடவையாகவும் வெற்றியடைந்த பின்னர் தாய்வானின் சுதந்திர பிரகடனம் வலு வாக முன்னெடுக்கப்படும் என்று சீனா அஞ்சுகிறது.




தரை, கடல் மற்றும் வான்வழித் தாக்குதல் ஒத்திகைகள் தாய்வானை அச்சுறுத்தும் வகையில் இடம் பெற்று வருவதையிட்டு அமெரிக்கா உன்னிப்பாக இருப்பதாக அதன் ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சீனப்பொருளாதாரம் பெருகிவரும் இக்கட்டத்தில் தாய்வான் மீதான தாக்குதல்கள் சாத்தியமற்றவை என்றும் மேற்குலகம் கருதுகிறது. 2008இல் தாய்வான் புதிய அரசியல் யாப்பை அறிமுகப் படுத்தவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(யே)

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந் தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து - குறள்

வலம்புரி

## பாரம்பரிய கலையை மீட்கும் பெரும் பணி

தமிழர்களின் பாரம்பரியக் கலை அம்சங்களை வெளிப்படுத்தும் முயற்சியில் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் ஆற்றிவரும் பணி பாராட்டுதற்குரியது.

தமிழினத்தின் அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் பாரம்பரியக் கலைகள் இன்று நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களின் அதீத ஊடுருவல் காரணமாக வழக்கொழிந்து போயுள்ளன.

ஓர் இனம் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதாயின் அல்லது தனது இனத்துவத்தின் தொன்மைகளை சான்றாதாரப்படுத்திக் கொள்ளவேண்டுமாயின், முதலில் தனது கலைத்துவப் படைப்புக்களை பாதுகாத்துக் கொள்வது அவசியமானதாகும்.

இவ்வாறு ஓர் இனம் தனது கலை அம்சங்களை பாதுகாப்பதில் தவறும் பட்சத்தில் இனத்துவ முகவரிகள் பறிமுதல் ஆவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த உண்மையை இன்றைய நவீன விஞ்ஞான யுகத்தில் புரிந்துகொள்வது கடினமாயினும், யாழ்ப்பாண மண்ணில் இயங்கும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம் போன்ற அமைப்புக்கள் தமிழர்களின் பாரம்பரியக் கலையை பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றன.

அவ்வகையில் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பணியானது இங்கு குறித்துரைக்க வேண்டிய ஒன்றாகும். நவீன தொடர்பு சாதனங்களின் ஆக்கிரமிப்பில் அமிழ்ந்து போயுள்ள எமது பாரம்பரிய கலைகளை மீட்டெடுக்கும் முயற்சி காலத்தின் தேவை கருதிய அரும்பணியாகும்.

இப் பணியை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை அறியாத இளம் சந்ததிக்கு இனங்காட்டும் பணியில் கழகம் ஈடுபட்டிருப்பது உண்மையில் பாராட்டுதற்குரியதாகும்.

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை மீட்டெடுத்து அவற்றிற்கு புத்துயிர் கொடுப்பதற்காக கழகத்தால் நடாத்தப்பட்ட கிராமியக் கலை பண்பாட்டு ஊர்வலம் ஓர் புதிய திருப்புமுனை எனலாம்.

கிராமிய மக்களின் ஒற்றுமை, அவர்களின் உணர்ச்சி எழுகை, இளைஞர்களின் உடற்பலம், மன உறுதி என்பனவற்றுடன் பின்னிப் பிணைந்த கிராமியக் கலை அம்சங்கள் காப்பாற்றப்பட்டு அவை வெளிப்படுத்தப்படும்போது சமகால "வர்த்தக வாழ்க்கை" ஊடுருவல்கள் தடுக்கப்பட்டு, காலாகாலமாக போற்றப்பட்டு வந்த கிராமிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, உறவுமுறை, கூட்டுக் குடும்ப கலாசாரம் என்பன காப்பாற்றப்படும்.

உடற்பலத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட தமிழினத்தின் பாரம்பரிய கலைகள் வர்த்தக நோக்குடைய இன்றைய சினிமாக்களாலும், சின்னத் திரைகளினாலும் மங்கிப்போயுள்ளன.

இந்தக் கலைகளை வளர்ப்பதற்காக அர்ப்பணிப்

# பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து விடுதலைப்புலிகளுடன் ஹெல உறுமய பேசும்

## கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஜாதிக ஹெல உறுமய கலந்துரையாட வேண்டும் என்ற பிரேரணையை தமது கட்சி ஆராய்ந்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விஷேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றி தெரிவிக்கையில்,

அவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடுவதற்கான தீர்மானத்தை ஜாதிக ஹெல உறுமய கட்சி எடுத்துக்கொண்டதும் கலந்துரையாடல்களுக்கான அழைப்பினை விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்கும்.

தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிங்கள மொழியில் நன்கு உரையாடக்கூடிய அங்கத்தவர்கள் கலந்துரையாடலில் பங்குகொள்வார்கள்.

இதேவேளை, சமாதான நடவடிக்கைகள் தொடர்பான சிங்கள மக்களின் கருத்துக்களை சரியான முறையில் தமிழழ விடுதலைப்புலிகளுக்கு தெரிவிப்பதற்காகவே இந்த கலந்துரையாடலை நடத்துவதற்கு எமது கட்சி விரும்பியுள்ளது.

இதேநேரம் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சகல தரப்பினரையும் இணைததே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றார். இதேபோன்று இலங்கையிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும போது சலக தரப்பினரையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

மூவின மக்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவேண்டும். சமானதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று சிங்கள மக்கள் தமக்கு தொடர்ந்தும் அழுத்தம் தருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

(18,60,10)

# யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் குறித்த விபரங்கள் திரட்டப்படுகின்றன

(திருநெல்வேலி)

கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள் குறித்த விபரங்களைத் திரட்டும் முயற்சிகளில் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் பொது அமைப்புக்கள் என்பன ஈடுபட்டுவருகின்றன.

இது தொடர்பான முதலாவது கூட்டம் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த எஸ். ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி மகளிர் அரசியல் துறைப பொறுப்பாளர் வர்மா, மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட மற்றும் பலர்கலந்து கொண்டனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்தோர் பற்றிய முழு விபரங்கள், காணாமல் போனோர் தொடர்பான விபரங்கள், படுகொலை செய்யப்பட்டோர் ஊன முற்றோர் மற்றும் காயமடைந்தோர் பற்றிய விபரங்கள் ஆகியன தற்போது திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18,43)

## வெளிநாடுகளில்

# மருத்துவக் கல்வியைத் தொடரவுள்ளோருக்கு இலங்கை மருத்துவச்சங்கத்தின் வேண்டுகோள்!

(கொழும்பு)

மருத்துவக் கல்விக்காகத் தமது பிள்ளைகளை வெளிநாடு அனுப்ப விரும்பும் பெற்றோர்களுக்கு இலங்கை மருத்துவச் சங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அதாவது, வெளிநாடுகளில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும பல்கலைக்கழங்களையே இதற்காகத் தெரிவு செய்ய

க்கழகத்தில் பயின்ற மாணவர்கள் படுமோசமான பெறுபேறுகளை பெறுகிறார்கள்.

தற்போது நாட்டில் இவ்வாறான 750 மருத்துவப் பட்டதாரிகள் இப் பரீட்சையில் சித்தியடையாமல் உள்ளார்கள். இவ் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்த வண்ணமே உள்ளதுடன் அவர்கள் மேலைத்தேச வைத்தியப் பயிற்சியினை மேற்கொளள முடி

பாண மண்ணில் இயங்கும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம் போன்ற அமைப்புக்கள் தமிழர்களின் பாரம்பரியக் கலையை பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றன.

அவ் வகையில் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பணியானது இங்கு குறித்துரைக்க வே டிய ஒன்றாகும். நவீன தொடர்பு சாதனங்களின் ஆக்கிரமிப்பில் அமிழ்ந்து போயுள்ள எமது பாரம்பரிய கலைகளை மீட்டெடுக்கும் முயற்சி காலத்தின் தேவை கருதிய அரும்பணியாகும்.

இப் பணியை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை அறியாத இளம் சந்ததிக்கு இனங்காட்டும் பணியில் கழகம் ஈடுபட்டிருப்பது உண்மையில் பாராட்டுதற்குரியதாகும்.

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை மீட்டெடுத்து அவற்றிற்கு புத்துயிர் கொடுப்பதற்காக கழகத்தால் நடாத்தப்பட்ட கிராமியக் கலை பண்பாட்டு ஊர் வலம் ஓர் புதிய திருப்புமுனை எனலாம்.

கிராமிய மக்களின் ஒற்றுமை, அவர்களின் உணர்ச்சி எழுகை, இளைஞர்களின் உடற்பலம், மன உறுதி என்பனவற்றுடன் பின்னிப் பிணைந்த கிராமியக் கலை அம்சங்கள் காப்பாற்றப்பட்டு அவை வெளிப்படுத்தப்படும்போது சமகால "வர்த்தக வாழ்க்கை" ஊடுருவல்கள் தடுக்கப்பட்டு, காலாகாலமாக போற்றப்பட்டு வந்த கிராமிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, உறவுமுறை, கூட்டுக் குடும்ப கலாசாரம் என்பன காப்பாற்றப்படும்.

உடற்பலத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட தமிழினத்தின் பாரம்பரிய கலைகள் வர்த்தக நோக்குடைய இன்றைய சினிமாக்களாலும், சின்னத் திரைகளினாலும் மங்கிப்போயுள்ளன.

இந்தக் கலைகளை வளர்ப்பதற்காக அர்ப்பணிப்போடு பாடுபட்ட கலைஞர்கள் தமது கலைப் பணியை தொடரமுடியாமல் வெறுப்போடு முடங்கிப் போயுள்ளனர்.

"உறுதியான உடம்பிலேயே மன உறுதியை உருவாக்கமுடியும் என்ற ஆங்கிலேய கண்டுபிடிப்பிற்கு அர்த்த புஷ்டியான கலைப்படைப்புக்களை கொண்டிருந்தவர்கள் தமிழர்கள் என்ற உண்மை இன்றுவரை உணரப்படாமல் உள்ளமை வேதனைக்குரியதாகும்.

கோலாட்டம், கும்மி, கபடி ஆட்டம், சிலம்பு, கரகம், ஒயிலாட்டம் போன்ற கிராமிய பாரம்பரியக் கலைகள் உடல் ஆரோக்கியத்திற்கும், உடல் இயக்கத்திற்கும் அற்புதமான பயிற்சியாக அமைந்துள்ளன.

எனினும், மேலைத்தேய நாகரிகத்தில் அத்து மீறிய ஊடுருவல்கள் "பிரேக் டான்ஸ்" என்ற பெயரில் விரசத்தையும், பார்ப்போரின் மன உணர்வையும் திசை திருப்பி மதுவுக்கும், போதைப்பொருளுக்கும் அடிமையாக்கி விடுகின்றது.

இவை தமிழினம் எனக் கூறிப் பெருமைப்படும் நமக்கு எவ் வகையிலும் ஒவ்வாது. எனவே, தமிழர்களின் பாரம்பரிய கலைப் படைப்புக்கள் மீண்டும் உயிர்ப்புப்பெற வேண்டும். அவை இளம் சந்ததியினரிடையே அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றில் ஈடுபாடு காட்டும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

தேவை ஏற்படின் நவீனத்துவத்திற்கு அமைவான மாற்றங்களும் புதுப்பிக்கப்படலாம். இதனை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் மேற்கொள்வதற்கு அனைத்து பொது அமைப்புக்களும் கொடையாளர்களும் உதவ முன்வரவேண்டும்.

தமிழழ விடுதலைப்புலிகளுக்கு தெரிவிப்பதற்காகவே இந்த

(18,60,10)

# யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் குறித்த விபரங்கள் திரட்டப்படுகின்றன

(திருநெல்வேலி)

கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள் குறித்த விபரங்களைத் திரட்டும் முயற்சிகளில் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் பொது அமைப்புக்கள் என்பன ஈடுபட்டுவருகின்றன.

இது தொடர்பான முதலாவது கூட்டம் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த எஸ். ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி மகளிர் அரசியல் துறைப பொறுப்பாளர் வர்மா, மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட மற்றும் பலர்கலந்து கொண்டனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்தோர் பற்றிய முழு விபரங்கள், காணாமல் போனோர் தொடர்பான விபரங்கள், படுகொலை செய்யப்பட்டோர் ஊன முற்றோர் மற்றும் காயமடைந்தோர் பற்றிய விபரங்கள் ஆகியன தற்போது திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18,43)

## வெளிநாடுகளில்

# மருத்துவக் கல்வியைத் தொடரவுள்ளோருக்கு இலங்கை மருத்துவச்சங்கத்தின் வேண்டுகோள்!

(கொழும்பு)

மருத்துவக் கல்விக்காகத் தமது பிள்ளைகளை வெளிநாடு அனுப்ப விரும்பும் பெற்றோர்களுக்கு இலங்கை மருத்துவச் சங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அதாவது, வெளிநாடுகளில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும பல்கலைக்கழங்களையே இதற்காகத் தெரிவு செய்ய வேண்டும். இதன்போதே மாணவர்கள் உள் நாட்டிற்கு வந்ததன் பின்னரும் கூட இங்கு தமது வைத்திய சேவையைத் தொடர இலகுவாக இருக்கும் என்பதே அந்த வேண்டுகோளாகும்.

ஏனெனில், வெளிநாட்டு கல்வி த்தகைமையுடைய பல மாணவர் கள் இலங்கையில் தமது பயிற்சி யை மேற்கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர், என மேற்படி சங்கத் தலைவர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாடடில் மருத்துவப பயிற்சிக்காக செல்லும் மாணவர்கள் தாம் மீண்டும் இலங்கையில் பணிபுரிய விரும்பினால, முதலில்இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்ய வேண்டும். பின்னர் இவர்கள் இங்கு ஒருவருடம் பயிற்சிகளை மேற்கொள்வார்கள்.

ஆனால், உள்நாட்டில் பயிற்சி பெறவேண்டுமானால், அவர்கள் **E.R.P.M.** எனும் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். இப்பரீட்சை மருத்துவ கவுன்சிலினால் நடத்தப்படுகிறது. ஆனால், இதில் பெரும் பாலான மாணவர்கள் சித்திபெறவில்லை.

ஏனெனில், அவர்கள் வெளிநாட்டில் ஆங்கில மூலமான கற்கையினை மேற்கொள்ளவில்லை. இத்தகைய பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் படுமோசமான பெறுபேறுகளை பெறுகிறார்கள்.

தற்போது நாட்டில் இவ்வாறான 750 மருத்துவப் பட்டதாரிகள் இப் பரீட்சையில் சித்தியடையாமல் உள்ளார்கள். இவ் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்த வண்ணமே உள்ளதுடன் அவர்கள் மேலைத்தேச வைத்தியப் பயிற்சியினை மேற்கொள்ள முடியாமலும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18-6)

### திசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**என் குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள் அறியாமையில் இருப்பவர்கள் தாழ்ந்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும் மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள்.**

சுவாமி விவேகானந்தர்

# அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி மீள் குடியமர்வைத் துரிதப்படுத்துக!

## இ. ந. நி. சமாசம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்குடாநாட்டிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்தி, சொநத இடங்களில் மக்களை மீளக் குடியேறுவதற்கு ஏற்ற வகையில் துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யாழ் மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி மகஜரில், இடம் பெயர்ந்தோர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதற்கு ஏற்ற வகையில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

எமது இந்தக் கோரிக்கைகள் ஏற்கத் தவறும் பட்சத்தில், பாதிககப்பட்டோர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க நேரிடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (18-43)

# முதலமைச்சராக சரத் எக்கநாயக்க பதவியேற்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் முதலமைச்சராக சரத் எக்கநாயக்க நேற்றைய தினம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். நேற்றுக்காலை ஆளுநர் மொன்டிக் கொபல்லாவ முன்னிலையில் இவர் சத்தியபிரமாணம் செய்து தமது பதவியை ஏற்றுக்கொண்டார்.

1999ஆம் ஆண்டு மத்திய மகாண சபை உறுப்பினராக தெரிவான இவர் பின்னர் முதலமைச்சர் ஆனார். ஸ்ரீலங்கா சுதந்திரச் கட்சியின் தொகுதி அமைப்பாளராகவும் இவர் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18,61,8)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கிளி. வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நாளை திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10.45 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் ஜப்பானியத் தூதுவராலயத்தின் பொருளாதாரப் பிரிவின் முதன்மைச் செயலாளர் டாக்டர் யூ.ஜி. மியாகார முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு இச் சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைப்பார்.

அத்துடன், இத் திறப்பு விழாவில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேல் பிள்ளை, வடக்கு கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஆர்.எம்.எஸ். ரட்ணாயக்க, வடக்கு கிழக்கு சுகாதார அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் டாக்டர் வி. ஜெகநாதன், யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி டாக்டர் யஸ்மின் சுக், கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். அருண் மற்றும் டாக்டர் வை.டீ. நிகால் ஜெயதிலக ஆகியோரும் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-18)

## புலிகளுடனான...

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுவார்த்தை இடையில் தடைப்பட்டமை எமக்கு மிகுந்த வருத்தத்தை அளித்துள்ளது. மீண்டும் இப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகிறோம்.

இந் நிலையில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் எமது நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தையில் முக்கிய தரப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருப்பதனால் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்கும்படியும் அது தொடர்பான சில ஆலோசனைகளையும் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளோம்.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தீவிர முயற்சிகளில் சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டுவரும் நோர்வே அரசு ஈடுபட்டுள்ளதாக இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்துள்ளார்.

இதனை இந்திய அரசு வரவேற்பதுடன் அப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பல்வேறு விடயங்களில் பல உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முக்கியமாக வர்த்தக உடன்பாடு, முதலீடுகளுடன் கூடிய உடன்பாடு என்பனவற்றுடன் மேலும் பல முக்கிய உடன்பாடுகளை செய்துகொள்ளும் பொருட்டு பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன. பிரதமருடன் ஆராயப்பட்ட விடயங்கள் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கின்றன. இது மகிழ்ச்சிக்குரியதென்றும் சிதம்பரம் தெரிவித்தார்.

## அரசு - புலிகள்...

தானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார்.

இதன் முதற்கட்டமாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஐ.தே.கவில் இணைந்து கொண்ட முன்னாள் அரசியல் அமைப்பு விவகார அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான ஜீ.எல். பீரிஸை அரசின் சமாதான பேச்சு முயற்சிகள் தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாடுகளை முன்வைப்பதற்கு பொறுப்பாக ஐ.தே.க. நிறைவேற்றுக் குழு நியமித்துள்ளது.

(த-121)

## கொழும்பு...

தேகத்திற்கிடமானவரின் அடையாள அட்டைகள் தீவிரமாக பரிசீலிக்கப்படுவதுடன் விசாரணைகளும் தொடர்கின்றன.

புத்தளம் வீதியில் நான்கு இராணுவச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் இச் சோதனைச் சாவடிகளிலேயே பயணிகள் சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட பகுதியில் இருந்து கொழும்புக்குள் ஊடுருவும் குண்டுதாரிகள் மற்றும் வெடிபொருள்களை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இவ்வாறான சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கொழும்பு செல்லும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(த-13)

## அகற்றப்பட்ட அடிக்கல் மீண்டும் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பகுதி வீதியொன்றில் வீசப்பட்டிருந்த யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கான அடிக்கல் நேற்றுக் காலை பொலிஸாரினால் மீட்கப்பட்டு மீண்டும் அதே இடத்தில் நாட்டப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவினால் கடந்த புதன்கிழமை நாட்டப்பட்ட புதிய நீதிமன்ற கட்டடத்திற்கான அடிக்கல்லே இவ்வாறு நேற்று முன்தினம் நள்ளிரவு அவ்விடத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு நல்லூர்ப் பகுதியில் போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-18)

## தமிழ்த்தின விழா

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின தமிழ் மன்றம் நடாத்தும் தமிழ்த்தின விழா இன்று திங்கட்கிழமை பாடசாலையின் சிரேஷ்ட மாணவ தலைவி ஆ. அனுசியா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பட்டப்படிப்புக்கீள் பீட இயக்குநர் அ. குமாரவேல் கலந்து கொள்ளவுள்ளார். (ச-49)

## இந்தியப்...

தரப்பு பொருளாதார உறவு குறித்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் தற்போதைய நிலை குறித்தும் கலந்துரையாடப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் ஆகியோரை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச் சந்திப்பு தொடர்பாக சரத்பவார் கருத்தை வெளியிடுகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் விவசாயத்துறை சம்பந்தமான விடயங்களை மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்தார் என்று தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம் சென் மற்றும் முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம)

## மொனராகல...

பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

விசாரணை அறிக்கை விரைவில் சிறைச்சாலை ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இளையோர் உதைபந்தாட்டம் யாழ். அணிகள் சம்பியன்

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்பட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த கிண்ணத்துக்கான இரண்டாவது தமிழ்த் தேசிய இளையோர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 19, 14 வயதுக்குட்பட்ட யாழ். அணிகள் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டன.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சியில் ஆரம்பமான 19 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் திருகோணமலை அணியை எதிர்த்து யாழ். அணி மோதியது. ஆட்டநேர முடிவில் யாழ். அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

17 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் யாழ். அணியை அம்பாறை அணி வென்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

தொடர்ந்து 14 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பங்குபற்றிய யாழ். அணி சுவிஸ் நாட்டு அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சீ. நளன் தலைமையில் பரிசளிப்பு விழா இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் சி. பாப்பா, தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்படப் பலர் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இப் போட்டித் தொடரில் கலந்துகொண்ட அணி வீரர்களை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இப் போட்டித் தொடரில் சிறந்த வீரர்களாக பி. ஜெரோன் (யாழ். அணி) 14 வயதுப் பிரிவு, வினோத் (யாழ். அணி) 17 வயதுப் பிரிவு, வி. கமிலஸ் (யாழ். அணி) 19 வயதுப் பிரிவு, இளமகள் (முல்லை. மகளிர் அணி) ஆகியோரும் [illegible]

சிறந்த கோல் காப்பாள[illegible]ாக கை. அகர்சன் (சுவிஸ்), ஆர். ரஹீம் (அம்பாறை), தினேஸ் (திருமலை), சுகன்யா (யாழ்) ஆகியோரும் தெரிவாகினர். (ச)

## ஜேர்மனி அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஜெக்சா பிசர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று முன்தினம் வருகை தந்துள்ள அமைச்சர் இரண்டு நாடுகளுக்குமிடையிலான பொதுவான பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஜனாதிபதியையும், பிரதம மந்திரியையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(த-08)

## வவுனியாவில் மகாநாடு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி குறித்து வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தில் இன்று மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் புனர்வாழ்வு அமைச்சு, மாகாண, மாவட்ட அதிகாரிகள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ச-13)

## விடார்...

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

இவர்களுடனான சந்திப்புக்கள் சாதகமாக அமையும் பட்சத்தில் அவர் கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ச)


## ஒப்பந்தத்துக்கு எதிராக மனு

(லண்டன்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை ரத்து செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக பிரிட்டன் பல்கலைக்கழக் பேராசிரியர் டினேஸ் சேகர குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் அமைப்பின்படி பிரதமர் ஒருவர் குறிப்பிட்ட அமைப்பு ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது. அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொண்டா[illegible] அது சட்டபூர்வமாக செல்லுபடியாகாது என்ற அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்யப்போவதாக பேராசிரியர் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தாம் நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடமும் விளக்கம் கூறி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(121-08)



வித்தார்.

(ம)

## விடுதலைப்...

னோம். இதேபோல் வடகிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு வடக்கிலுள்ள ஏனைய தமிழ் கட்சிகளும் தெற்கிலுள்ள ஏனைய எதிர்க்கட்சிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் தற்போதைய பேச்சுக்கள் நாடு பிரிக்கப்பட வழிவகுக்கும் என்பதால் அதனை நாம் எதிர்க்கிறோம்.

இதுவரை தனியே அரசும் புலிகளும் மட்டுமே பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். ஆனால் சகல அரசியல் கட்சிகளும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும். அரசும் புலிகளும் தொடர்ந்தும் முரணான கருத்துக்களை கூறி வருவதால் மக்கள் இருட்டில் இருக்கிறார்கள். புதிய அரசு வந்தாலும் ஆரம்பத்தில் இருந்தே பேச்சுக்களை நடாத்த வேண்டும். இப் பேச்சுக்களில் ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி. மற்றும் முஸ்லிம் கட்சிகளும் சேர்த்துக் கொள்ளப்படல்வேண்டும்.

நோர்வேயின் அனுசரணைப் பணிகளில் பாரபட்சம் தொடர்பாக எமக்குச் சந்தேகம் எழுகிறது. நாட்டில் ஆட்புல ஒருமைப்பாடு சிதைக்கப்படக் கூடாது. ஒரு நாட்டினுள்ளேயே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது பிரிவைத் தடுக்கும். இவ்வாறு ஹெல உறுமய பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த-06)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

# சங்கு நாதம்

19 -25ஜுலை 2004

Sankunatham

பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 19




பொதுசன நூலகம்
16 JUL 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

# இலங்கையில் அமெரிக்க ஊடுருவல்



சர்வதேச வல்லாதிக்க சகதிகளின் கூத்து இலங்கைத் தீவில் அரங்கேறிக்கொண்டிருக்கும் வரை, இலங்கையில் அமைதி விடியலோ, அபிவிருத்தி வளர்ச்சியோ நிச்சயமாக ஏற்படப்போவதில்லை.

இலங்கையில் அபிவிருத்தி வளர்ச்சி ஏற்பட, நீண்ட காலமாகப் புரையோடிப்போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டுமென்பதுதான் வலியுறுத்தப்பட்ட மிகப் பிரதானமான விடயம்.

ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதனைத் தீர்வுக்குக் கொண்டுவர, இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதுதான் யதாத்தபூர்வமான உண்மை நிலையாகும்.

இந்நிலையில், இலங்கை தீர்வை நோக்கி நகர சர்வதேச வல்லாதிக்க சக்திகள் ஒருபுறம் இடமளிக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், மறுபுறத்தில் இலங்கையின் பேரினவாத ஏகாதிபத்தியம் இனப்பிரச்சினையில் தமிழர் தரப்பின் உரிமைக்கு எப்போதும் இடையூறாகவே செயற்பட்டு வருகின்றமையும் கண்கூடு.

இலங்கைத் தீவில் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக பேரினவாத சக்திகளாலும், அரச இயந்திரத்தாலும், இராணுவப் பொறிவலையாலும் தமிழ்மக்கள் பட்ட, படுகின்ற வேதனைகள், துன்பங்கள், இழப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. இதற்கு ஒரு முடிவே இல்லையா? என்ற ஆதங்கத்துக்கு முற்றுப்புள்ளி இட வேண்டும் என்பதற்காக, எடுக்கப்பட்ட சாத்வீக வழிப் போராட்டங்கள் எல்லாம் பயனற்றுப்போனது.


இந்நிலையில் தமிழ் மக்கள் படும் வேதனையைத் துடைக்க சர்வதேசக் கரம் ஆதரவைத் தருமா? என்ற கழிவிரக்க ஏக்கம் கூட, அந்தத் தேசத்துக்குப் புரிந்தும் புரியாமலேயே உள்ளது. சர்வதேச சமூகம் கூட விழுந்தவனை ஏறி மிதிக்கும் கதையாய் தமிழர் தரப்பை வாஞ்சையோடு அழிக்க நினைப்பதும், பேரினவாதிகளின் அழிவுக் கைங்கரியத்துக்கு தோள் கொடுப்பதும் தமிழ் மக்களை திணுக்குறச் செய்துள்ளது.

## கப்பல் கை மாறியது

இலங்கையில் சமாதானம் நிலைக்குமா?, போர் வெடிக்குமா? என்றதொரு நிச்சயமற்ற ஐயப்பாடான நிலைமையே காணப்படுகிறது. இதில் சமாதானக் கரு சிதைந்து போவதற்கும், போர் ஆரம்பிப்பதற்குமான உட்புற, வெளிப்புற சூழலே தற்பொழுது காணப்படுகிறது.

இதனைஉறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கையாகவே அமெரிக்காவின் இரகசிய விஜயமும், அதன் செயற்பாடுகளும் அமைந்து கிடக்கின்றன.

போர்நிறுத்த சமாதானச் சூழலில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையிலேயே உண்மையில் நாட்டிலும், மக்களிலும் அக்கறை கொண்ட அரசாங்கம் ஈடுபடவேணடும். அதுபோன்றே ஒரு நாட்டுக்குள் இடம்பெறுகின்ற குத்துவெட்டுக்குத் தீர்வு கிடைக்க வழிபிறந்தால், அதனை ஊக்குவிப்பதே சர்வதேச சமூகத்தின் பிரதானமான பணியாக இருக்க வேணடும். இதனையே ஐக்கிய நாடுகள் சபையின குறிக்கோளும் குறிப்பிடுகின்றது.



ஆனால் சமாதானம் என்று உதட்டளவில் கூறிக் கொண்டு உள்ளளவில் யுத்தத்துக்கு முழு மூச்சாகத் தயாராகி வருகிறது இலங்கை அரசு. கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை என்பது போல இது வெளிப்படையான உண்மை. ஒரு பக்கத்தில் சமாதானம் என்ற போர்வையில் அரசாங்கம் சாதாரணமாக ஜன்னலைத் திறந்துகொண்டு யுத்தத்திற்காக கதவை அகலத் திறந்துவைத்துள்ளது.


ஆயுதக் கொள்வனவும், படைக்கு ஆட்சேர்ப்பும், சர்வதேச உதவிகளை மற்றும் பாதுகாப்பு வலைப்பின்னலை வளைத்துப் போடுவதும், மிக வேகமாக இடம்பெற்று வரும் கைங்கரியங்கள்.

இவற்றைக் கூர்ந்து நோக்குகையில் சமாதானக் கருவை இவை வளர்க்குமா என்பது சொல்லித்தான் புரிய வேண்டிய விடயமல்ல. இது சமாதானம் என்ற போர்வையில் இடம்பெறும் யுத்தத்துக்கான ·மூஸ்தீபு. இவை தமிழ் மக்களை அழிக்க எடுக்கப்படும் நடவடிக்கை என்பதே மிகத் தெளிவான உண்மை.

இதற்கு சமாதானக் காலத்தில் 'அமெரிக்காவும் துணைபோவது எவ்வகையில் நியாயம் என்பதுதான் புரியாததாகவுள்ளது. இலங்கையின் கடற்படையை நவீனமயப்படுத்தும் வகையில் அமெரிக்காவினால் 'கரேஜஸ்' என்ற விமானத் தாங்கிக் கப்பல் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி வாசிங்டனில் பொறுப்பேற்றுள்ளார்.

இவ்வாறு அவசர அவசரமாக சமாதானம் என்று கூறிக்கொண்டு இலங்கை அரசு படை பலத்தை நவீனமயப்படுத்துவதும், அமெரிக்கா சமாதான காலத்தில் அரசுக்கு நவீன யுத்தக் கப்பல் வழங்குவதும் எதற்காக என்று சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இதிலிருந்து அமெரிக்காவின் ஊடுருவல், இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கானது அல்ல என்பதையே கோடி காட்டுகின்றது. இத்தகையதொரு பலப்பின்னணியினால்தான் இலங்கை அரசும் தமிழர் விடயத்தைப் புறக்கணித்து, சமாதானத்தைச் சீர்குலைக்கும் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.



## புலனாய்வு மகாநாடு

மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுதல், கடல் வலயத் தடையை நீக்குதல், மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துதல் என்றெல்லாம் திரும்பத் திரும்ப அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்கள் இச் சமாதான காலத்தில் அழுத்தம் கொடுத்தபோதும், ஏதாவது நடந்ததா? என்றால் ஒன்றுமே இல்லை என்பதுதான் விடை. மாறாக, நெருக்கடியும் அழுத்தமும் அதிகரித்ததென்பதுதான் உண்மை.

ஆக மொத்தத்தில் சமாதான காலத்தில் தமிழ் மக்களுக்கு கிடைத்ததென்னவோ வெறுமைதான். இவை குறித்து உரத்த சத்தமாகத் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்குக் கேட்கக்கூடியதாக கூக்குரலிட்ட போதும் செவி சாய்க்காத அமெரிக்கா, இரகசிய இராணுவ புலனாய்வு மகாநாட்டை கொழும்பிலும் பலாலியிலும் நடத்தியிருக்கின்ற உண்மை விடயம் மெல்லக் கசிந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இலங்கையின் அரசபடையை வெற்றியடையச் செய்வதென்பதன் இலக்கிலேயே இப்புலனாய்வு மகாநாடு இடம்பெற்றிருக்கிறது. புலிகளைப் பலவீனப்படுத்தி, தமிழ் மக்களை நசுக்கும் நயவஞ்சக சதிவலையை அமெரிக்கா, இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்து விரித்துள்ளது என்பதுதான் உண்மையான விடயம்.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில்கூட இராணுவப் புலனாய்வு மகாநாட்டில் அமெரிக்க அதிகாரியின் பிரசன்னம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமையும் இங்கு நோக்குதற்குரிய விடயம்.

இரகசிய விஜயமாக யாழ். குடாநாடடுக்கு வருகை தந்த அமெரிக்காவின் உயர் புலனாய்வு அதிகாரிகள், பலாலியில் உயர்படை அதிகாரிகளுடன் பாதுகாப்பு விடயங்கள் குறித்து அலசி ஆராய்ந்ததுடன், முக்கிய படைமுகாம்களுக்கும், உயர் பாதுகாப்பு வலயங்களுக்கும் சென்று நிலைமையை அவதானித்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும், இலங்கை அரசு அமெரிக்காவின் ஆசிர்வாதத்துடன் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தி, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தவிரப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் இலங்கை -அமெரிக்கக் கூட்டுறவு இலங்கையில் யுத்தத்துக்கான சமிக்ஞை எனவும் சர்வதேச ஸ்ரட் .'.போர் எனும் அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதிலும் அமெரிக்கப் படைகள் உற்சாகமாகச் செயற்படுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் இத்தகைய இராணுவப் பயிற்சிகள் இடம்பெறுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகைய நிலைமைகள் இலங்கையில் அமெரிக்கா ஆழ ஊடுருவியுள்ளமையை அச்சத்துடன் புலப்படுத்துகின்றன.

**கோவையர் ஜெயயன்**

தமிழ் மக்களை நசுக்க, அவர்களின் உரிமைப் போரியலை உடைக்க சிங்களப் பேரினவாதம் குழை யடித்து உருவாக்கிய ஊடுருவலாகக் கூட அமெரிக்க ஊடுருவல் அமைந்ததென்றாலும அது ஆச்சரியமான விடயமல்ல.

## கதிர்காமரின் விஜயம்

சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுடன் விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டுமென்ற சிங்களப் பேரினவாதத்தின் கனவைக் கலையாமல் பாதுகாக்கவேண்டுமென்பதற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இவ் விஜயத்தின் பின்னணி இலங்கைக்கான...

(18ஆம் பக்கம் பார்க்க...)

# இயற்கை அனர்த்தங்களும்





தாய்வானையும், ஜப்பானையும் தைஃபூன் புயல் தாக்குமென்று ஒருமாதத்திற்கு முன்னரே அந்நாடுகள் அறிவித்துவிட்டன. அதன் பயனாக மனித உயிரிழப்புக்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன.

நியூசிலாந்தில் எரிமலை வெடித்துச் சிதறப்போவதாக மூன்று மாதங்களுக்கு முன்னரே அந்நாடு அறிவித்துவிட்டதால், குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் சென்றனர்.

ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு மாநிலங்களைச் சூறாவளி தாக்குமென்று இரண்டுவாரங்களுக்கு முன்பாக கடந்த மாசி மாதத்தில் அந்நாடு அறிவித்ததால், மக்கள் தமக்குரிய பாதுகாப்பைத் தேடிக்கொண்டார்கள்.

ஆனால், தொடர்ச்சியாக நான்காவது வருடமும் யூன், யூலை மாதப் பருவமழை காரணமாக கிழக்கிந்தியாவின் பீகார் மற்றும் அஸாம் மாநிலங்களில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷும், நேபாளமும் வெள்ளப்பெருக்காலும், மண்சரிவாலும் அல்லோல கல்லோலப்படுகின்றன. தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக கொடிய விஷப்பாம்புகள் பொதுமக்களின் வாழ்விடங்களுக்குள் புகுந்து தாக்கியதில் நூற்றுக்குமதிகமான பொதுமக்கள் இறந்துள்ளனர்.



அஸாம் மாநிலத்தில் மாத்திரம் சுமார் 20இலட்சம் மக்கள் தமது வீடுவாசல்களை இழந்து மரங்களிலும், எஞ்சிய வீட்டின் கூரைகளின் மீதும் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளுமுகமாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

மலைகளாலும், குன்றுகளாலும் சூழப்பட்ட நேபாளத்தில் ஒருவாரத்தில் மாத்திரம் 150 பொதுமக்கள் மண்சரிவுகளில் அகப்பட்டு மாண்டுள்ளனர். இவர்களில் 24பேர் ஒரேநாளில் மடிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கடும் வெள்ளப்பெருக்குக் காரணமாகக் குழந்தைகள் உட்பட ஒரு குடும்பத்தின எண்மர் பலியான துயரச் சம்பவம் ஒன்றும் பங்களாதேஷில் இடம்பெற்றுள்ளது.

குடிப்பதற்கான சுத்தமான நீரோ, மின்சாரமோ மற்றும் தொலைத்தொடர்புகளோ அற்ற நிலையில் இம்மூன்று தெற்காசிய நாட்டு மக்களும் கவலைக்கிடமான நிலையிலிருக்கின்றனர்.

போக்குவரத்துத்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பாரிய மரங்கள் வீதிகளில் வீழ்ந்துகிடக்கின்றன. ரெயில்வேப் பாதைகள் மழைநீரால் அடித்துச செல்லப்பட்டுவிட்டன. இந்தியாவிலும், பங்களாதேஷிலும் மேலும் மழை பெய்வதற்கான அறிகுறிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பல நதிகளில் வெள்ளம் கரைபுரண்டோடும் இவ்வேளை, மிகப்பெரிய நதியாகக் கருதப்படும் பிரமப்புத்ரா நதியும் கரைபுரண்டோடக்கூடிய சாத்தியக்கூறுகளால் மக்கள் திகிலடைந்துபோயுள்ளனர்.

பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டு இலட்சக்கணக்கான அகதிகள் அங்கே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் வறிய மாநிலம் என்று கருதப்படும் பீகாரில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் உணவுப்பொட்டலங்களைப் போடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

பீகாரில் 40 பொதுமக்கள் இதுவரை உயிரிழந்துள்ளதுடன் இலட்சக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளனர். பலர் தமது உடமைகள் திருட்டுப்போவதைத் தவிர்க்குமுகமாக வீடுகளுக்கு அருகிலுள்ள மரங்களில் ஏறிக் காவல்செய்கின்றனர். கடும் மழை, குளிர் காரணமாகப் பல குழந்தைகள் இறக்க நேர்ந்துள்ளது.

பீகார் மற்றும் அஸாம் மாநில முதலமைச்சர்கள் சர்வதேச உதவிவேண்டி அவசர அறிவித்தல்களை வெளியிட்டுள்ளனர். குழந்தைகளுக்கான பால்மா, மருந்துப்பொருட்கள், உண




# அரசியல் அராஜகங்களும்

வுப் பொருட்கள் மற்றும் தற்காலிக தங்குமிடங்களை அமைக்கக்கூடிய கூடாரங்கள் என்பவற்றை வழங்கி உதவுமாறும் அவர்கள் சர்வதேச நாடுகளிடம் உதவி கேட்டுள்ளனர்.

பேதுரு யேசுதாசன்
B.A (Hons) pol.science
ACIM (uk), Dip. in Journalism

மேற்படி தேவைகள் மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படவேண்டிய அதேவேளை தவிர்க்கமுடியாத சில கேள்விகளும் எழவே செய்கின்றன.

இந்துசமுத்திரத்தின் வல்லரசு, ஆசிய வல்லரசு, உலகின் ஆறாவது வல்லரசு என்றெல்லாம் புகழப்படும் இந்தியா, மனித அவலங்களை வெறுமே பார்த்துக்கொண்டிருப்பதன் உள்நோக்கம் என்ன? என்பது பிரதானமான கேள்வியாகும்.



பங்களாதேஷ், அதன் அமைவிடம் காரணமாக அங்கு ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் அதனோடு தொடர்புடைய இயற்கை அனர்த்தங்கள் பற்றி எதிர்வுகூறமுடியாத பூகோளஸ்தானத்தில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அந்தச் சிறிய ஏழைநாட்டின் பொருளாதாரமும் இவற்றிற்கெதிரான பாரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கெள்ளும் அளவுக்குச் சக்திவாய்ந்ததல்ல. தவிரவும், தெற்காசிய நாட்டு அரசியலவாதிகளுக்கே உரித்தான அராஜகமும், ஊழலும், சுரண்டலும் இங்கும் ஆட்சியாளர்களிடம் பரந்து காணப்படுகிறது.

ஆனால், ஒப்பீட்டளவில் உலக அரங்கில் பல வழிகளிலும் முன்னணியில் திகழும் இந்தியா மனித அவலங்களைத் தமது சுகபோக வாழ்விற்கு விளம்பரம் தேடும் சாதனமாகப் பயன்படுத்துகின்றது.

படிக்காத மேதையென்று போற்றப்பட்ட காமராஜர் மற்றும் மக்கள் திலகம் என்று மெச்சப்பட்ட எம்.ஜி.ஆர் போன்ற தமிழகத் தலைவர்கள் தொடக்கம், வாஜ்பாயி, அத்வானி உள்ளிட்ட தற்போதைய அஸாம் முதல்வர் தாருண் கோகோய் வரை மனித அவலங்களை தமது அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்திய அராஜக அரசியல்வாதிகள் என்பதற்குச் சான்றுகள் நிறையவேயுள்ளன.

தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்த இயற்கை அனர்த்தங்களுக்கெதிராக இந்தியா எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென்று மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றம்சாட்டுகின்றன.

பாரிய வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்கியிருந்த அஸாம் மற்றும் வறிய மாநிலமான பகார் ஆகிய பிரதேசங்களின் மக்கள் சீற்றத்திற்குப் பதில்கூறமுடியாத ஆட்சியாளர்கள், இந்த இயற்கை அனர்த்தங்கள் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தும் பொதுமக்களுக்கு எதுவித எச்சரிக்கையும் விடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

1950களில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியா சென்ற இந்தியத தமிழர்கள்



தமது வயிற்றுப் பிழைப்புக்காகத் தமது பெண் பிள்ளைகளை விபசாரத்தில் ஈடுபடுத்தவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டபோதும் அரசியல்வாதிகள் சுகபோகமாக வாழ்க்கை நடாத்தினர்.

70களிலும், 80களிலும் திட்டமிட்ட முறையில் ஏழைத்தொழிலாளர்களின் குடிசைகளுக்கு இரவில் தீவைத்த எம்.ஜி.ஆர், பகலில் நன்கொடைகளை அள்ளி வழங்கித் தம்மை ஒரு வள்ளலாகக் காட்டிக்கொண்டார்.

மாநிலத் தேர்தல் காலத்தில் குஜராத்தில், இந்துத்துவத் தீயை அள்ளிவீசி ஏராளமான முஸ்லிம்கள், ஆண்களும் பெண்களும், சிறுவர் சிறுமியரும் கொல்லப்படுவதில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களான அத்வானியும், வாஜ்பாயியும் பின்னணியிலிருந்ததை "International Watch Dog" எனும் நிறுவனம் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளது.

இப்பொழுது இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அகதிமுகாம்களில் உணவுப்பொதிகளை மிக உருக்கமாக வழங்கும் அரசியல்வாதிகளை உலக ஊடகங்களில் காணலாம். இவை அடுத்த தேர்தலில் வெற்றிபெற இவர்களுக்குப் பெரிதும் உதவும். ஆனால் அடுத்தவருடமும் இவ்வனர்த்தங்கள் நிகழாது என்பதற்கு உத்தரவாதங்கள் மட்டும் வழங்கப்படமாட்டாது.

# கலைகின்ற வேடங்கள்

இலங்கைத்தீவில் சமாதானத்திற்காக எடுக்கப்படும் முயற்சிகளைவிட சமாதானத்தைக் குழப்புவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளே முன்னணியில் இருக்கின்றன என்ற சுடுகின்ற உண்மையின யதார்த்தத்தை நாம் உணரக் கூடியதாக உள்ளது.

சிங்களத் தலைமைகள் யாவும் தமிழர் நலனுக்கும், உரிமைக்கும், தமிழ்த் தேசியத்திற்கும் எதிராகவும், எதிரிகளாகவுமே எப்பொழுதும செயற்பட்டு வந்துள்ளதையும் நாம் அறிவோம். ஆனால் தற்போதைய நிலவரம், இன்னுமொரு முக்கியமான உண்மையையும் வெளிக்கொண்டு வந்துள்ளது.

கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகால அரசியல் வரலாற்றில் மாறிமாறி அரசமைத்த சிங்களக் கட்சிகள் யாவும் தமிழர் விரோத எண்ணங்களைச் செயற்படுத்துவதிலேயே முனைந்திருந்தன. அதேவேளை, எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட சிங்களக் கட்சிகள், தமிழர் நலனுக்கு ஆதரவாகச் - செயல்படும் தோற்றத்தையே காட்டி வந்துள்ளன.

சிங்களக் கட்சிகளின் ஆட்சி கைமாறும் போதும் அவை தொடர்ந்து இதே 'அரசியல் நிலைப்பாட்டையே' கடைப்பிடித்து வந்தன. அதாவது, ஆட்சி அமைக்கும் கட்சி தமிழர் விரோத செயற்பாடுகளையும் எதிர்க்கட்சி தமிழர் ஆதரவுக் கருத்துக்களையும் வெளிப்படுத்தி வருவதில் எந்தவித மாற்றமும் மில்லை.

ஆனால் அண்மைக் காலத்தில் இப்போக்கில் சற்று மாற்றம் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பல இராணுவ வெற்றிகளை அடைந்து, இலங்கைத் தீவில் சிங்களத்திற்கும், தமிழீழத்திற்கும் ஓர் இராணுவச் சமநிலை ஏற்பட்டபோது, நிலைமை மாறியது. ஈழத் தமிழர் நலன் குறித்தும், சமாதானம் குறித்தும் பேச வேண்டிய கட்டாயம் ஆளுகின்ற சிங்கள அரசிற்கு ஏற்பட்டது. இந்தவேளையில், சிங்கள அரசு தமிழர் நலன குறித்துப் பேசுகின்ற அரசாகவும், சிங்கள எதிர்க்கட்சி தமிழர் நலனுக்கு எதிராகச் செயற்படுகின்ற சக்தியாகவும் மாறுகின்ற தோற்றம் ஏற்பட்டது.

இந்த வெளிப்படைத் தோற்ற மாறுதல், உண்மையில் சிங்களப் பௌத்த பேரினவாதக் கொள்கைக்கும், செயற்பாட்டிற்கும், நன்மை செய்வதாகவே அமைந்தது. அடிப்படையான சிங்களப் பேரினவாதக் கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றும தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான, கௌரவமான தீர்வு விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஊடே கிடைத்துவிடும் என்றும், உள்ளூரிலும் வெளியூரிலும் நம்பிக்கை பலமாக எழுந்தது.

அதன் அடிப்படையில், முன்னர் சந்திரிகா அம்மையார் ஒரு சமாதானத் தேவதையாகவும், பின்னர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் ஒரு



சமாதானத் தூதுவராகவும் பாத்திரமேற்று நடித்தார்கள். சமாதானத்திற்கான மயக்கத்தில் மக்களும், மற்றவர்களும் கிறங்கிக் கிடக்கையில், காலமும் பயனின்றிக் கடந்து சென்றது.

இந்த ஆண்டு சந்திரிகா அம்மையாரின் அரசியல் கூட்டணி இறுதிப் பெரும்பானமையின்றி ஆட்சி அமைத்த போது, சமாதான முன்னெடுப்புக்கள் குறித்துச் சந்தேகம் ஏற்பட்டதும், அதற்கிணங்க பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகாமல் இழுத்தடிக்கப்படுவதும் கண்கூடாக நடைபெற்றன.

சந்திரிகா அம்மையாரின் சமாதானத் தோற்றம் குறித்து நம்பிக்கை ஏற்படாமல் போனதற்கு அம்மையாரின் கடந்தகால தமிழர் விரோத செயற்பாடுகள் காரணமாக அமைந்தன.

கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகால வரலாற்றில் ஆட்சி அமைத்த சிங்களக் கட்சிகளும் அதேவேளை எதிர்க்கட்சிகளாக செயற்பட்ட சிங்களக கட்சிகளும் அடிப்படையில் தமிழர் நலனுக்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாதக் கட்சிகளே! தாங்கள் சார்ந்து நிற்கின்ற கட்சிகளின் அதிகாரத்திற்காக, அவை பிரிந்துநின்று மோதினாலும், அவை தங்கள் அடிப்படைக் கொள்கையில் ஒற்றுமையாகவே இருந்து வந்துள்ளன.

சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு ஆதரவாகவும், தமிழரின் உரிமைக்கும், தேசிய நலனுக்கு எதிராகவும் தாம் கொண்டுள்ள நிலைப்பாட்டிலிருந்து சிங்களக் கட்சிகள் என்றுமே தடம்புரண்டதில்லை.

எத்தனை வித்தியாசமான அரிதாரங்களைப் பூசி, விதவிதமான பாத்திரங்களை ஏற்று இந்தச் சிங்களக் கட்சிகள் நடித்தாலும் தங்களது அடிப்படையான சிங்கள-பௌத்த பேரினவாதக் கொள்கையிலிருந்து இவைகள் என்றுமே மாறியதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

**அவுஸ்ரேலியா மெல்போர்னிலிருந்து சபேசன் எழுதிய 'கலைகின்ற வேடங்கள்' என்ற கட்டுரை வாசகர்களுக்காக....**

சிறிலங்காவின் சிங்களத் தலைமைகள், தமிழினத்துக்கு நீதியான, நியாயமான நிரந்தரமான, கௌரவமான தீர்வை, சமாதானப் பேச்சுக்கள் ஊடாகத் தரமாட்டாது என்பதை கடந்தசில வாரச் செய்திகள் நிரூபித்து நிற்கின்றன.

பிரதேசவாதத்தை முன்னிறுத்தித் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை மழுங்கடிப்பதற்கு கருணா என்ற சக்தி பயன்படுத்தப்பட்டது. கருணாவிற்குத் துணையாகவும், உந்து சக்தியாகவும் இருந்து உதவியதில், சிங்களத்தின் இரண்டு தலைமைகளுமே காரணமாக இருந்திருக்கின்றன என்ற உண்மை இப்போது வெளிப்படையாகியுள்ளது.

சந்திரிகா அம்மையாரும், ரணில் விக்கிரமசிங்காவும் சிங்கள -பௌத்த பேரினவாத அடிப்படையின் இரண்டு தோற்றங்களே! இந்த இரண்டு தோற்றங்களின் வித்தியாசமான வெளிக்காட்டலின் ஊடாகத்தான் சிங்கள -பௌத்தப் பேரினவாதம் உறுதியாகவும், பலமாகவும் உயிர் வாழ்ந்து வருகின்றது.

தமக்குள் பதவிக்காகவும், அதிகாரத்திற்காகவும், அரசியல் எதிர்காலத்திற்காகவும் இவர்கள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டாலும், சிங்கள-பௌத்தப் பேரினவாதத்தின் நலனுக்காகவும், அதன் ஆளுமைக்காகவும் எதையும் செய்வதற்கு இவர்கள் தயங்கியதில்லை. அந்தவகையில், இந்த வேடங்கள் இவர்களுக்கு மிகவும் பொருந்தியே அமைந்துள்ளன, அமைந்தும் வருகின்றன.

தமிழீழத் தேசியத் தலைமையின் பொறுப்புணர்வான நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், யுத்தநிறுத்தம் தொடர்ந்து பேணப்படுவதற்கும் அடித்தளமாக அமைந்தது. எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் சமாதான காலம் என்பது அந்த விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் அச்சுறுத்தலாகத்தான் இருந்துள்ளது என்பதை நாம் வரலாற்றில் இருந்து படிக்கமுடிகின்றது.

இப்படிப்பட்ட காலத்தில்தான் வெளிச்சக்திகள் ஊடுருவுகின்றன. சமாதான காலம் காட்டுகின்ற போலியான அமைதித் தோற்றத்தால், மக்கள் மனநிலையிலும் தளம்பல்நிலை உருவாகும். இப்படிப்பட்ட நிலையில் ஒரு விடுதலை இயக்கத்தையும் அதன் போராட்டத்தின் உறுதியையும் கட்டிக்காத்து, எழுச்சிகொள்ள வைப்பதற்கு ஒரு மகத்தான தலைமை வேண்டும். அப்படிப்பட்ட தலைமை ஒன்று இந்த தமிழினத்திற்குக் கிடைத்துள்ளது. உலக வரலாற்றில் மிகமிக அரிதாகவே கிடைக்கப்பெறுகின்ற இத்தகைய தலைமையின் கீழ், தமிழினம் இனி ஒருபோதும் ஏமாறவோ, தோற்கவோ தயாராக இல்லை என்ற நிதர்சனத்தை வருங்காலம் நிரூபித்துக் காட்டும்.

இன்று இலங்கைத்தீவில் பல முக்கியமான விடயங்கள் தேக்கநிலையை அடைந்திருப்பதைக் காணுகின்றோம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டு போயுள்ளன. பாராளுமன்ற நடவடிக்கைகளும் உரிய முறையில் நடைபெறுவதில்லை. சமாதானப் பேச்சுக்களை நிபந்தனையாகக்கொண்ட நிதி உதவியும் தடைப்பட்டுள்ளது. இவை காரணமாக நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சிகண்டு வருகின்றது. முன்னர் நிதி உதவி வழங்கும் நாடுகள் வழங்குவதாக உறுதியளித்த 4.5 அமெரிக்க பில்லியன் டொலர்கள் கையளிக்கப்படவில்லை. காரணம், பேச்சுவார்த்தை இல்லையென்றால் நிதி உதவியும் இல்லை என்ற நிபந்தனைதான்.!

நிலைமை இவ்வாறு மிக மோசமாக இருக்கையில் அதனை இன்னும் அவலநிலைக்குக் கொண்டுசெல்லும் முயற்சிகளில்தான் சிறிலங்கா அரசு இறங்கியுள்ளது. சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகின்ற அராஜக நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆணிவேரையே அறுத்து வருகின்றன. கிழக்கில் நடைபெற்று வருகின்ற கொலைகளும், மனித உரிமை மீறல்களும், கொலைப் பயமுறுத்தல்களும் இன்று சிறிலங்கா இராணுவத்தின் அனுசரணையுடனேயே நடைபெற்று வருகின்றன.

கருணாவின் துரோகம் நசுக்கப்பட்டு அவரும் அவரைச் சேர்ந்த சிலரும் தப்பியோடி விட்ட பின்பும், ஆயுத பலமும் ஆட்பலமும் மனோபலமும் இல்லாத இச்சிறிய குழுவுக்கு ஆதரவுகொடுத்து அதனை முன்னிறுத்தி சிறிலங்கா இராணுவமே அராஜகச் செயல்களைப் புரிந்துவருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினதும், சிறிலங்கா இராணுவத்தினதும் இத்தகைய செயல்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தடுத்துநிறுத்துவது மட்டுமல்லாது போர்நிறுத்த உடன்படிக்கைக்கும் ஆப்பு வைத்து உடைக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா மீதும், அவரது அரசு மீதும் எவரும் நம்பிக்கைகொள்ள முடியாதவாறுதான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. தன்னுடைய அரசியல் எதிர்காலத்திற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஒரு சாட்டுக்காகவாவது ஆரம்பிக்கமுடியாத நிலையில் இருக்கும் சந்திரிகா அம்மையாருக்கு ஒரேயொரு வழிதான் இருக்கின்றது.

மீண்டும் ஒரு யுத்தத்தை தமிழீழ மக்கள் மீது வலிந்து ஆரம்பிப்பதுதான் சந்திரிகா அம்மையாருக்குத் தெரிந்த ஒரேயொரு வழியாக உள்ளது. யுத்தத்தை ஆரம்பிப்பதன் மூலம் சிங்கள மக்களைத் திசை திருப்பித் தனது அரசியல் எதிர்காலத்திற்கு புதிய அத்திவாரம் ஒன்றை இடுவதோடு மட்டுமல்லாது, தன்னுடைய தமிழின விரோதக் கொள்கையைச் செயல்படுத்துகின்ற இரட்டைத் திருப்தியும் இதனால் அம்மையாருக்கு ஏற்படக்கூடும்.


ஆனால் தமிழீழத் தேசியத் தலைமையும், தமிழீழமும் இவற்றிற்கு முகம் கொடுக்கத் தயாராகத்தான் இருக்கின்றது. புதிய அலை பொங்கி எழுகின்றபோது அதன் எழுச்சிக்குத் தோள் கொடுக்க உலகத் தமிழினம் இப்போதே தயாராக வேண்டும்.

*நன்றி: தமிழ்நாதம்.*

# ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...

### 19வது ஒலிம்பிக் போட்டி
### மெக்சிக்கோ (MEXICO) 1968

பத்தொன்பதாவது ஒலிம்பிக் போட்டிகள் 1968ஆம் ஆண்டு மெக்சிக்கோ நகரத்தில் நடைபெற்றன.




19ஆம், 20ஆம், 21ஆம், ஒலிம்பிக் போட்டிகளுக்காக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டிகள்.

இந்த ஒலிம்பிக் போட்டியினை ஜனாதிபதி GUSTAVO DIAZ ORDA உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். ஒலிம்பிக் தீபத்தினை தடகள விளையாட்டு வீரரான NORMA ENRIQUETA BASILID DE SOTELO ஏற்றிவைத்தார். அத்துடன் ஒலிம்பிக் சத்தியப்பிரமாணத்தை தடகள வீரரான PABLO LUGO GARRIDO என்பவர் செய்துவைத்தார்.

மெக்சிக்கோ நகரில் 1968ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திக்தி ஆரம்பமான இப்போட்டிகள் அம்மாதம் 27ஆம் திகதிவ்ரை நடைபெற்றன. அதாவது இப்போட்டிகள் 17 நாட்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் 172 போட்டி நிகழ்வுகளுக்காக 112 நாடுகளைச் சேர்ந்த 781 பெண்களும், 4735 ஆண்களுமாக மொத்தம் 5516 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

மெக்சிக்கோவில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவது குறித்து முன்னர் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தது. காரணம் மெக்சிக்கோ நகர் கடல்மட்டத்திலிருந்து 2300m உயரத்தில் அமைந்திருந்தது. கடல்மட்டத்திலிருந்து பார்க்கும்போது ஒக்சிஜனின் அளவு குறைவாக இருந்த காரணத்தினால் பலர் இப்போட்டிகளில் கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்தனர்.





1968ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான இலட்சினை.

இதே மெக்சிக்கோ நகரத்தில்தான் இரணடு வருடங்களுககுப் பிறகு உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த BOB BEAMON என்பவரால் நீளம்பாய்தலில் உலகசாதனை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த உலகசாதனையானது 22 வருடங்களாக முறியடிக்கப்படாமல் நீடித்தது. இச்சாதனையை அவர் மயிரிழையிலேயே படைத்தார். தனக்குக் கிடைத்த மூன்று சந்தர்ப்பங்களை அவர் தவறவிட்டிருந்தார். அவரது அணியினைச் சேர்ந்த சகவீரர் BOSTAN அவரிடம் சென்று,

'உனக்குக் கிடைத்திருக்கும் இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விடாதே. இம்முறை நீ பாயும் முன்பு கால்பதிக்கும் பலகைக்கு (TAKE OFF BOARD) சில சென்றிமீற்றர்கள் முன்னதாகவே உனது பாய்தலை ஆரம்பித்துவிடு' என்றார். நண்பனின் அறிவுரையை ஏற்று BEAMON அதன்படியே நடந்தமையால் அவரால் இச்சாதனையைப் படைக்கமுடிந்தது.



20ஆவது ஒலிம்பிக் போட்டிக்கான இலட்சினை.

அதேநேரத்தில் நீளம்பாய்தல் (LONGJUMP) போட்டியில் உலகசாதனையாக இருந்த தூரம் 8.35 மீற்றாகளாகும். (27அடி 4 3/4 அங்குலங்கள்) ஆனால் BEAMON அதையும் தாண்டி 8.90m பாய்ந்து, உலகசாதனையை ஏற்படுத்தினார். நீளம்பாய்தலுக்காக உருவாக்கப்பட்டிருந்த தூரத்தையும் தாண்டிப்பாய்ந்தார். இதனால் போட்டி மத்தியஸ்தர்கள் சரியான தூரத்தை அளக்கச் சிரமப்பட்டனர். முடிவில் அவரின் கால்த்தடம் பட்ட இடத்திலிருந்து அளந்து பார்த்ததில் பாய்ந்த தூரம் 8.90m எனக் கணிக்கப்பட்டு உலக சாதனையாகப் பதியப்பட்டது.



1968, 1972, 1976ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற மைதானங்கள்.

இவ்வாண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 34 உலக சாதனைகளும், 38 ஒலிம்பிக் சாதனைகளும் படைக்கப்பட்டன. பெண்கள் பிரிவைப் பொறுத்தவரை செக்கோஸ்லோவாக்கிய வீராங்கனை VERA CASLAVASKA 4 தங்கப் பதக்கங்களையும் 2 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றார்.


மேலும் 1968ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளிலேயே போட்டியில் பங்குபற்றிய வ்ர்ர்கள் முதன்முறையாக போதைமருந்துப் பரிசோதனைக்கு உட்படுத்தபபட்டனர். அதில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த HANS - GUNNAR LILJENWALL என்பவர் PENTATHLON போட்டிகளின்போது சோதனைக்குட்படுத்தப்பட்டதில் இரத்தத்தில் மதுசாரம் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டமையால் அவர் போட்டிகளில் கலந்துகொள்வது தடை செய்யப்பட்டது.

இப் 19வது ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா 45தங்கம், 28வெள்ளி, 34வெண்கலம் உட்பட மொத்தமாக 107பதககங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது. இரண்டாம் இடத்தைப்பீடித்த USSR மொத்தமாக 91 பதக்கங்களைப் பெற, ஹங்கேரி மொத்தமாக 32 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. அத்துடன் போட்டியினை நடாத்திய மெக்சிக்கோ 3தங்கம், 3வெள்ளி, 3வெண்கலம் உட்பட மொத்தமாக 9பதக்கங்களைப் பெற்று பதக்கப் பட்டியலில் பதினைந்தாவது இடத்தைப் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

### 20வது ஒலிம்பிக் போட்டி
### முனிச் (MUNICH) 1972

20ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 1972ஆம் ஆண்டு முனிச் நகரில் நடைபெற்றன. 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிவ்ரை நடைபெற்றன.


1972ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டிகளிலேயே தீவிரவாதிகளின் ஊடுருவல் முதன்முதல் இடம்பெற்றது. செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி 8 பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஒலிம்பிக் கிராமத்திற்குள் ஊடுருவி அங்கிருந்த இஸ்ரேலிய வீரர்கள் இருவரைக் கொலை செய்தனர். அதன்பின்னர் இடம்பெற்ற தாக்குதல்களில் ஒன்பது வீரர்கள் கொல்லப்பட்டனர். பதில் தாக்குதல்களில் ஒரு பொலிஸ் வீரரும் ஐந்து தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். இதனால் இவ்வாண்டுப் போட்டிகள் ஒருவிதப் பதற்றத்துடனேயே நடைபெற்றன.



1968ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நீளம்பாய்தலில் உலக சாதனை படைத்த BOB BEAMON உலக சாதனை நிகழ்த்திய மகிழ்ச்சியில்.

இவ் 20ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் 195 போட்டி நிகழ்வுகளுக்காக 121 நாடுகளைச் சேர்ந்த 1059பெண்களும் 6075 ஆண்களுமாக மொத்தம் 7134 போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

இதேவேளை இவ் ஒலிம்பிக் போட்டியினை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த GUSTAVE HEINEMANN உத்தியோகப,ர்வமாக ஆரம்பித்து வைத்தார். ஒலிம்பிக் தீபத்தினை 1500m யூனியர் தடகளப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற GUNTERZAHN என்பவர் ஏற்றிவைத்தார். அத்துடன் சத்தியப்பிரமாணத்தை HEDI SCHULLER என்பவர் செய்துவைத்தார்.




1972, 1976ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிமபிக் போட்டிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட MASCOT.

மெக்சிக்கோவில் நடைபெற்ற 19ஆவது ஒலிம்பிக் போட்டியில் தனது 18ஆவது வயதில் நீச்சல் போட்டியில் 2 தங்கப் பதக்கங்களை வென்ற MARKS PITZ இவ்வாண்டு நடைபெற்ற தனிநபர் ஒலிம்பிக் போட்டிகளிலும் நான்கு பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

மேலும் சோவியத் யூனியனைச் சேர்ந்த ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை OLGA KORBUT 3 தங்கம், 1வெள்ளிப் பதக்கங்களை வென்றதன் மூலம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தார். தனது உடலை வளைத்து சாகசங்களைக் காட்டியதன் மூலம் இவர் உலகெங்கிலும் உள்ள பல ரசிகர்களை தன்வசம் ஈர்த்தார்.


இவ் 20ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் 50தங்கம், 27 வெள்ளி, 22வெண்கலம் உட்பட மொத்தமாக 99 பதக்கங்களைப் பெற்று சோவியத் யூனியன் பதக்கப்பட்டியலில் முதலாம் இடத்தைப் பெற அமெரிக்கா மொத்தமாக 91 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப்பெற்றது.



மொன்றியலில் 1976ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான இலட்சினை.

### 21வது ஒலிம்பிக் போட்டி
### மொன்றீயல் (MONTREAL) 1976

1976ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் கனடாவின் மொன்றீயல் நகரில் நடைபெற்றன. இவ்வாண்டு ஒலிம்பிக்போட்டியினை மாட்சிமை மிக்க அரசியான ELIZABETH II ஆரம்பித்து வைத்தார். ஒலிம்பிக் தீபத்தினை தடகள வீரர்களான STEPHANE PREFONTAINE, SAND RAHENDERSON என்பவர்கள் ஏற்றிவைத்தனர். அத்துடன் சத்தியப்பிரமாணத்தை PIERRE SAINT - JEAN என்பவரும் MAURICE FORGET என்பவரும் செய்துவைத்தனர்.



1968, 1972, 1976ஆம் ஆணடுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் ஒலமபிக தீபம் ஏற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட விளக்குகள்

இப்போட்டிகள் 1976ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதிவரை நடைபெற்றன. மேலும் இவ்வாண்டுப் போட்டிகளில் 198 போட்டி நிகழ்வுகளுக்காக 92 நாடுகளைச் சேர்ந்த 1260 வீராங்கனைகளும் 4824 வீரர்களுமாக மொத்தம் 6084 போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

### நேரயல்

முனிச் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றதால் மொன்றீயலில் நடைபெற்ற போட்டிகளுக்கு பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனாலும் இதனைக் காரணம் காட்டி 24 நாடுகளின் 116 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவில்லை.

இவ்வாண்டில் 53,500 பேரைச் சனத்தொகையாகக் கொண்ட சிறிய நாடான ப்ர்மூடா

(18ஆம் பக்கம் பார்க்க...)

## வியாசர் பதில்கள்

### வியா மாமா! கண்ணுக்குத் தெரியாத கடவுளை நம்பலாமா?

*ஜெகாஷினி நல்லூர்.*

வியாசரே!

விதி என்பதற்கு சரியான வரைவிலக்கணம் கூறுக?

**தோற்றுப்போனவன் தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்தும் நாகாஸ்திரம்.**

*த.சஞ்ஜீவன் புலோலி.*

வியா அங்கிள்!

மனைவியைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

**A,B,C,D... என்ற ஒழுங்கில் தெரிவுசெய்யலாம்.**

*M.இந்திரகலா யோகபுரம்.*

வியா!


இவ்வுலகிலே நட்பா காதலா உயர்வானது?

**நட்பின் உயர்வுதானே காதல்.**

*V.இளங்கோ கோப்பாய்.*

**Dear Vija uncle!**

சிந்திப்பதால் தலை வழுக்கையாகுமா?



**தலைமயிர் கொட்டுகிறதே எனச் சிந்தித்தால் நிச்சயம் வழுக்கையாகும்.**

*T.தாரணி கிளிநொச்சி.*

வியாசரே!

அமுதசுரபி உங்களுக்குக் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?



**சாப்பாட்டுக் கடை ஆரம்பிப்பேன்.**

### பிரியமுடன் வியா அண்ணா! உறவுகள் பணமிருந்தால் கூடுவது ஏன்?, பணம் இல்லாவிடின் குறைவது ஏன்?

*பா.சிறிமோகன் பொறப்தி*

வியா அண்ணா!

உறவுகள் என்றென்றும் பிரியமாகப் பிரியாது இருப்பதற்கு வழி என்ன?

**கால அசைவைத் தடுத்துநிறுத்துவதே ஒரே வழி.**

*S.தர்ஷிகா கொக்குவில்.*

வியாசரே!

யார் மீது அதிகம் நம்பிக்கை வைக்கலாம்?

**இறைவனைத் தவிர வேறு யார் மீதும் அதிகம் நம்பிக்கை வையாதே என்று இந்த வியாசர் சொல்ல விரும்புகிறேன்.**

*ஜொய்சி குருநகர்.*

வியாசரே!

நீங்கள் ஆணவம் பிடித்தவரா?

**கன்மம், மாயை இரண்டையும் சேர்த்துக்கொள்ளும்.**

*S.சுதன் யாழ்நகர்.*

வியாசரே!

ஒரு இளைஞனுக்கு காசா, காதலா முக்கியம்?

**காசு முக்கியம். காதல் மிகமிக முக்கியம்.**

*வில்லூரன்*

**Dear Vija!**

உமக்குத் திருமண் ஒப்பந்தம் நடந்ததாமே. உண்மையா?

**இது யுத்தநிறுத்த ஒப்பந்தமல்ல. யுத்தத்திற்கான ஒப்பந்தம்.**

*P.கிரிஷாந் வேலணை.*

வியா மாமா!

கண்ணுக்குத் தெரியாத கடவுளை நம்பலாமா?

**கிரிஷாந்!**

**கண்ணுக்குத் தெரியாமல் Fax போய்ச் சேர்வதை நம்புகிறோம் அல்லவா? இதில் மட்டும் ஏன் சந்தேகம்.**

*பா.சிறிமோகன் பொறப்பதி.*

பிரியமுடன் வியா அண்ணா!

உறவுகள் பணமிருந்தால் கூடுவது ஏன்?, பணம் இல்லாவிடின் குறைவது ஏன்?

**பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை என்றெல்லா கூறி வைத்திருக்கிறார்கள்.**

*ந.மதன் இணுவில்.*

வியா சார்!

சட்டசபைக்குள் போராட்டம் தேவைதானா?

**என்ன செய்வது.**

**சட்ட (ச)பைக்குள் நிரப்ப வேண்டுமே.**

*S.சுதன் யாழ்ப்பாணம்.*

டியர் வியாசர்!

என்னைக் காதலிப்பவளையா, நான் காதலிப்பவளையா திருமணம் செய்தால் எனது வாழ்க்கை சிறக்கும்?



**மகனே!**

**நீ விரும்புவது கிடையாவிட்டால் உன்னை விரும்புவதை அடைந்துகொள்வாயாக.**

*நாகமகேந்திரலிங்கம் கோப்பாய்.*

வியா அண்ணே!

மேலைநாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றும் நம் நாட்டு இளசுகள் திருந்த வழி ஒன்று சொல்லுங்களேன்?



**யாரங்கே! சேவகர்களே! யாழ்ப்பாணம் வரும் வெளிநாட்டு நம்மவரைத் தடுத்து நிறுத்துங்கள். (**

**இது, தம்பி நாகமகேந்திரலிங்கத்தின் கண்டிப்பான உத்தரவு.**

*K.யாழினி கொக்குவில்.*

**Vija Sir!**

காதலி இனிப்பதும், மனைவி கசப்பதும் ஏன்?

**சொந்தமில்லாத பொருளைச் சுவைப்பதில் தனி சுகம் இருக்கிறது யாழினி.**

*பொ.சசி தரிப்பூர்.*

வியாசரே!.

எனக்கு ஞாபக மறதி அதிகம். என்ன செய்யலாம்?

**பிளீஸ் சசி!**

**எனது பதிலை வாசிக்க மறந்துவிடாதீர்.**

### வியாசரே! விதி என்பதற்கு சரியான வரைவிலக்கணம் கூறுக?

---

## வாசகர் பதில்கள் இல —17

### சராசரி வாழ்க்கை சராசரி வாழ்க்கை என்று எல்லோரும் கூறுகிறார்களே. அப்படி என்றால் என்ன?

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லிடம் யாவும் சரியாக அமைந்தால் அதனைச் சராசரி வாழ்க்கை என்கிறார்கள்.

50 வயது மட்டும் வாழும் வாழ்க்கையும் சராசரி வாழ்க்கைதான்.

பா. செல்வராணி,
வட்டுக்கோட்டை.

சராசரி என்பது சாதாரண மனிதன் தனது உழைப்பிற்கேற்ப ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கேற்ப வரவு - செலவைத் திட்டமிட்டு வாழும் வாழ்க்கையே.

இதைவிடுத்து வரவுக்கு மீறி. எண்ணம்போல் செலவுசெய்தால் அது ஊதாரித்தனம் புரியுதா காந்தன்.

கந்த. ஞானமுத்து.
கைதடி.

**'ஓகோ' என்று ஓடாமலும் 'இல்லையே' என்று வாடாமலும் நடுத்தரமாக நடந்துகொண்டிருக்கும் வாழ்க்கையே சராசரி வாழ்க்கை.**

**சுபா,**
**செம்மணிவீதி.**

அளவுக்குமீறி ஆசைப் படாமல் கிடைத்ததைக் கொண்டு சமாளித்து திருப்தியாக, சந்தோசமாக வாழும் வாழ்க்கை.

புதுக்கவி.

தன் வருமானத்திற்கு ஏற்ப கடன்படாமல், செலவு செய்து வாழ்வதே சராசரி வாழ்க்கையாகும்.

தற்போதைய நவீன உலகில் இது சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறிதான்.

க.அ.மலர்,
யாழ்நகர்.

**அட! இது கூடத்தெரியாதா? நாடு கெட்டுக் கிடக்கிற கேட்டில நாசமாய்ப் போன மனிதர்கள் பலரை 'சரி' 'சரி' என்று சமாளித்துக்கொள்கிறோமே அது தான் சராசரி (வாழ்க்கை).**

**ஜெ. சுபாஷினி,**
**நல்லூர்.**

காந்தன்!

சராசரி வாழ்க்கை என்றால் எதுவும் அறவே இல்லாமலும் இருக்கக்கூடாது. அளவுக்கு அதிகமாகவும் இருக்கக் கூடாது. ஆசை, கோபம், பொய், களவு இப்படி எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் இருக்க வேண்டும்.

V.உமா, புலோலி.

ஏழை என்று எட்டி நிற்காமலும், பணக்காரன் என்று படோபகாரம் காட்டாமலும் தான் வாழும் சமூகத்தோடு ஒத்து சமூகத்தில் தானும் ஒருவனாக வாழ்வானானால் அவனுடைய வாழ்வே 'சராசரி' வாழ்க்கை எனப்படும்.

T.துவாரகா,
திருநெல்வேலி.

*ஒரு மனிதன் ஒருநாள் பொழுதைக் கழிக்கவே திண்டாடும் இன்றைய கால சூழ்நிலையில் எங்கே ஐயா அவன் சராசரி வாழ்வைப் பற்றி நினைத்துப் பார்ப்பது. வேண்டாம் விட்டுவிடுங்கள்.*

S.செல்வி, நல்லூர்.

ஒரு மனிதன் தனது அடிப்படைத் தேவைகள் யாவற்றையும் பூர்த்திசெய்து திருப்தியுடன் சாதாரணமாக வாழும் வாழ்க்கையே சராசரி வாழ்க்கை.

S.நித்தியா,
கொக்குவில்.

### தரமான பதில் தந்த முகவரிகள்

- **வில்லூரான்.**
- **த. சாந்தி, வரணி.**
- **க. நட்சத்திரா, நல்லூா.**
- **தெ. அஜந்தன், மல்லாவி.**
- **அ. பவித்ரா, புலோலி.**
- **ஜெ. ஆரணியா, வேலணை**

## வாசகர் பதில் இல - 19

### மனைவியை வேலைக்கு அனுப்புவது பற்றி உங்கள் கருத்து யாது?

**இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகி M.கவிநிலா, கிளிநொச்சி.**

**உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 24 - 07 - 2004.**

**உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-**

**'வாசகர் பதில்'**
**சங்குநாதம்**
**இல- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

# பொருள் அறிந்து பாடுவதே அருளைத்தரும்!

இன்றைய உலகம் மிகவும் முன்னேறியுள்ளது. விஞ்ஞானம் மெய்ஞானம் என்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும், முன்பு எப்போதும் இல்லாதவகையில் முன்னேற்றம் கண்டுள்ளோம்; மேலும் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. கொம்பியூட்டர் என்ற பெயரில், ஒரு சிறிய கருவியின் மூலம், சிலவருடங்களுக்கு முன் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமுடியாத பல விஷயங்கள், இன்று சாதாரண ஜனங்களிடையே வெகு சாதாரணமான விஷயங்களாகிவிட்டன.

ஆயினும், ஜனங்களுடைய மன நிலை எப்படி உள்ளது என்றால், பரவலாக எங்கும் பயமும், சொல்லமுடியாத மனக்கவலைகளும், மன அமைதி இன்மையுமே காணப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தபோது காலத்தின் கோலம் அல்லது கலியின் விசேஷம் என்று தோன்றினாலும், பொதுவாக பாவங்கள் மலிந்துவிட்டதே உலகில் இன்று. அனைத்து மக்களும் படும் அவதிகளுக்குக் காரணம் என்பதும், மறுக்கமுடியாத உண்மையாகும்.

'சலௌ கல்மஷ சித்தானாம் பாபத்ரவ்ய
ரதாத்மனாம்
விதிஹீன க்ரியாணாஞ்ச கதிக் கௌரீச
கீர்த்தனம்
(அல்லது) கதிர் கோவிந்த கீர்த்தனம
(அல்லது) கதிர் கங்காம் விநா நஹி'

என்றே கூறப்பட்டுள்ளது.

அதாவது கலியில் மனிதர்களின் சித்தம் கல்மிஷம் நிறைந்ததாகவே இருக்கும். பணத்திலும் அதனால் உண்டாகும் பாவத்திலும் இச்சை உள்ளவர்களாகவே ஜனங்கள் இருப்பார்கள். அவர்கள் செய்யும் காரியங்களும் விதிகளுக்குப் புறம்பானதாகவே, முறையாக எப்படிச் செயயப்பட வேண்டுமோ அப்படி இல்லாமல் செய்யப்படுவதாகவே இருக்கும். என்றாலும்கூட, இறைவனைச் சரணடைந்து அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதனாலும், கங்கையில் சென்று நீராடுவதாலும், அவர்களுக்கு ஒரு நல்ல கதி கிடைக்கும் என்பது தெளிவாகிறது.

இதனை உணர்ந்து பாவம் சேர்ந்துவிடக்கூடாதே என்ற பயத்துடன் கூடி, ஐம்பது - ஐம்பத்தைந்து வருடங்களாக நான் பிரார்த்தனா ரூபத்தில் பாடிவரும் ஒரு பாடல் இது:

ராகம் - நாட்டைக்குறஞ்சி
தாளம் - ஆதி

பல்லவி

பாபம் அகல பாமனே அருள்வாய்
பாரினில் பிறந்து
மனமறிந்தும் அறியாதும் செய்த (பாபம்)

அனுபல்லவி

தாபத்ரயத்தினாலும் தனத்தில் மிக
ஆசையாலும்
கோபத்தினாலும் (முன்) கொடும்
காமத்தினாலும் செய்த (பாபம்)

சரணம்

தாய் தந்தை தாரம் மனம் தவிக்கச்
செய்திருந்தாலும்
தோய்ந்த நல் அறிஞர்களை தூஷித்திரு
ந்தாலும் என்
வாய்மெய் கை செய்கையால் வறிஞர்கள்
நொந்திருந்தாலும்
தூய்மையாகிய உந்தன் திருவடி துதி
க்கும் எந்தன் (பாபம்)

'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்றொரு பழமொழி வழக்கத்தில் உண்டு. பல்லில்லாதவர்கள் பேசும்போது, அது பிறருக்குச் சட்டென்று புரியாது. ஏனென்றால் அவர்களுடைய உச்சரிப்பு சரியாக இராது. அதேபோலப் பல்லில்லாதவர்கள் உச்சரிக்கும் மந்திரங்கள் பலிப்பதில்லை என்பதும் உண்மையாகும். உச்சரிப்பு சுத்தம் அல்லது ஸ்பஷ்டம் என்பது, இறையருளை வேண்டிப் பாடுபவர்களுக்கும், பிரார்த்தனை செய்பவர்களுக்கும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். உச்சரிப்பு தோஷம் ஏற்பட்டுவிடுமோனால், நாம் இறைவனைக் குறித்துப்பாடுவது அல்லது பிரார்த்தனை செய்வது என்று வரும்போது வேண்டிய பலனைப் பெறமுடியாது. அல்லது மிகவும் தாமதமான பலன் கிட்டும் என்பதோடு, சில நேரங்களில் விபரீதமான பலன் ஏற்பட்டு விடவும் வாய்ப்புகள் உண்டு.



இதற்கு ஒரு சில உதாரணங்களை எடுத்துக்கூறினால், பொருத்தமாகவும் புரியும்படியாகவும் இருக்கும்.

இறைவன் அருளை வேண்டிப் பாடும் பல பாடல்களில், அவனது குணாதிசயங்களைத் துதித்துப் பாடும்பொழுது 'தொழுபவர்களுக்கெல்லாம் அருள் புரிபவன் என்று 'அ'வுக்கு அழுத்தம் கொடுத்துப் பாடவேண்டுமேயல்லாது, 'தொழுபவர்களுக்கெல்லா மருள் புரிபவன்' என்று சேர்த்துப் பாடக்கூடாது. அப்படிப் பாடி 'ம'வுக்கு அழுத்தம்கொடுத்து 'மருள்' என்று தொனிக்கும்படி பாடிவிட்டால், பொருளே மாறிவிடும்! பலனும் அதற்குத் தகுந்தபடியே கிட்டும்!

அதுபோலவே, 'உந்தன் பாத கமலம் பணிந்தேன்' என்று ஓரிடத்தில் பாடநேர்ந்தால், சங்கீதம் என்ற பெயரில், 'பா... த... க... மலம்... பணிந்தேன்' என்று பாடிவிட்டால் விபரீதமாகிவிடும்.

நேரடியாகச் சங்கீத சம்பந்தம் உள்ளது அல்ல என்றாலும், உச்சரிப்பின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வேதகாலக் கதை ஒன்று உண்டு. ஒரே மந்திரமாக இருந்தும் ஸ்வர வித்தியாசத்தினால் எப்படி விபரீத பலன் உண்டாகும் என்பதை விளக்குவது இந்தக் கதை.

இந்திரனுடைய சத்துரு ஒருவன், தன்னுடைய சத்துருவைக் கொல்லக்கூடிய ஒரு பிள்ளையைப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ஹோமம் ஒன்று செய்தான். 'இந்திர சத்ரூர் வர்தஸ்வ' என்று மந்திரம் சொல்லி ஹோமம் செய்யும்பொழுது, ஸ்வர வித்தியாசத்தினால் 'இந்திரனைக் கொல்லுபவனாக வளரட்டும்' என்பதற்குப் பதிலாக 'இந்திரன் இவனைக் கொல்பவனாக வளரட்டும்' என்று அர்த்தம் தலைகீழாக மாறிவிட்டது. ஆக அக்ஷரங்கள் மாறாவிட்டாலும், ஸ்வரங்களில் ஏற்பட்ட பிழையால் விபரீத பலனே உண்டாகிவிட்டது. இந்திரனால் அவனது பிள்ளை கொல்லப் பட்டான்!

இன்னொரு விஷயமும் இங்கே கவனிக்கத் தகுந்தது. இறைவன் அல்லது இறைவியை விளித்துப் பாடும்போது தேவ, இறைவ, அல்லது தேவி, இறைவி என்று குறில் உச்சரிப்புடனேயே விளிக்க (அழைக்க) வேண்டும். தேவனே அல்லது தேவியே என்றோ, தாயே என்றோ அழைத்துப் பாடுவதும் சரியாகிவிடும். ஆனால் தேவா என்று கூப்பிடும்போது அர்த்தமற்றதாகிவிடும்! தேவீ அல்லது ஜனனீ என்று கூறும்பொழுது, அது தேவியைக் குறிப்பதாக ஏற்படுமே அல்லாது, விளிப்பதாக ஆகாது!

திருப்புகழ் பாடும் அன்பர்கள் இந்த விஷயத்தில் சற்றுக் கவனமாக இருப்பது நல்லது. திருப்புகழில் பல இடங்களில் தேவ, முருக, குமர என்றும் முடிக்கும்போது பெருமானே என்றும் வருவதைக் காணலாம். இவ்வாறு வரும்போது பொருளை உணர்ந்து அறிந்து பயபக்தியுடன் பாடினால் உரிய பலனை அடையலாம் என்பது திண்ணம்.

நம் நாட்டைப் பொறுத்தவரை 'இறைவா! முருகா!' என்று அழைப்பதே நமக்குப் திருப்தியாக இருப்பது போலத் தோன்றுகிறது. அதேபோல 'ஜனனி' என்று கூப்பிடுவதைக் காட்டிலும் 'ஜனனீ' என்று அலறினாலே அன்னை ஓடிவருவாள் என்று நினைக்கத் தோன்றுகிறது. அநேகமாக எல்லோரும் அப்படித்தான் பாடுகிறோம். ஆனாலும் இது தவறுதான்!

வேடிக்கையாக எனக்கு ஒன்று தோன்றுகிறது. கலியில் இறைவனைப் பாடுவது ஒன்றின் மூலமே மோட்ச பரியந்தம் எல்லாவற்றையும் அடைந்துவிடலாம் என்று முன்னோர்கள் சொல்லிச்சென்றிருக்கிறார்களே தவிர, அப்படி இறைவனை அடைவது என்பது சங்கீத மும்மூர்த்திகளைப் போன்ற சிலருக்கே கிடைக்கக்கூடியதாகும். பொருளறிந்து அக்ஷர சுத்தமாகப் பாடி, எல்லோரும் இறைவனை அடைந்துவிட்டார்கள் என்றால், அப்புறம் இந்த உலகம் இயங்குவது எப்படி என்று, இறைவனே இப்படிச் சில உச்சரிப்புத் தவறுகளைச் செய்யும்படி நம்மை வைத்திருக்கிறானோ என்றும்கூட எண்ணத் தோன்றுகிறது.

பொருள் அறிந்து பாடுவது என்பது இறைவன் அருளை வேண்டிப் பாடும்போது தவிர்க்கவே முடியாத ஒன்றாகும். இது எல்லா மொழிப் பாடல்களுக்கும் பொருந்தும். இறைவன் அல்லது இறைவியை, அவர்களது குணாதிசயங்களையும், அங்கலாவண்யங்களையும் மட்டுமே வருணித்துவிட்டு, அத்துடன் வெவ்வேறு குணாதிசயங்களைக் கூறி 'அப்படிப்பட்டவரே', 'இப்படிப்பட்டவளே' என்றெல்லாம் புகழ்ந்துவிட்டு, அத்துடன் முடிந்துபோவதாக இருக்கும் பாடல்களைப் பாடுவது மற்றொரு தோஷமாகும்.

கூர்ந்துநோக்கினால் இப்படிப்பட்ட பாடல்களைப் பாடுவதில் உள்ள பெருந்தவறு புரியும். ஏனெனில் சாதாரண மனிதர்களாக இருந்தாலும், ஒருவரை எல்லாவித குணநலன்களையும் அடைமொழியாக்கி அன்புடன் அழைத்துவிட்டு, பிறகு

**வெங்கடேச தீட்சிதர்**

எதுவுமே சொல்லாமல் விட்டுவிட்டால், அப்படி அழைக்கப்பட்டவருக்கு கூப்பிட்டவரிடம் கோபம் வரத்தானே செய்யும்! அப்படி நிறுத்திவிடாமல் 'காவாய்' என்றோ 'அருள்வாய்' என்றோ சேர்த்துப் பாடிவிட்டால் இந்தத் தோஷம் நீங்கிவிடும்.

அதேபோன்று எல்லாவித வர்ணனைகளையும் கூறிவிட்டு. 'அப்படிப்பட்ட பண்புகள் உள்ள பெருமானை வணங்குகிறேன்' அல்லது 'தேவியைத் துதிக்கிறேன்' அல்லது 'துதி' என்றோ 'பாடிப்பணிகிறேன்' என்றோ அல்லது 'பாடு' என்றோ சொல்லாவிடில், அதனால் என்ன பயனை எவ்விதம் அடையமுடியும் எனறு சிந்தித்துப்பாருங்கள்!

* * *

## நன்மையும் தீமையும்

துரியோதனனுக்கும் தருமனுக்கும் நீண்டகாலமாக ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துகொள்ள கிருஷ்ணனை அனுகினர்.

"எங்கள் இருவருக்கும் ஒரு சந்தேகம் கிருஷ்ணா! இந்த உலகம் உண்மையில் நல்லதா? தீயதா?" கிருஷணன் யோசித்தபின் இருவரையும் நோக்கி,

"நீங்கள் இருவரும் உலகில் எங்கெல்லாம் சென்று வரமுடியுமோ அங்கெல்லாம் சென்று வந்து தீயவன் ஒருவனையும், நல்லவன் ஒருவனையும் அழைத்து வாருங்கள். உங்கள் கேள்விக்கு விடை கூறுகிறேன்" என்றார்.

இருவரும் புறப்பட்டுச் சிறிது காலம் கழித்து கிருஷ்ணரிடம் திரும்பினர்.

தர்மர் "கிருஷ்ணா, இவ்வுலகில் எலலோருமே நல்லவர்களே, தீயவர் என்று யாரும் இல்லை. ஆகவே தீயவர் யாரையும் அழைத்துவர இயலவில்லை." என்றான்.

துரியோதனன் "கிருஷ்ணா, இவ்வுலகில் அனைவரும் தீயவர்களாகவே உள்ளனர். நல்லவர் எவ்ரும் இல்லை. ஆகவே, நல்லவனை அழைத்துவர இயலவில்லை" என்றான். இருவரையும் நோக்கிப் புன்னகைத்த கிருஷ்ணன்,

"நல்ல மனமுடையவனுக்கு உலகம் நல்லது. தீய மனமுடையவனுக்குத் தீயது. உள்ளத்தைத் தூய்மைப்படுத்தினால் உலகம் நன்மை மிகுந்ததாகவே தோன்றும்" என்றான்.

*R. மகாதேவன்.*

ஒருவர் உங்கள் மனதைப் புண்படுத்திவிட்டால், முகத்தை நீட்டிக்கொண்டு மூலையில் உட்கார்ந்துவிடாதீர்கள். ஏதாவது செய்யுங்கள். கையில் காயம் ஏற்பட்டால் என்ன செய்வீர்களோ அதை உடனே செய்யுங்கள். அதாவது புண்ணுக்கு மருந்துபோடுங்கள். இல்லாவிட்டால் நிலைமை கட்டுமீறிப் போய்விடும். உங்கள் மனதைக் காயப்படுத்தியவரை மன்னித்து அவரது நலனுக்காகப் பிரார்த்தனை செய்வதே. உங்கள் புண்ணை ஆற்றக்கூடிய மருந்து. வன்ம உணர்ச்சி வடியும் வரை விடாது பிரார்த்தனை செய்யுங்கள்.

*நமன் வின்சென்ட்பீ*

## பூர்வ வழிபாடு பூரமம்மா...!

சிவ வழிபாடு திருவாதிரையம்மா
சிவகாமி வழிபாடு பூரமம்மா
குமர வழிபாடு கார்த்திகையம்மா
குலம் காக்க நீ தோன்றியதும்
பூரமம்மா!

பூப்புனித நீராட்டு பூரமம்மா
ருது சாந்தியும் பூரமம்மா
ஊஞ்சல் வழிபாடு பூரமம்மா
பூர்வ வழிபாடு பூரமம்மா!

நாகம் பூசித்த தாயே நாகம்மா
நால்வகை விரதங்கள் அனுஷ்
டித்தம்மா

நானிலமும் சரண் அடைந்தால்
நால்வகைப் பேறும் பெற்றிடலாமம்மா!

*கு. உமாமகேஸ்வரன்,*
*நயினையம்பதி.*

# என்னைப் பாட வைத்தவள்

## அங்கம் -2

தொடர்கதை

அலெக்ஸ் பரந்தாமன்




புவனா பார்வைக்கு ஒரு பருவப்பெண்ணாக தெரிந்தாளே தவிர மனதிலே கள்ளங்கபடமில்லாத ஒரு சிறு குழந்தையாகவே இருந்தாள்.

பலவிதமான இன்ப எண்ணங்களை மனதிலே தேக்கி சுதந்திரப் பறவைபோல் சிறகடித்துப் பறந்து, உல்லாசமாகக் கற்பனை உலகில் சஞ்சரித்து வாழவேண்டிய இந்த இளம் வயதில், பாச ஏக்கத்தோடும் வாழ்க்கையில் தனியனாகிப் போய்விட்டடேனேயென்ற மனப்பிரதிபலிப்போடும் வாழும் அவள் வாழ்க்கையை நினைத்துப்பார்க்கிறாள் கிளி.

வாழவேண்டிய இளம் வயதில் வரக்கூடாத, தாங்கமுடியாத சோகங்களையெல்லாம் சுமந்து நின்ற புவனாவுக்கு குறைந்தது இருபத்தியிரண்டு வயதிருக்கலாமென கிளியின் மனம் கணக்குப்போட்டது.

''கிளியக்கா! நீங்கள் மத்தியானம் சாப்பிட்டுவிட்டியளே?'' கேட்டவாறு கிளியையும் அழைத்துக் கொண்டு கிணற்றடியைவிட்டு வீடு நோக்கி நடந்தாள் புவனா.

''ஓமோம், நீ இனித்தானோ சாப்பிடப்போறாய்......?''

''ஓமக்கா, சமையல் முடிய நேரம் போட்டுது''

கூறிக்கொண்டே, அந்த வீட்டின் மாலுக்குள் சென்று கொடியில் கிடந்த துவாயை எடுத்து முகத்தை துடைத்துக்கொணடாள் புவனா. மால் கப்பிலே தொங்கிக்கொண்டிருக்கும் திருநீற்றுக்குட்டானுக்குள் தனது வலதுகைப் பெருவிரலை வைத்து அழுத்தி எடுத்தபின், அதை நெற்றியிலே சிறிது கோடாக இட்டுக் கொண்டாள்.

கிளி அவ்வீட்டிற்கு வரும் போதெல்லாம் புவனாவின் ஒவ்வொரு செய்கைகளையும் கூர்ந்து கவனிப்பாள். பதற்றமில்லாது ஒவ்வொரு காரியங்களையும் பொறுமையாகவும் துப்பரவாகவும் செய்யும் அவளது திறனைக் கண்டு கிளியே வியந்து போவாள்.

கண்ணாடியில் முகம் பார்த்து தலைவாரிப் பின்னலிட்டுக் கொண்டபின் கிளிக்குப் பக்கத்திலே வந்தமர்ந்தாள் புவனா. சிநேகிதிகள் இருவரும் பலதும் பத்துமாகக் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

கதையின் சுவாரஸ்யத்தில் மூழ்கியிருந்த கிளி, புவனா இன்னமும் சாப்பிடாமல் இருப்பதை உணர்ந்து,

''புவனா, நீ இன்னமும் சாப்பிடேல்லையல்லோ. போய்ச் சாப்பிடன்''

கிளி கூறிய பின்புதான் புவனாவுக்கு வயிற்றில் பசியெடுக்கத் தொடங்கியது.

''ஓமக்கா, மறந்துபோனன்.'' சிரித்துக்கொண்டே அந்த மாலையொட்டினாற்போல் அருகில் அமைந்திருந்த குசினியை நோக்கிச் சென்றாள் புவனா.

''கிளியக்கா, நீங்கள் சாப்பிட்டுவிட்டியளே...?'' குசினிக்குள்ளிருந்து புவனாவின் குரல் கேட்கிறது.

''ஓம் புவனா''

''என்னகறி...?''

''கருவாட்டுக்குழம்பும், கத்தரிக்காய் வெள்ளைக்கறியும்.''

''ஏன் மீன் காச்சேல்லையே...?''

''இல்லைப் புவனா. இண்டைக்கு சந்தேக்கை மீன் இல்லையாம்.''

சிலநிமிட இடைவெளிக்குப் பின் கிளி கேட்டாள்.

''இண்டைக்கு என்ன கறி வைச்சனீ...?''

''மரவள்ளிக்கிழங்கும் நீத்துக்காய் வெள்ளைக்கறியும்''

''ஏன் மச்சம் காச்சேல்லையே?''

''இல்லைக் கிளியக்கா. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. அந்த மனுசி மச்சம் தின்னாது''

''ஓ...! நான் அதை மறந்துபோனன்''

பெரியம்மா பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாமிசம் சாப்பிடுவதில்லை. ஞாயிறு கண்ணனுக்குரிய நாள் என்பது அவருடையவாதம்.

மாலுக்குள் தனித்திருந்த கிளி, அந்த வீட்டினைச் சுற்றுமுற்றும் ஏறெடுத்துப் பார்க்கிறாள். அவள் தினசரி அந்த வீட்டுக்கு வருபவளாக இருந்தாலும், இன்று ஏனோ அந்த வீட்டினைச் சுற்றி அவள் பார்வை சுழன்று செல்கிறது.

அந்த வீடானது இரண்டு அறைகளோடு ஒட்டினாற்போல் முன்னால் அமைந்திருந்தது மால் (விறாந்தை). மால் தாழ்வாரத்தையும் அறைகளின் தாழ்வாரத்தையும் நடுவிலே தகரப் பீலியொன்று இணைத்துக்கொண்டிருந்தது.

வடக்குத்திசை நோக்கிக் கட்டப்பட்ட அந்த வீட்டுக்கு, மேற்கு வாசலை நோக்கி புறம்பாக சிறியதொரு குடிசை அமைப்பில் குசினி அமைந்திருந்தது. பொதுவாக இந்த முல்லை மாவட்டப் பிரதேசங்களில் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் இப்படியாகத்தான் வீடும், குசினியும் வெவ்வேறாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஓரளவு வசதியுள்ளவர்கள் மட்டும் தங்கள் வசதிக்கேற்ற வகையில் சிறியதொரு கல்வீட்டைக் கட்டிக்கொள்வார்கள்.

மத்திய வர்க்கத்தில் உள்ள மக்கள் முதிரை மரங்களைக் கப்புகளாக உருவாக்கி வீட்டை அமைப்பார்கள். கூரைக்கு கிடுகினால் வேய்ந்துவிட்டு பக்கச் சுவர்களுக்கு மண்ணினால் அரிந்தெடுக்கப்பட்ட கற்களை வைத்துக் கட்டுவார்கள். அதற்குமேல் ஓர் அங்குல தடிப்பில் சீமெந்துக் கலவையைப் பூசியபின் பெயின்ற் அடித்துவிட்டுப் பார்த்தால், இலட்சரூபா பெறுமதியான கல்வீட்டுக்கு ஒப்பானதாக அது காட்சியளிக்கும்.

புவனா இருக்கும் வீடு சாதாரண மண்வீடாகவே இருந்தது. அவளுடைய பெரியப்பாவுக்கு பிள்ளைகள் இல்லாத காரணத்தினால் சாதாரணமாக சிறிய மண்வீடு ஒன்றைக் கட்டிக்கொண்டார்.

வீட்டின் முன்பாக சடைத்து நின்றது பெரியதொரு வேப்பமரம். அதையொட்டினாற்போல் செம்பரத்தை, நித்தியகல்யாணி, ரோசா, பொன்னொச்சி போன்ற பூமரங்களும், குசினி வாசலுக்கு சற்று முன்பாக கூழன் பலாமரமும் வளர்ந்து நின்றன.

புவனாவின் முயற்சியால் தான் முற்றத்தில் நிற்கும் பூமரங்கள் யாவும் பூத்துச் சிரிக்க ஆரம்பித்தன. கிணற்றின் ஆழம் முப்பத்தைந்து முழமாக இருந்தாலும் மாலைநேரங்களில் அலுக்காது சலிக்காது அதில் தண்ணீர் அள்ளி பூமரங்களுக்கு ஊற்றுவதை ஒரு பொழுதுபோக்காவே செய்யத்தொடங்கினாள் புவனா.

அவளின் இடைவிடாத இந்தச் செயலினால் அந்த வீட்டு முற்றம் மத்தியான அகோர வெய்யிலிலும் குளிர்மையாய் இருப்பதைக் கண்டு பெரியப்பா மிகவும் சந்தோஷப்பட்டுக்கொள்வார்.

''கிளியக்கா, என்ன யோசினை?''

குசினிக்குள்ளிருந்து மீண்டும் புவனாவின் குரல் கேட்கிறது. மாலுகதுள் சிந்தனைவயப்பட்ட நிலையில் இருந்த கிளி புவனாவின் குரலினைக் கேட்டு எழுந்து குசினி வாசலுக்குச் சென்றாள்.

''உங்களோடை கதைச்சுக் கொண்டிருந்தா சாப்பிடக்கூட மனம் வராதக்கா...''

கிளிமேல் தான் கொண்டுள்ள அன்பை வார்த்தைகளினால் வெளிப்படுத்தினாள் புவனா.

''அப்ப நான் இனிவரமாட்டன். என்னாலை ஏன் நீ சாப்பிடாமல் இருப்பான்...''

கிளி தங்கள் இருவருக்குமிடையே உள்ள நட்பின் மிகுதியால் குறும்புத்தனமாக அப்படிக் கூறியதும், புவனாவின் முகத்தில் துக்கத்தின் சாயல் படர்ந்தது. கணப்பொழுதில் புவனாவின் முகத்தில் எற்பட்ட மாறுதலைக் கண்ட கிளி,

''ஏய்... என்ன இது? நான் சும்மா பகிடிக்குத்தானே சொன்னனான். சொன்ன உடனேயே முகம் ஒரு மாதிரியாய் போயிட்டுதே. என்ன சங்கதி?''

புவனாவால் எதுவும் கூறமுடியவில்லை. அவளுக்குச் சாப்பிட்ட சோறு தொண்டைக்குள் இறங்கமுடியாமல் விக்கல் எடுத்தது. பக்கத்தில் இருந்த தண்ணீர்ச் செம்பினை எடுத்து இரண்டுமிடறு தண்ணீரைக் குடித்தாள்.

''கிளி அக்கா, இனிமேல் பகிடிக்குக்கூட அப்படிச் சொல்லாதையுங்கோ. நீங்கள் இஞ்சை வாறதாலை தான் நான் இன்றுவரைக்கும் ஏதோ சந்தோசமாக இருக்கமுடியுது. நீங்கள் இஞ்சை இருக்கேக்கை பெரியம்மா என்னைக் கொண்டு வேலைசெய்விக்கிறதும் குறைவு. ஏசுவதும் குறைவு. காரணம், நீங்கள் அதைப் பார்த்துவிட்டு வேறை எங்கையாலும் போய்ச் சொல்லிவிடுவியளோ என்ற பயம். அதனாலைதான் நீங்கள் இஞ்சை வாறது எனக்குக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்குது. அடிக்கடி வாங்கோ. இந்த ஊரிலை உங்களோடைதான் நான் மனம்விட்டுப் பழகுறன்...''

புவனாவால் மேலும் தொடர்ந்து பேசமுடியவில்லை. கண்கள் கலங்கி கண்ணீர் அவள் கன்னத்தில் வழிந்தோடியது.

புவனா அழுவதைக் கண்டதும் கிளி திகைத்துப்போனாள்.

'சே... நான் அப்டிச் சொல்லியிருக்கக்கூடாதுதான்' அவள் தன்னைத்தானே நொந்துகொணடாள்.

மனம்நொந்து அழும் புவனாவுக்கு இப்போது தேவையானது மனதுக்கிதமான நல்ல ஆறுதல் வார்த்தைகளே எனப் புரிந்துகொண்டாள் கிளி.

''புவனா என்ன இது? நான் ஆரம்பத்திலேயே சொன்னான், பெண்கள் எதெற்கெடுத்தாலும் இப்படி அழக்கூடாதென்று. நான் அப்படிச் சொல்லியிருக்கக்கூடாதுதான். புவனா உனது மனதை நோகச்செய்து போட்டன். என்னை மன்னிச்சிடம்மா...'' கூறிக்கொண்டே புவனாவின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரைத் தனது கரத்தினால் துடைத்துவிடுகிறாள் கிளி.

கிளி கூறிய வார்த்தைகளைக் கேட்டு புவனாவின் மனம் நெகிழ்ந்தது.

''என்ன கிளியக்கா நீங்கள், பெரிய வார்த்தையெல்லாம் பேசுறியள். நான் உங்களை மன்னிக்கிறதா? இரத்த உறவெண்டு பெரியம்மா ஒருத்தி இருந்தும், அவவிடம் எந்தவிதமான அன்பும் பாசமும் கிடைக்காத நிலையில் உங்களிடம்தான் நான் அந்த அன்பையும் பாசத்தையும் எதிர்பார்த்தன், அனுபவிச்சன். நான் எதிர்பார்த்ததுக்கு மேலாகவே நீங்கள் என்னிலை எவ்வளவு அன்பாய் இருக்கிறியள் கிளி அக்கா. பெரியம்மாவைவிட உங்களுக்கு அப்படிச் சொல்ல உரிமையிருக்குது அக்கா.''

புவனா கூறிய வார்த்தைகளைக் கேட்டு கிளி தனக்குள் சிரித்துக்கொண்டாலும், பெரியம்மாவினால் அவள் எவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

''அது சரி, என்னிலை இவ்வளவு அன்பாக இருக்கிற நீ, நாளைக்கு கலியாணம்முடிச்சு உன்ரை மனிசனோடை போய்விட்டால் என்ன செய்வாய்...?'' அவளது கன்னத்தில் வழிந்து நின்ற கேசத்தினை ஆதரவாக எடுத்து காதின் பின்னோரம் செருகியபடி கேட்டாள் கிளி.

கலியாணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் புவனாவின் முகம் நாணத்தோடு சிவந்துகொள்ளுமென்று எதிர்பார்த்த கிளிக்கு, திடீரென அவளது முகம் விகாரமடைந்து விறைத்துப்போனதையே காணமுடிந்தது.

''ஏன் புவனா உனக்குக் கலியாணம் செய்துகொள்ள விருப்பமில்லையா....?''

''கிளி அ... க்... கா...''

கிளி கேட்ட கேள்வியைக் கேட்டு அலறியேவிட்டாள் புவனா. மேளதாள வாத்தியங்களோடு உறவினர்கள் புடைசூழ மணவறை மீது நாணத்தில் முகம் கவிழ்ந்திருக்க, ஓர் ஆண்மகன் தாலி எடுத்து தனது கழுத்தில் கட்டுகின்ற அந்த நிகழ்ச்சியை புவனாவால் கற்பனையில் கூட உருவகிக்கமுடியவில்லை.

(பாட வருவாள்...)

### யார் குற்றம்?

புதிய யுகத்தில்
நாய்களுக்குக் கூட
நவீன பாணியில்
தங்கும் விடுதிகள்
ஓய்வு நாற்காலிகள்
எமது மண்ணில்
அனேக இடங்களில்
குழந்தைகள் யுடிப்பதற்குக் கூட
ஒரு ஒற்றை வாங்காவது
இல்லாத நிலை.....
மர நிழலும்
மணல் தரையுமே
தஞ்சமாக....
இது யார் குற்றம்
இந்த நிலை என்று மாறும்?

புதுக்கவி.

### உன் நினைவால்...

பத்துமாதம் சுமந்துன்னை
பக்குவமாய் பெற்றேன்
பல இரவு கண்விழித்து
பாசமுடன் வளர்த்தேன்
பாலூட்ட நீயும் நீராட்டத் தானும்
ஆராரோ என்று தாலாட்டுப்பாடி நாளும்
பக்கத்தில் படுத்துறங்க
பலவண்ணப் பாவையதை
பரிவோடு கொண்டாய்!
ஊர்கூடி ஓலமிட உன் ஆவி போனதே
பொல்லாத நோயினால் - இன்று
நீயாக நான் மாறி நாள்தோறும்
உன் நினைவாலே பாலூட்டி சோறூட்டி
பக்குவமாய் நீராட்டிப் படுத்துறங்க
பஞ்சணை போட்டும் பார்க்கின்றேன்
என் (நின்)மதி இழந்து....

த. அகல்யா,
சந்நிதி.

### மனிதம் மரணித்ததால்...

ஆறறிவு இருந்தும்
ஆறாம் அறிவான பகுத்தறிவைப்
பஞ்சாய்ப் பறக்கவிட்டு
நாயிற் கடையாய்த் தினம்
நீதி கெட்டு வாழும்
மனிதம் அற்ற மனிதரிடையே
ஐந்தறிவே ஆனாலும்
சிந்தையில் தெளிவுடனே
சீராக வாழ்ந்திடும் நீவிர்
பாந்தமாய்க் கடற்கரையில்
பால் நிலவை ரசித்தபடி
காற்று வாங்குவது சாலவும் நியாயமே!
ஏனெனில்....
மனிதம் மாநிலத்தில் இன்று
மரணித்ததால்.....

பிரம்ம சாத்வி.

### நன்றியுள்ள மிருகமிவை!

மனிதநேயமற்றவராய்
மனமிரக்கமில்லா
மனசுடையவராய்
சுயநலவாதிகளாய்
உப்பிட்டவரை உள்ளளவும்
மறந்தவராய்
கூட இருந்தே குழிபறிக்கும்
நச்சு மரங்களாய்
பற்பல குணங்களில்
மந்திகளாய் இருக்கும்
மானிட வர்க்கமதில்
இவ் ஐந்தறிவு ஜீவன்கள்
உண்மையில்
எத்தனையோ பலப்படி
மேலானவை.

V.S.ஜீபத்,
மல்லாவி.

### யாரறிவார் பராபரமே?

ஆட்டுவித்தாலாடும்
மனிதர்கள் போல்
ஆடும் பொம்மைகளோ?
வேடிக்கை காட்டிய பின்
களைத்துப் படுத்தனவோ?
சாவிகொடுத்தாலாடும்
படையினரால்...
கொல்லப்பட்டோர்
இவர்கள் தானோ?
யாரறிவார் பராபரமே?

மாருதி,
ஆவரங்கால்.

# மௌனத்தின் தேடல்கள் – 18

### பிரபலம்

என் எஜமான்
அரசியல்வாதி ஆனதனால்
பொழுதைக்கூட நிம்மதியாய்
போக்க முடிவதில்லை
இந்தப் பத்திரிகை
புகைப்படப்பிடிப்பாளர்களால்.

S.சங்கீதா,
யாழ்.பல்கலை.



### உள்நாடும் வெளிநாடும்

செல்லப் பிராணிகளுக்கு
நேரம் தவறாமல் சாப்பாடு
பஞ்சுமெத்தைதனில்
பகட்டான சொகுசு வாழ்க்கை
வெளிநாட்டில்...
மானம் மறைக்க
ஒருமுழம் துணியின்றி...
ஒருசாண் வயிற்றுப் பசிபோக்க
வழியின்றி...
அவலமாய்த் திரிகின்றன
மனித ஜீவன்கள் பல
உள்நாட்டில்...
உள்நாட்டு – வெளிநாட்டு
நாகரிக வளர்ச்சி வேகம்
இதுதானோ....?

N.சுதா, நாவலர் வீதி.

### நீர்த்தடாகம்

வெளிநாட்டிலிருந்து வந்து
வெளித்தேசம் பார்க்கும் நீங்கள்
நீர்த்தடாகம் தன்னில்
நீந்தும் அழகைப் பார்க்க
கண்கொள்ளாக் காட்சியென
கண்டவர் மயங்கும்
கற்சிலை ஓவியமோ?
கண்கொள்ளாக் காட்சியென
ஒளிவடிவாய் அமைந்ததுவே
ஓலக்கமாய்த் திகழ்கிறது.

P.செல்வராணி.
வட்டுக்கோட்டை.

### அழகுப் போட்டிக்காய்...!

உலக அழகுப் போட்டிக்கு
அண்டை நாட்டிலிருந்து
அழகாய் வந்திருக்கும்
போட்டியாளர்கள்
இவர்கள் போலும்!

க. விக்னா,
யாழ்.பல்கலை.

### கலிகாலம்

கடற்கரை மருங்குகளில்
கன்றாவி உடையணிந்து
உல்லாசமாய் மல்லாந்த
பலரை இப்படங்களிற் கண்டேன்
உங்களுக்குமா....
இந்நிலை...? எனின்
காலமிது கலிகாலம்
என்பது கறெக்ட்!

ஜெ.சுபாஜினி,
நல்லூர்.

### கல்வெட்டு

காலத்தின் காவியத்தை
காலப் பதிவாக்கி
கல்லில் சிற்பமாக்கி
கற்றலின் சிறப்பை உணர்த்த
வர்ணம் எனும் தூரிகையால்
வடிவம் எனும் கருவமைத்து
காலமெல்லாம் அறியவென்று
காத்திருக்கும்
தொல்கல்லின் சரித்திரமே!

செ.பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.

### (அ)நியாயம்

மனிதனோ
நிம்மதியற்று
தூங்க இடமின்றி
தவிக்கிறான்....
நீங்களோ
நிம்மதியாக
பஞ்சுமெத்தையில்
தூங்குறீர்களே....
இத் நியாயமா....?

K.K.அன்ரன்,
மீசாலை,

### ஸ்தானம்

உனக்கொரு
உன்னத இடத்தை
உள்ளத்தில் வைத்திருந்தால்
உள்ளபடி குரைத்துக்கொண்டு
ஊர்சுற்றித் திரிவதுதானே!
ஆசனத்தில்
அமர்ந்துகொண்டு
ஆணை (ஊழை) யிடுகிறாயா?

சுஜாரி,
ஆவரங்கால்.

### மாற்றத்தின் ஏற்றமிது!

விரைந்திடும் விஞ்ஞானத்தால்
அறிவியல் யுகமொன்று
அரவணைக்கத் துடிக்கும்
அதிவேக மாற்றம் இதுதானா?
மனித இனமெல்லாம்
மனிதத்தைத் தொலைத்து நிற்க...
நன்றியுணர்வு காட்டி
நலம் புரியும் இவற்றிற்கு
வரும் நாட்களில்
வழங்கவேண்டிய இடமிதுதானா?

R.கோமதி, பொலிகண்டி.

### மௌனத்தின் தேடல்கள் – 20



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை *மிகச் சிறிய* கவிதைகளாக்கித் *தபால் அட்டையில்* சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**கிடைக்கவேண்டிய இறுதித்திகதி** - 24.07.2004

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 20

சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

### தத்துப்பிள்ளை

மழலையதைச் சுமந்திடாத
மனங்கனிந்த அன்னையவள்
பிள்ளைக்குப் பிள்ளையாய் – உனைத்
தத்தெடுத்துத் தாலாட்டுபவள்
'ஷொப்பிங' போகவென
தள்ளுவண்டியில் தள்ளிவந்து
வாசலில் விட்டு விட்டு
பொருள் வாங்கப் போய்விட்டாளோ?
அதனால்...
அன்னையவள் வரும்வரை
ஆனந்தமாய் ஒரு குட்டித்தூக்கமோ?

V.உமா, புலோலி.

### உல்லாசப் பயணிகள்...

உல்லாசப் பொம்மையே!
உன்னைப் போலவே
உல்லாச அன்னியர்கள்
உடைந்த நம் தேசத்தில்
உல்லாசமாயிருக்க வந்திங்கு
உடைந்த நெஞ்சங்களிடம்
உளறிச் செல்கின்றனர்
'உதவுவோம்' என்று!
போனவர்கள் கடிதம்கூட
போடவில்லையே!

அ.பிறன் யு.

### வித்தியாசம்


கல்லணையில்
கால்மேல் கால் போட்டு
ஒய்யாரமாய்க் குளிர்காயும்
உல்லாசப் பயணி(நாய்)களே!
உங்களைக் கண்டு
எங்களூர் நாய்கள அதிசயமாய்ப்
பார்க்க வரப்போகின்றன கவனம்!
ஏனென்றால் - நீங்கள்
அவர்கள் இனமாக இருந்தாலும்
குரைப்பால் மட்டும்தான்
ஒற்றுமை - வளர்ப்பில்...
எங்களூர் நாய்களுக்கெல்லாம்
மூன்று கால்கள்தான்! - மற்றது
மண்ணோடு மண்ணாக.....

S.ராணி, திருநெல்வேலி.

### எல்லாம் பொம்மை

நானும் பொம்மை நீயும் பொம்மை
எண்ணிப் பார்த்தால் எல்லாம் பொம்மை
நாட்டை ஆளும் அரசும் பொம்மை
அரசில் பங்கேற்கும் கூட்டுக் கட்சிகளும் பொம்மை
நாடாளுமன்றின் எதிர்க்கட்சியும் பொம்மை
கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாமே பொம்மலாட்டம்.

கந்தஞானமுத்து.கைதடி.



4 ஸ்டூடண்ட்ஸ்
பரத்-கோபிகா

சினிமாச் சிதறல்

## துள்ளுற வயசு

பிளஸ்ரூ பயிலும் தீவிகா, மாணவன் ராகவனைக் காதலிக்கிறார். மற்றொரு மாணவனான கோபி அவர்களின் காதலுக்கு இடையூறு செய்கிறார். 'துள்ளுற வயசு' படத்துக்காகத்தான் இந்த தீம்.

ராகவன் பாத்திரத்தில் ராகவ், தீவிகாவாக தீவிகா, கோபி பாத்திரத்தில் கோபி நடிக்கின்றனர். இவர்கள் மூவருமே புது முகங்கள்.

ஒளிப்பதிவு – ராஜராஜன்.
இசை – கார்த்திக் ராஜா.
கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு, இயக்கம் – கோபால்.




## முக்கிய வேடத்தில் கே.ப
'ஒளி

முரளி ஹீரோவாகவும் பூனம் ஹீரோயினாகவும் நடித்துவரும் நடிக்கிறார். படத்தில் அவருக்கு முக்கிய கேரக்டராம்.

அவருடன் விஜயகுமார், ரகுவரன், ரமேஷ்கண்ணா, பாண் வசனம். பாடல்கள், இசை –( டைரக்கஷன்.டி. ஒளிச்சந்திரன்.

## எலுமிச்சையில்

பாரதிராஜாவின் மகன் மனோஜை உங்களுக்கு ஞாபகம் தில் நடிக்க்விருக்கிறார். படத்தின் பெயர் 'லெமன்'. இதில் ஹீரோ பற்றிய கதை இது என்றார் பட இயக்குநர் சாய்மோகன்.

## சினேகாவின் சர்க்கிள்

ஏ.வி.எம். ஸ்ருடியோவில் 'ஆயுதம்' பட சூட்டிங்கில் ஏராளமான குழந்தைகள். அவர்களுக்கிடையே பச்சை சுடிதாரில் பளிச்சென்ற புன்னகையுடன் சினேகா.

**'என்ன சினேகா சந்தோஷமா இருக்கிறீங்க? வசூல்ராஜாவில் நடிப்பதாலா?' என்று யூகத்தில் கேட்டதும்,**



''பின்னே இருக்காதா? கமல்ஜியுடன் நடிப்பது என்பதுதான் எனது விருப்பம். அந்த வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கே பெருமையாய் இருக்கு'' என்றார்.

''குறைந்த படங்கள் செய்தாலும் நல்ல கரக்டர்கள் செய்ய வேண்டும். ஆயுதம் படத்திலே டாக்டருக்குப் படித்துவரும் பிராமணப்பெண் வேடம். இதில் பிரசாந்த் எனக்கு ஜோடி.

'அது'(படத்தின் பெயர்) ஒரு த்ரிலான படம். அதில் வேறு விதமான சினேகாவை நீங்கள் பார்க்கலாம்.

**நம்வர் 1 இடத்தை பிடிக்கனும் என லட்சியம் ஏதாவது இருக்கிறதா?**

''எனக்கு நல்ல ரசிகர்கள் இருக்கிறார்கள். நம்பர் 1 மீதெல்லாம் நம்பிக்கை இல்லை. இப்போ இருக்கிற எல்லா ஹீரோயின்களும் நல்லா நடிக்கிறார்கள். நல்ல படங்களும் வருகிறது. குறையே சொல்லமுடியாத அளவுக்கு இருக்கு. என்னைப் பொறுத்தவரை என்னை ரசிகர்கள் அவங்க வீட்டுப் பெண்ணா நினைக்கிறாங்க. அதுபோதும்''

**இயல்பான பாத்திரங்களில் நடிக்கும் திறமை உங்களிடம் இருக்கு. அதுமாதிரியான ரோல்களில் நடிக்க ஆசையில்லையா?**

''எனக்குன்னு ஒரு சர்க்கிள் இருக்கு. அதை விட்டு நான் வெளியே வரமாட்டேன். கிளமராக நடிக்கமாட்டேன். இந்த முடிவை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றிக்கொள்ளமாட்டேன். ஒரு பாட்டுக்கு வரமாட்டேன். அது டீசன்டான பாட்டாக இருந்தாலும் சரி. இமேஜ் பாதிக்கிற வகையில் நடிக்கமாட்டேன். இவையெல்லாம் நான் சொன்ன சர்க்கிளுக்குள் அடங்கும்.''

**'கேர்ள் ப்ரண்ட்' அப்படின்னு ஒரு படம் பலத்த சர்ச்சையை கிளப்பிட்டு இருக்கு. இந்தப் படத்தைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?**

அந்தப் படத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஆனா படம் பார்க்கேலை. பார்க்காமல் எப்படிச் சொல்லமுடியும் என்றவாறு நழுவினார் சினேகா.




ஆட்டோகிராபில் அசத்திய மல்லிகாவுக்கு இப்போது
ஆனால் ஹீரோயினாக நடிக்கும் படங்கள் மிக
'மகா நடிகன்', விஜயுடன் 'திருப்பாச்சி' எனப் பல படங்களில்

## 'ஷாக்'



சமீப காலமாக ஒரு பாட்டுக்கு மட்டும் வந்துகொண்டிருந்த மும்தாஜ்க்கு 'லக்' அடித்திருக்கிறது. 'மகா நடிகன்' படத்தில் சத்தியராஜ்க்கு ஜோடியாக வருகிறார். இந்தப் படத்தில் நமீதா, மல்லிகா நடித்தாலும் தனக்கு முக்கிய ரோல் என்கிறார் மும்தாஜ்.

## விஜயகாந்தின் அடுத்த படம்

'கஜேந்திரா'வைத் தொடர்ந்து விஜயகாந்த் நடிக்கும் புதிய படத்திற்கு 'நிறைஞ்ச மனசுக்காரன்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சமுத்திர கனி இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்குகிறது. விரைவாக படப்பிடிப்பை நடத்தி இந்த ஆண்டுக்குள் படத்ததை ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளார் விஜயகாந்த். இதில விஜயகாந்துக்கு ஜோடியாக நடிக்க நவ்யா நாயரைக் கேட்டுள்ளனர்.

## கிட்டு


**எஸ்.வி.ஏ.டி, சினிமேகஸ் என்ற புதிய படநிறுவனம் நிறைந்த பொருற் செலவில் தயாரிக்கும் படம் 'கிட்டு'.**

**இப்படத்தில் ரவிராகுல் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் கஸ்தூரிராஜா இயக்கத்தில் அன்பாலயா பிரபாகரன் தயாரிதத 'ஆத்தா உன் கோயிலிலே' படத்தில் அறிமுகமானவர். அத்துடன் 'மிட்டா மிராசு' உட்பட பத்துக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**கதாநாயகியாக பெங்களூரைச் சேர்ந்த ஜோதி என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். மற்றும் நாசர், பொன்னம்பலம், முத்துக்காளை, கோவைசரளா, அனுகாசன், 'விருமாண்டி' பட வில்லன் சண்முகராஜன் ஆகியோருடன் இன்னும் சில முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.**



...விதை'
...ஷி, சனா



### ...கே.பாக்கியராஜ் நடிக்கும் 'ஒளி'

...த்துவரும் படம் 'ஒளி'. இதில் கே.பாக்கியராஜ் கௌரவ வேடத்தில் ... , பாண்டு, பாலாஜி, ரேணுகா நடிக்கின்றனர். கதை திரைக்கதை, ...ந்திரன். ஒளிப்பதிவு.செல்வா.

### ...'ல் தீவிரவாதம்

...நாபகம் இருக்கிறதா? அவர் விரைவில் ஒரு அதிரடிப் படத் ...ல் ஹீரோ, ஹீரோயின் என்று யாரும் கிடையாது. தீவிரவாத்தைப் ...ன்.

### ...போஸ்'
### ...த், சினேகா



...இப்போது ஏகப்பட்ட படங்கள். ...கள் மிகக்குறைவு. சத்தியராஜுடன் ...டங்களில் சைடு ரோல் அவருக்கு.

### இன்னொரு காந்த்

'துள்ளல்' படத்தில் இயக்குநர் ப்ரவிண் காந்த் ஹீரோவாக நடிப்பது தெரிந்ததே. இப்படத்தில் தனக்கென புதிய ஸ்டைல்களை அறிமுகப்படுத்துகிறாராம் ப்ரவிண்காந்த்.

இன்னொரு 'காந்த்' தமிழ் சினிமாவுக்கு கிடைப்பார் என நம்பிக்கையுடன் புகழ்கிறது 'துள்ளல்' பட யூனிட்.

### கிளாமர் ராதிகா

'மீசை மாதவன்' படத்தை ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார் குட்டி ராதிகா. இப்படத்தில் நடிப்புடன் கவர்ச்சியும் காட்டியிருக்கிறார். 'மசை மாதவனை' தவிர கையில் வேறு படங்கள் இல்லாததால் ரீ.வி தொடர்களிலும் முயற்சித்து வருகிறார் ராதிகா.

### ஹீரோ ஆசை

விவேக்கின் ஹீரோ ஆசை 'சர்வர் சுப்பு' மூலம் நிறைவேறுகிறது. இதில் அவருக்கு இரட்டைவேடம். துள்ளல் படத்திலும் ஹீரோவுக்கு இணையான வேடத்தை ஏற்றிருக்கிறார் விவேக்.

### ...க்கே எனக்கா'
### ...ான், ஆனந்தி



# 'மச்சி' திரை விமர்சனம்



''உலகத்திலே காதலிக்காதவங்க கூட இருக்கலாம். ஆனால் நண்பர்கள் இல்லாதவங்கன்னு யாரும் இல்லே'' என்று வசனம் பேசுகிறார் படத்தின் நாயகன் துஷ்யந்த் (சிவாஜியின் பேரன்). இப்படியொரு சோக வசனம் பேசவேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏன் ஏற்பட்டது? அதுதான் கதையே!

ஒரே ஒருகணம் தலைதூக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பான முன்கோபத்தால், வில்லனின் மகன் மது கைவைத்து விடுகிறார்கள் நாயகனின் உயிர் நண்பர்கள். விடாது கறுப்பு போல துரத்திக்கொண்டு வரும் வில்லனை அழித்து, நண்பர்களை டாக்டர்களாக்குகிறார். மருத்துவம் படிக்க வந்த இடத்தில்தான் இந்த இளமை ரௌத்திரம்.

கதை என்னவோ கடுகளவுதான். அதை யதார்த்தமான காட்சி அமைப்புகளோடு, விறுவிறுப்பான திரைக்



கதையில் சொல்லமுயன்று, ஓரளவு வெற்றி பெற்று விடுகிறார் அறிமுக இயக்குனர் கே.எஸ்.வசந்தகுமார்.

ஆனால் இரண்டாவது பாதி திரைக்கதையில், நண்பர்களை வில்லன் கடத்துவதும், நாயகன் கோபத்தோடு போய் 'உசிரக் காப்பாத்துற டாக்டர் தொழில் படிக்க வந்திருக்கோம். எங்களைக் கொலைகாரனா ஆக்கிடாதே' என்று கையை ஓங்கி டயலாக் பேசிவிட்டு தப்பிவருவது, மீண்டும் நண்பர்களை வில்லன் கடத்துவது என்று எலாஸ்டிக் மாதிரி இழுத்தடிக்கிறார்கள்.

இருப்பினும் யதார்த்தமான சென்டிமென்டுகளைக் கையாள, மெகா பட்ஜெட்டோ, தொழில்நுட்பமோ தேவையில்லை என்பதை நிரூபித்திருக்கும் இயக்குனர் பாராட்டுக்குரியவர்.

வில்லன் பசுபதியின் காட்டுக் கத்தல், அவரது மிகையான நடிப்பு, சண்டைக்காட்சிகள், எல்லாம் வியாபார சினிமாவில் வழக்கான மிகைப்படுத்தல்கள்.

அறிமுகப் படத்தைக் காட்டிலும் பலமடங்கு பிரமாதப்படுத்திவிடும் துஷ்யந்த், தாத்தாவின் பெயரை ஓரளவு காப்பாற்றிவிடுகிறார்.

அறிமுக நாயகி சுபா புஞ்சாவும் அஞ்சாமல் அசத்தியிருக்கிறார்.

'மச்சி'யில் பரிதாபமாக உச்சுக் கொட்ட வைக்கும் பிஸ்கட் ஃபெயிலியர் யாரென்றால், ஏ.ஆர்.ரைகானா. சந்தேகமே இல்லாமல் ரகுமானின் தங்கைதான் படத்திற்கு இசை. இரைச்சல் பாதி, பழசு பாதி என்று இம்சையான கம்போசிங்.

இந்தக் குறைகளைத் தாண்டி 'அட படம் நல்லாயிருக்கே' என்று தியேட்டரை விட்டு வெளியே வரும்போது உணரவைத்து விடுவதுதான் இயக்குனரின் வெற்றி.

*மச்சிக்கு மச்சம் இருக்கிறது.*




# 'லகான்' நாயகியுடன் பிரசாந்த்



பிரசாந்த் மச்சக்காரர் என்பது ஊரறிந்த விஷயம். தமிழ்ப்பட கதாநாயகர்களில் மும்பை அழகிகளுடன் அதிகமாக ஆட்டம் போட்ட பெருமை இவருக்கு உண்டு. ஐஸ்வர்யாராய் உடன் முதலில் டூயட் பாடியதும் இவர்தான்.

இப்போது சூப்பர்ஹிட் இந்திப் படமான 'லகானில்' கதாநாயகியாக நடித்து மும்பைத் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம்வரும் கிரேசிசிங், பிரசாந்துடன் ஜோடி சேருகிறார். அம்மணி நடிக்கும் முதல் தமிழ்ப்படம் இதுதான். படத்திற்குப் பெயர் 'ஜாக்கி'

இப்படத்தை ஐஸ் படத்தை இயக்கிய ரகுராஜ் இயக்குகிறார். இப்படத்தின் தயாரிப்பாளர் லண்டனைச் சேர்ந்தவர் என்பதால், தொடர்ந்து 40 நாட்கள் லண்டனிலேயே படப்பிடிப்பை நடத்தி, படத்தையே முடித்து விடுகிறார்களாம்.

கட்டவிழ்த்த காளைபோல தொடர்ந்து பல படங்களில் ஒப்பந்தமாகி வரும் பிரசாந்த் ஆயுதம், ஜாக்கி படங்களை முடித்துவிட்டு, புவன் இயக்கத்தில் 'அடைக்கலம்' என்ற படத்திலும் முகில் இயக்கத்தில் 'அருண் ரிங்கு ஹரிணி' என்ற படத்திலும், செய்யாறு ரவி இயக்கதில் 'ஆதி எம்.ஏ.பி.எல்.' படத்திலும் நடிக்கிறார்.

# கவிதைக் கலசம்

## கடனாளி



உறவுக்குப் பகை
கடன் என்பார்கள்
ஆனால்.....
அந்தக் கடன்தானே
உன்னையும் என்னையும்
இத்தனை நாளும்
உறவுப்பாலத்தில்
இணைத்து வைத்திருந்தது
கேட்டதெல்லாம் கொடுத்தாய்
எதையும் கேட்காமலே
சென்றுவிட்டாய்......
என்னை வாழ்நாள் முழுவதும்
கடன்காரனாகவே ஆக்கிவிட்டு...!

புதுக்கவி.

## பூஜ்ஜியம்



நேற்றுவரை
நீ வாழ்ந்த வாழ்வின்
அர்த்தத்தைத் தேடிப்பார்
எல்லாமே தெரியும்
பூஜ்ஜியமாக!
வழிகாட்டவோர்
துணையில்லா வாழ்வாக....
வருத்தமும் துன்பமுமே
இதுவரை தேடிய சொத்தாக....
உனது கடந்துபோன காலங்கள்
நரை திரண்டு மூப்பெய்திய
இன்றையவுந்தன் முதிர்காலத்துக்கு
முதிசமாகத் தந்திருப்பது
முற்றிலும் நியாயமாகுமோ?
அணைக்க அன்பும்
அன்புடன் கூடிய ஆதரவும்
ஆதரவோடு சேர்ந்த
வாழ்வும் வளமும்
வந்து நிறைந்திருப்பின்.....
வசந்தம் வீசியிருக்குமுன்
ஒவ்வொரு வயதினிலும்.....!
இன்று
பட்டமரக்கொப்பாகி
நீ
பரிதவித்து நிற்கின்றாய்
என்றும்
பாராமுகமாகவே இருக்கின்றது
இந்தப் பாழ்பட்ட சமூகம்.

அன்பரசி,மயிலிட்டி.

## கைதி

சின்னச் சின்ன ஆசைகள்
சிறைத் தண்டனைக் குற்றங்களாய்
சிருஷ்டிக்கப்பட்டு
பள்ளி வயதுப் பந்தங்கள்
பகை நாட்டு உறவுகளாய்த்
தீர்மானிக்கப்பட்டு
பருவ வயது ஏக்கங்கள்.
மரணதண்டனைக் குற்றங்களாய்த்
தீர்ப்பளிக்கப்பட்டு
வாழ்வு எனும் சிறையில்
மனிதம் அற்ற மனிதர்களிடையே
அணுஅணுவாய்
மரணித்துக்கொண்டிருக்கும்
நான் ஒரு திறந்தவெளிக் கைதி.

பிரம்ம சாத்வி.

## ஏழை எம் உறவுகள்

நாம் ஏழைகள் என்பதால்...
உறவுகள் யாரும் உறவுமுறை கூறி
ஏமை அழைப்பதற்கு வெட்கப்பட்டு...
விலகிச் செல்கின்றன
நெருங்கிய உறவுகள் கூட
எம்முடன் உறவாடுவதற்குத்
தயங்குகின்றன
ஆனால் நெருக்கமில்லாத
பணக்காரர்களுடன்
புதிதாக உறவுமுறைகள் கூறி
வில்லங்கமாய் உறவாடுகின்றனர்!
காரணம்.... பணம்!
பணம் இருந்தால்தானே
எங்கும் எதிலும்
எப்பொழுதும் மரியாதை!
மனம் குணம் அன்பு பாசம்
இவற்றையெல்லாம்
குப்பைத்தொட்டியில்
இடவேண்டிய காலம் இது!
பணம் இருந்தால் போதும்
எல்லாமே அவர் வசம்தான்
என் செய்வது ஏழைகள் நாம்?
ஆனாலும் ஓர்நாள் சந்தோஷம்
ஏன் தெரியுமா....?
ஏழைகள் என்றொரு ஸ்தானம்
கிடைத்ததால்தானே
உறவுகள் யாவரினதும்
சுயரூபங்களை...
காணமுடிகின்றது!
காலச் சுழற்சியில்
ஏழையும் ஓர்நாள்
பணக்காரனாவான்
அதுபோல் எம் வாழ்வும்
மாறிடலாம்...
அந்தவேளையில்...
இன்றைய ஒதுக்கிடும் உறவுகள்
மீண்டும் மறுவேடம் பூண்டு
எம்முடன் உறவாட
ஆசை கொள்ளும்...
அவ்வேளை வரும்வரை
நகர்ந்து செல்லும்
ஏழையின் வாழ்க்கைப் பயணம்!

கவித்தோழி,சங்கானை.

## நேற்றைய காற்றோடு

யன்னலோரமாய் நேற்று
என் தேகம் - திருடிய
தென்றல்... இன்று?
என் தேகத்தை
எரித்துக்கொண்டிருக்கிறது
சுகமான செய்தியினை
சுமந்து வந்த நேற்றைய காற்று
என் இனிய மனதில்
மாற்றம் தந்தது....
ஓர் வருடம் ஓர் நொடியில்
மறைந்த சுகம்
இன்றைக்கு என்னருகில்
தீமூட்டிப் போகிறது!
விழியோரம் சுமந்த - என்
விந்தை மொழியின்று
காணாமல் போய்விட்டிருந்தது
கனத்த இதயமதில்
கானலாக மறைந்த
அவள் நினைவுகள்
நெஞ்சினோரமாய் வந்து
சிதையாக மூகிழ்க்கிறது!
உயிரோவியமாய்
உள்ளமதில் சுமந்தவள்
உன் உயிராம்
எனைவிட்டு போய்விடவா
என் இதயம்தனில்
இடம்கொண்டாய்...?
அன்பு எனும் அஸ்திரத்தால்
அள்ளி வைத்த சொந்தமே!
என் நீண்ட பயணங்களில்...
நீங்காத நினைவுகளாய்
தொடரும் - உன்
நினைவுகளுடன்...
என்றும் நான்...

மா.சிவசோதி,
கரவெட்டி.

## முற்றுப்பெறா எச்சங்கள்

புற்களிற்கும் பூக்களிற்கும்
பனித்துளி மேல்க் காதல்
அதனால் புல்லரித்துப் போனது
என் தேகம்!
சிட்டு ஒன்று தீராத
மோகம் கொண்டு மொட்டு ஒன்றை
முத்தமிட - சுற்றி(ச்)
சுற்றி வந்தது - பட்டு
வர்ண ஜாலங்களாய்
பட்டாம் பூச்சிக் கூட்டம்
வானில் வட்டமிட்டு
வலம்வர - ஆதவன்
எனும் ஓர் ஆடவனைக் கண்டு
மொட்டவிழக் காத்திருக்கும்
கன்னிப்பெண் கமலமும்
ஓ.....
இன்று பார்த்தபோது - இவ்
இயற்கை தந்த இன்பங்கள் எல்லாம்
மனிதத்தின் மரணத்தோடு
மடிந்து மண்ணாகிப் போனதென
கட்டியம் கூறுவதாய் - இன்னும்
முற்றுப்பெறாத எச்சங்கள்
தொக்குகளாய் நிற்கின்றன!

M.சுதாகர்,பருத்தித்துறை.

## அஸ்தமனமாகாயோ....



உன் இதழ்கள் இறுக மூடி உள்ளதால்
இனிமையான வார்த்தைகளை இழந்து
மௌனியாய் இருக்கிறாய்
இதயவானில் சிறகடிக்கும் - உன்
சிந்தனைச் சிறகுகளை அமைதியெனும்
தாழ்போட்டுக் கொண்டு
உள்ளேயே தவிக்கிறாய்
வானம் கூட பனித்துளி சிந்தி
இருளை கழுவிட முனையிது
நீ மட்டும் அமைதிப் போர்வைக்குள்!
நேற்றைய நிகழ்வுகள் இன்று வெறும்
நினைவுகள் தான் நிஜங்களில்லை
மானிடனே உன் அமைதிப் போர்வையை
விலக்கி கொஞ்சம் நிமிர்ந்து பார்
வானம் கூட உன் பக்கம்தான்!

M.சந்திரகலா, யோகபுரம்.

## பெண்ணே உனக்கு...



நீயாய் பேயாய் பாடுபட்டாலும்
நாலுவேஷமதில் நடித்திட்டாலும்
நன்றி கெட்ட மனித நாவு
நன்மை சொல்லப் போவதில்லை
பின் தூங்கி முன்னெழ வேண்டுமென்பர்
பிரசவ கருவி ஆக்கிடுவர் - தம்
போகப் பொருளாக்கிடுவர் - காலம்
போகப்போக அடி உதை தந்திடுவர்
அடுப்பங்கரையில் முடக்கிடுவர்
அடிமை விலங்கு பூட்டிடுவர்
சீதனம் என்ற வெகுமதியை
சீர்வரிசையாய்க் கேட்டு நிற்பர்
காமம் மிகுந்த வேளைதனில்
காதல் மொழி பேசிடுவர்
புதைகுழி பலவும் அமைத்திடுவர்
புத்திசாலி என நினைத்திடுவர்
உலகில் உயர்ந்தவள் நீயம்மா
நீரோசையின்றி உன்னினம் வாழ
நீயும் நிமிர்ந்தே நின்றிடு!

ஸ்ரீ.இரவீந்திரகலா,
உடுவில்.

## சிரிப்பில் சிந்திப்பு...! 22



சுப்பரும் மகனின் மணப்பேச்சை மகிழ்வாய் தரகரிடம் கூறவே
இப்போ யாழில் மாப்பிள்ளைக்கு விலைவாசி கூடவென தரகரும் சொல்லவே
அப்போ மகனிற்கு எத்தனை இலட்சம் என்றார் சுப்பருமே
சுப்பர் கேட்டதும் சுறுக்காய பெண்களின் போட்டோக்களை தரகரும் போட்டாரே
முப்பது போட்டோவில் முதல் படத்தைக் காட்டி வெள்ளை வனப்புடன் படத்தில் நின்ற பெண்ணையுமே
தோப்பும் துணையாய் தந்தே பத்து இலட்சமும் தருவினமாம் என்றதுமே
இப்போ அடுத்த படத்தைக் காட்டியே அழகும் நிறமும் சற்றுக் குறைவு இருபது இலட்சம் என்றாரே
சுப்பருக்கும் இலட்ச ஆசை கூடவே இதைவிட குறைந்த நிறமாய்ப் பாரென்றாரே......

(சுப்பர் வருவார்...)

பொன்.சுகந்தன்,
நெல்லியடி.

## உங்களிடையே மனிதனை தேடுங்கள்



பகலில் ஒருவன் விளக்கை ஏந்திய வண்ணம் தெரிவிலே சென்றுகொண்டிருந்தான். பலர் நகைப்போடு அவனை வேடிக்கை பார்த்தனர். ஒரு பெரியவர்,

''ஏனப்பா பகலில் விளக்கோடு திரிகிறாய்'' எனக் கேட்க,

''ஐயா, நான் மனிதனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்றானாம்.

இன்றைய உலகில் சமூகத்தில் மனிதப் பண்புகள் குறைந்து வருவதையே இக்கூற்று எடுத்துக்கூறுகிறது. மனிதனின் சுயநலம் மேலோங்கும் போது மனிதப்பண்புகள் கீழ் இறக்கப்படுகின்றன. உண்மையில் மனிதன் ஆன்மீக நெறிகளை அறிந்து அவற்றைப் பின்பற்றும்போது மனிதப்பண்புகள் வெளிக்கொணரப்பட்டு அது தனக்கும் பிறர்க்கும் பயனளிப்பதை அறியலாம்.

அன்பு, பணிவு, அடக்கம், தயை, தாட்சணயம் இவை மனிதப்பண்பை வளர்க்கும் கருவிகளாகும். மனிதன் தனியாக வாழ்பவன் அல்ல. அவன் சமூகத்தில் ஓர் அங்கம். சமூக நெறிகளுக்கேற்ப தானும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு இணைந்து தன் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி வாழவேண்டும். சமய வாழ்க்கை வாழும் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பதும், போதிப்பதும், சாதிப்பதும் இவையே.

ஒவ்வொருவரும் எண்ணத்தாலும், பேச்சாலும், செயலாலும் அறத்தைப் போற்றி வாழவேண்டும். மனம், மொழி என்பவற்றை தனது கட்டுப்பாட்டின் கீழ் அடக்கி வைத்திருக்கவேண்டும். அத்தகைய அடக்கம் மனிதப்பண்புகளை உருவாக்கி ஒருவனை மென்மேலும் உயர்த்தவல்லது. அவ்வாறு அடக்கம் உடையவனாக வாழ்ந்தால் அவன் சிறப்புடன் விளங்குவான்.

அடக்கத்தில் சிறந்தது நாவடக்கம். நாம் எதைக் காக்கத் தவறினாலும் நாவை அடக்கி காக்கவேண்டும். அதை காக்கத் தவறினால் மனிதப்பண்புகள் பலவற்றை மீறச் செய்துவிடும்.

## ரசிகர் நாதம்

தெவிட்டாத தீந்தமிழில்
பல்சுவை அம்சங்களை
அள்ளித் தரும் சங்குநாதமே!
நீ சுமந்து வரும்
அனைத்தும் அட்டகாசம்.
அதிலும் குறிப்பாக,
ஆலடிமாநாடு, நேரடிவிசிற்,
அரசியல் கட்டுரைகள் என்பன
அதிரடியாய் உள்ளன - மற்றும்
சிறுவர்களுக்கு அறிவுபூர்வமான
ஆக்கங்கள் பலவற்றைத் தரும்
சிறுவர் அரங்கம், மங்கையருக்கு
பயனுள்ள தகவல்களை வழங்கும்
மகளிர்உலகம், கவிதைக்கலசம்,
மௌனத்தின் தேடல்,
சிறுகதைகள்.....
அனைத்துமே சிறப்பானவை.
மேலும் உனது பணி சிறப்பாகத்
தொடர வாழ்த்துக்கள்.

A.ரோகினி,கொக்குவில்.

வண்ணமுகப்புடன் வனப்பாய்
வலம் வரும் சங்குநாதமே!
உன் வரவு
எம் அறிவுக்குத் தீனி
உன் உள்ளடக்கம்
அனைத்தும்
படிக்கப் படிக்க பரவசம்!
வாழ்க உன் புகழ் நீடூழி.

T.தீபன்,
யாழ்ப்பாணம்.

வண்ணை மாநகரிலே
உருவெடுத்த நாதமே!
நீ தாங்கி வரும்
அனைத்துப் பக்கங்களும்
அருமையிலும் அருமை.
மீண்டுமொரு தொடர்கதையை
எமக்குத் தந்த
உனக்கு நன்றிகள் பல
உரித்தாகட்டும்.

க.கதிர்.கோப்பாய்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# புயல்வானில்

# சிறகிழந்த பறவை

**அகியோபி**

**போ**தவிழ்ந்த மலர்களெல்லாம் பரதம் பழகி வந்த கர்வத்தோடு தென்றலின் தெம்மாங்கிற்கு அபிநயம் செய்துகொண்டிருந்தன. 'டிக் டிக்' என்றபடியே கடிகாரத்தின் செக்கன் முள் நகர மறுத்து மறுத்து நகர்ந்தது. மனிதர்கள் மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளும் குதூகலம் கொண்டாடும் இளவேனிற் காலமது. ஆனால் அங்கே ஒருத்தியின் விழிகளுக்கு மட்டும் அடைமழைக்காலம். ஆம்! அடைமழைக்காலம்.

''அம்மா! எழும்பணை! எனக்குப் பசிக்குது அம்மா.....''

மகனின் சிணுங்கல்களைப் பொறுத்துக் கொள்ளமுடியாது படுக்கையிலிருந்து மெல்ல எழுந்து சுவரோடு சாய்ந்த வண்ணமிருந்தாள் வள்ளி. அவளது புருவங்கள் வீங்கியிருந்தன. முகமும் அவ்வாறே இரைந்திருந்தது. வார்த்தைகளை உச்சரிக்கப் பலமின்றி அவளது காய்ந்த உதடுகள் உச்சரித்தன. ''என்ன தம்பி என்ன?, ஏன்ராசா குழப்படி செய்கிறாய். அம்மாவிற்கு ஏலாது. அக்கா வந்ததும் ஏதாச்சும் செய்து தருவா. என்னைக் கொஞ்சம் படுக்கவிடன்....''

''இல்லையில்லை.எனக்கு இப்பவேணும். பசிக்குது...''

அடம்பிடித்த மகனைப் பார்த்து ''எடேய்! நீ நான் சொல்லுறதைக் கேட்காட்டில் நான் செத்துப்போவன். பிறகு நீங்கள் வீட்டுக்கு வீடு திரியுங்கோவன்....''

வள்ளியின் கடைசி ஆயுதம் இவ் வார்த்தைகள்தான். இதைக் கேட்டதும் குழப்படி செய்யும் பிள்ளைகள் அப்படியே அடங்கிப் போய்விடுவார்கள். பாலனும் ஏதும் பேசாது ஓர் மூலையில் படுத்துக்கொண்டான். வள்ளியின் மனசு கடந்த காலங்களை அசைபோட்டது.


வள்ளி தாய் தந்தைக்கு ஒரேயொருபிள்ளை என்பதால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். திருமணம் முடித்து நான்கு பிள்ளைகளைப் பெற்ற பின்னர்கூட அவளது செல்லக்கதையில் மாற்றம் ஏற்படவேயில்லை.

அன்றொரு நாள் இடம்பெற்ற ஷெல் வீச்சின்போது வள்ளியின் குடும்பம் சின்னாபின்னமாகச் சிதறியது. வள்ளியும் பிள்ளைகளும் முதற் ஷெல் சத்தம் கேட்டவுடனேயே பதுங்குகுழியினுள் பதுங்கியதனால் எதுவித சேதங்களுமின்றி உயிர் தப்பினர். வெளியில் நின்ற அவளது கணவனும், தாய் தந்தையும் அதேயிடத்தில் உடல் சிதறிப் பலியாகினர். அக்கோரச் சம்பவத்தின்போது அவ்வூரவர்கள் பெருந்துணையாகவும் ஆறுதலாகவும் இருந்தனர்.

நாட்கள் நகர நகர யாவும் ஓய்ந்தன. நடுக்கடலில் கைவிடப்பட்ட கட்டுமரமாய் வள்ளியும் பிள்ளைகளும்.....

வள்ளிக்கு சுதன்,சுகி, வேணு, பாலன் என நான்கு பிள்ளைகள். அந் நான்கு பிள்ளைகளையும் எப்படியாவது வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உறுதியோடு அவள் உழைப்பதற்குத் தயாரானாள். தனது உடலை வருத்தி தோட்டங்களிலும், அரிசி ஆலைகளிலும் மாடாய் உழைத்தாள். சற்று ஓய்விருந்தால் வசதி படைத்தவர்களின் வீட்டிற்குச் சென்று அரிசி இடித்துக்கொடுத்து சுண்டுக்கு இவ்வளவு என்ற கணக்கில் கூலியும் பெற்றாள். பிள்ளைகளை வளர்ப்பதற்காய் அவள் பட்டபாடு தறியில் பருத்திபடாப்பாடு.

ஆண் துணையில்லா ஓர் காரணத்திற்காக அவள் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்தாள். இல்லை



இந்த சமூகம் அவளது உளநிலையைப் பாதிக்கச் செய்தது. பாவத்திற்கு இரங்கி அவளிற்கு யாரும் உதவி செய்யப்போனால் உடனே முடிச்சுப் போட்டுக் கதைத்துவிடுவார்கள். அதனால் அவள் எவரது உதவியையும் கேட்பதுமில்லை. ஏற்பதுமில்லை.

அன்றொருநாள் அவள் வேலை தேடிப் போகும்போது ஓர் காமுகன் அவளைப் பார்த்து ''உனக்கேன் உந்தக் கஸ்ரம் வருகுது. நல்ல அழகிருக்கு எடுப்பான உடலிருக்கு... அடிக்கடி.....'' அசிங்கமான வார்த்தைகள். அவனது உதடுகளிலிருந்து இறங்க முன்னரே உதடு வெடிக்குமளவிற்குப் 'பளார் பளார்' ரென அறைந்தாள். பின் அவனை நோக்கி ''த்தூ நாயே! உனது தங்கையிடமுந்தான் அழகிருக்கு எடுப்பான உடலிருக்கு அங்க போய்க் கேள் பார்ப்பம். நாய்க்குப் பிறந்தவனே நீயுமொரு....'' நெருப்பாய் எரிந்துவிட்டுச் சென்றாள்.

உண்மையில் அவள் தங்கமாகத்தானிருக்கிறாள். பாதகர்கள் முடிந்துவிட்ட பழிகளாலே வீட்டுக்குள் புயலடித்தது. மூத்தமகனான சுதன் ஊரார், உறவினர்களின் கதையைக் கேட்டு அவளை உதறித் தள்ளிவிட்டு எங்கோ ஓடிப்போய்விட்டான். அவனது பிரிவு அவளிற்கு வேதனையை அளித்தாலும் ஒரே சமயத்தில் மூவரது இழப்புக்களைத் தாங்கிய அவளது மனதிற்கு அது பெரிதாகத் தெரியவில்லையோ? என்னவோ? அமைதியாகவே இருந்தாள்.

''அம்மா அண்ணா எங்கேயணை'' சுஜி கேட்டதும்,

''பிள்ளை அவன் எத்துவார் புத்திகேட்டு எங்களையெல்லாம் உதறித்தள்ளி அவமானப்படுத்திவிட்டுப் போயிட்டான். நாங்களினி இருந்து என்ன பயன்? எல்லோரும் இந்த மருந்தைக் குடித்துச் சாவம் வாவா'' என இளையதுகளான பாலனையும் வேணுவையும் அணைததுக்கொண்டு அவளையும் அழைத்தாள்.

சுஜி பதினாறு வயது நிரம்பியவள் என்பதால் அவளால் தாயின் வேதனையைப் புரிந்துகொள்ள முடிந்தது. உடனே தாயின் கையிலுள்ள மருந்துப் போத்தலைப் பிடுங்கி எறிந்துவிட்டு ''அம்மா அவன் போனால் போகட்டும். நாங்கள் உங்களைப் பிரிந்து போகமாட்டோம். நீங்கள் நோர்மையானவள் என்று எங்களுக்கும் கடவுளிற்கும் தெரியும். எதற்கு உங்களுக்கு அடுத்தவர்களின் கதைகள். ஏன் அவர்களா எங்களை வளர்த்தவர்கள்? நீங்கள்தானே எங்களை வளர்த்தீர்கள். நீங்கள்தான் எங்களின் தெய்வம். ஏனம்மா இப்படியொரு முடிவெடுத்தீர்கள்...'' என்த் தாயை ஆரத்தழுவி அழுதாள். தாயைப் பார்த்துச் சேய்கள் அழுதன. சேய்களைப் பார்த்துத் தாயும் அழுதாள். அழுது முடித்துவிட்டு அவரவரே சோகமாய் படுத்திருந்தனர். வள்ளிக்கு அன்று பிடித்த வருத்தந்தான் சுகப்படுவதும் பின் வருவதுமாய் வாட்டிக் கொண்டேயிருந்தது.

பத்து நாட்கள் தொடர்ந்து வருத்தம் என்பதால் வேலைக்குப் போகமுடியவில்லை. வீட்டில் பட்டினி தாண்டவமாடியது. இன்றோடு இரண்டுநாட்கள் ஒன்றுமே சமைக்கவில்லை. பசியால் பாலன் சுருண்டே போனான். இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து வள்ளியின் மனம் எரிமலைக் குழம்பாய்க் கொதித்தது. என்ன செய்ய எல்லாம் காலஞ்செய்த சதியெனச் சகித்துக்கொண்டாள்.

அரிசி, மா, சீனி, காய்கறிகள், பிஸ்கட்பெட்டி, சோடா என்பவற்றை வாங்கிக்கொண்டு சுஜியும் வேணுவும் வீட்டிற்குள் நுழைந்தனர்.

''இம்... இம்....'' என அனுங்கிக் கொண்டிருந்த வள்ளி அவர்களைக் கண்டதும்,

''பிள்ளையள் எங்கெயணை போனனீங்கள். தம்பி இவ்வளவு நேரமும் பசியால அழுதுகொண்டிருந்தவன். அவனுக்கு வெறுந்தேத்தண்ணியெண்டாலும் வைத்துக்கொடுங்கோ...''

தாயின் கவலை தோய்ந்த வார்த்தைகளைக் கேட்டு பிள்ளைகள் மெழுகாயினர். வேணு உடனே அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

சுஜி சோடாவினை ஓர் சில்வருக்குள் ஊற்றித் தாயிடம் நீட்டினாள். அதுவரையும் தன் கண்களைத் திறந்தும் திறக்காது கதைபேசிய வள்ளி கண்களைத் திறந்தவள் திடுக்கிட்டாள்..

''எங்கால இந்தச் சாமான்கள்....? சொல்லுங்கோ யாரிட்டக் காசு வாங்கினீங்கள். உடம்பிற்கு ஏலாத நிலையிலும் அவளது தன்மான உணர்வு சிறிதளவும் குறையவில்லை. மறுபடியும் அதட்டிக்கேட்டாள்.

''பிள்ளை சொல்லடி எங்கால காசு....''

''அது.... அந்தக் கந்தப்பரின் கடையில கடன் வாங்கினனான்...'' பதட்டமான பதிலை சுஜியின் உதடுகள் உச்சரித்ததும்,

''எடியேய் தின்னாமல் கிடந்தாலும் பறவாயில்லை எவரிடமும் கடன் வாங்கக்கூடாதென்று சொன்னனானெல்லே.... ஐயோ ஐயோ என்ரை பிள்ளையளெல்லாம் எனக்கு எதிராய் நிற்குதுகளே ஐயோ....'' பழஞ்சீலை கிழிவது போல அவள் புலம்பத் தொடங்கியதும் சுஜி அவ்விடத்தை விட்டு மெதுவாக நழுவினாள்.

அடுக்களையிலிருந்து தாயை நோக்கி வந்தாள் வேணு. ''அம்மா ஏனணை அழுறியள்.

''பிள்ளை வேணு இந்தச் சாமான்களையெல்லாம் எப்படி வேண்டினியள்...''

''அது அம்மா... நாங்களிருவரும் நடந்துபோகேக்கை வழியிலயொரு ஆயிரம் ரூபா காசு கிடந்தது. அதையெடுத்துத்தான் வாங்கினனாங்கள்...''

வள்ளியின் கோபம் இரட்டிப்பானது. பிள்ளைகள் தன்னிடமிருந்து ஏதோ ஒன்றை மறைப்பதையுணர்ந்தவளாய், ''எடியேய் உண்மையைச் சொல்லுங்கோடி. கொக்கா அப்படிச் சொல்லுறாள் நீ இப்படிச் சொல்லுறாய் எதடி உண்மை.ஐயோ என்ரை ஐயோ நானேன் உயிரோடிருப்பான்...''

இனிமேலும் நடந்ததை ஒளித்தால் தாய் பாவமென்று நினைத்த வேணு உண்மையை உரைக்கலானாள்.

''அம்மா, நானும் அக்காவும் அந்த வைத்தியசாலை வழியாகப் போகும் போது வைத்தியசாலை வாசலில் ஒருவர் யாருடனோ ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அவர் சம்மதிக்கவில்லை.

என்ன விஷயம் என்று கேட்டபோது என் வயதுப் பிள்ளைக்கு ஒப்பரேஷன் செய்வதற்கு ஒரு பொயிண்ட் இரத்தம் தேவையாம். இரத்தம் கொடுப்பவருக்கு ஆயிரத்தி ஐநூறு ரூபா தருவதாகவும் கூறினார். அக்கா ஓமென்று சொல்லி இரத்தம் கொடுத்துவிட்டு காசினை வாங்கினாள். ஏனக்கா இப்படிச் செய்தனீங்களென்று கேட்க,

'எடியே அம்மா பாவமடி. எங்களுக்காக எவ்வளவு கஸ்ரப்பட்டவ. அவ சுகமில்லாமலிருக்கேக்க நாங்கள்தான் கவனமாகப் பார்க்க வேண்டும். நாங்கள் வேலை கேட்டால் எவரும் தரமாட்டினம். இப்படி செய்தேனும் காசு வாங்கி அம்மாவைச் சுகப்படுத்துவம்' எனக் கூறினாள்.

பின்னர் காசு எங்கால என்று அம்மா கேட்டால் நிலத்தில கிடந்ததை எடுத்தனாங்கள் என்று சொல்லச் சொன்னவள். பாவமணை அக்கா...''

வேணுவின் கண்களில் நீர்த்திவலைகள். வள்ளியின் துயருக்கு ஒப்புவமையில்லை. இவற்றைக் கேட்ட சூரியனின் முகம் வேர்த்தமையினாலோ என்னவோ கருமுகில் கைக்குட்டையினால் துடைத்துக்கொண்டிருந்தான்.


அங்கே ஓர் மூலையில் சுஜி சுருண்டு படுத்திருந்தாள். தாயும் தங்கையும் அவளருகில் சென்று சோர்வுற்ற அவளது உடலை நீவினர். கண்ணீர் வெள்ளத்தில் சுஜி மிதக்கலானாள்.

இன்னும் எத்தனை காலந்தான் இக்கொடுமை.

---

**இவ்வார சிறுகதைகள்**

# மொட்டொன்று உதிர்ந்தது



**M.சந்திரகலா**
**யோகபுரம்**

அழுதழுது கண்கள் வீங்கி உள்ளம் சோர்ந்து உணவு, உறக்கம் இல்லாமல் உடல் களைத்துவிட்டிருந்தது.

இனியும் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எதையும் தாங்கும் சக்தியற்று கட்டிலில் துவண்ட கொடியாய் கிடந்தாள் பவித்திரா. 11ஆம் ஆண்டில் கல்வி பயிலும் ஒரு மாணவி.

தாய் அரசவங்கியில் பணிபுரியும் ஒரு உத்தியோகத்தர். தந்தை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிபவர். இவர்களுக்கு பவித்திரா ஒரே ஒரு மகள். வேறு பிள்ளைகள் இல்லை. தாய் காலையில் எழும்பி அவசர அவசரமாய் வீட்டுவேலைகளை முடித்துக்கொண்டு காலை உணவையும் தயார்செய்து கணவனுக்கும் மகளுக்கும் வைத்துவிட்டு தனது மதிய உணவையும்கொண்டு வேலைக்குப் புறப்பட்டுவிடுவாள்.

தந்தையும் தனது வேலைகளை கவனித்துவிட்டு வேலைக்குப் போய்விடுவார்.

பவித்திரா தன்பாட்டுக்கு வெளிக்கிட்டு ஆறிப்போன உணவை ஏனோதானோ என்று உண்டுவிட்டு பாடசாலைக்கு கிளம்பிவிடுவாள்.

தாய் தந்தையிடம் நிறையக் கதைக்கவேண்டும் என்று ஆசை. ஆனால் அதுக்கு நேரம் கிடைப்பது எங்கே. பாடசாலை நேரம்போக மாலை வகுப்பு. அது முடிந்து வட்டுக்கு வந்தால் 'படிபடி' என்ற தாயின் நச்சரிப்பு. இதனால் தாயிடமோ தந்தையிடமோ சரிவர பேசமுடிவதில்லை.

அன்புக்கு ஏங்கினாள் பவித்திரா. விரக்தி மனதில் குடியேற ஆரம்பித்தது. இதன் விளைவு கல்வியில் ஆர்வம் குறைந்தது. அதனால் பாடசாலையிலும் ஆசிரியரின் பேச்சும் ஏச்சும் அதிகரிக்கத் தொடங்கியது. அதனால் பாடசாலை செல்லவே வெறுப்பாய் இருந்தது. எங்கும் நிம்மதியில்லாமல் தவித்தாள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியாகின. பவித்திரா பெயிலானாள். தாய் சுகந்தி பத்திரகாளியானாள்.

''என்னடி இப்படிப் பண்ணிட்டு வந்து நிற்கிற. எங்கட மானமே போச்சு. வெளியில தலை காட்ட முடியேல்ல. சீ... நாயே...

என்னோட வேலை செய்யிறவையின்ர பிள்ளைகள் பாசாகிவிட்டினம் என்று எவ்வளவு பெருமையாச் சொல்லினம். நான் என்னத்தைச் சொல்ல... சனியனே... இப்படி பெயிலாயிட்டு வந்து நிக்கிறியே'' என்று அடிஅடியெண்டு அடித்து தள்ளிவிட்டார். அதன் விளைவு...

(18ஆம் பக்கம் பார்க்க....)



# சிறுவர் அரங்கம்

## தந்தை எம் சிந்தை



தந்தைக்கு இங்கு நிகர்
தரணியில் உண்டோ பகர்
சிந்தையில் அன்புகொண்டு
சீராய்க் கடமை செய்து
விந்தை உலகில் என்றும்
வீர உணர்வை ஊட்டி
கந்தை வாழ்வகற்றி வாழ்வில்
குதூகலம் தருபவரே தந்தை!
இந்தை மண்ணில் என்றும்
தந்தையே எம் சிந்தை!

குடும்பம் என்னும் வண்டியை
குலையாது தினம் ஓட்டி
இடுக்கண் ஆயிரம் வரினும்
இனிதே வாழ்வு நடாத்தி
வடுவில்லா வாழ்வுக்கு தினம்
வனப்பாய் வழிகாட்டி
உடையும் உண்டியும் உயர்வும்
உலகில் தருபவரே தந்தை!

*த. அஜந்தகுமார்*
*யாழ் /நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.*

## பொது அறிவு

1. இலங்கையின் தேசிய மரம் எது?
2. இலங்கையின் தேசிய மிருகம் எது?
3. சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர் யார்?
4. சுதந்திர இலங்கையின் 1ஆவது நிதியமைச்சர் யார்?
5. SLES என்பதன் தமிழ் விரிவாக்கம் என்ன?
6. ஈரான் நாட்டின் பழைய பெயர் யாது?
7. சர்வதேச சனத்தொகை தினம் கொண்டாடப்படும் நாள் எது?

*T.S சயந்தன்*

## திருவள்ளுவர் இன்று இருந்தால்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனிதவாழ்க்கைக்கு வழி காட்டுகின்ற திருக்குறள் என்னும் பொக்கிஷநூலை வள்ளுவர் இயற்றினார். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளை உடையதாய் முப்பால் என்னும் சிறப்புப்பெயரைக் கொண்டுள்ளது.

அவர் சொல்லிய அரிய கருத்துக்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தோமானால் மானிட வாழ்க்கை வளம்பெறும்.

'இடுக்கண் வருங்கால் நகுக' எனக்கூறும் அவரின் அரிய கருத்தை கடைப்பிடிப்பவர், விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கும் இல்லையே. வள்ளுவர் இன்று இருந்தால் தன்னுடைய இந்தக் கருத்தை ஏற்பவர் தொகையை அறிவார் தானே.

மேலும் கல்வியின் பெருமையை
'ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து'
என்கிறார் அவர்.

கல்வி, வீரம், செல்வம் என்பவை 'ஒன்று இல்லாமல் ஒன்று உருவாகாது என்பதால் கல்வியின் அவசியம் புலப்படுகின்றது. ஆனால் இன்று காலத்தின் கோலத்தால் ஏற்பட்டுள்ள யுத்த அவலங்களால் தமிழ் மாணவர் தம் கல்வியின் சீர்குலைவை வார்த்தைகளால் எழுதி வர்ணிக்கமுடியுமா? இடப்பெயர்வு, பொருளாதாரத்தடை, போசாக்கின்மை, மனக்குவிவுக்கு அவசியமான அமைதியின்மை என்ற இன்னபலவற்றால் நாம்படும் துன்பங்களை வள்ளுவர் இன்று இருந்தால் அறிந்து வேதனைப்படாமல் இருக்கமாட்டார்.

எந்தநிலையிலும் நாம் முயற்சியைக் கைவிடலாகாது. இதன் சிறப்பை
'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தம்
மெய் வருத்தக் கூலிதரும்'
என்னும் குறளில் வள்ளுவர் காட்டுகின்றார். ஆனால் இந்த முயற்சி 'முயற்கொம்போ' என்னும் அளவிற்குக்கூட இன்று குறைந்துள்ளது.

வள்ளுவர் இன்று இருந்தால் அவரைச் சந்தித்து மேலும் மேலும் எவ்வளவோ தேவையான கருவூலங்களை நாம் பெறலாம்.

வாழ்க அவர் புகழ்!
வளர்க அவர் கருத்துக்கள்!

*அறிவுக் கதம்ப மாலை*

## சின்னத் தப்புத் தான்!

பாபு எட்டாம் வகுப்பில் படிக்கிறான். அன்று ஞாயிற்றுக்கிழமை. அம்மாவுடன் மாமாவீட்டுக்குக் கிளம்பினான். மாமா பிள்ளைகளுடன் பொழுதைக் கழித்துவிட்டு மாலையில் அம்மாவுடன் வீட்டுக்குக் திரும்பத் தயாரானான்.

தலையை வாரிக்கொள்ள சீப்பை எடுத்தபோது, அது புதுமையாக இருந்ததைக் கவனித்தான் பாபு. பிடியும் சரி சீப்பின் வண்ணமும் சரி சாதாரண சீப்புகளைப்போல் இல்லாமல் வித்தியாசமாக இருந்தது. யாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்ததும் சீப்பை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டான்.

மறுநாள் தலைவாரிக் கொள்ளும்போது அம்மா கவனித்துவிட்டாள்.

"என்னடா அது மாமா வீட்டுச் சீப்பு மாதிரி இருக்கே? திருடிட்டு வந்திட்டியா?"


"திருடலேம்மா, எடுத்திட்டு வந்திட்டேன்!"

"அதுக்குப் பேர் என்ன? யார்கிட்டயாவது சொல்லிட்டு வந்தியா?"

பாபு முழித்தான்.

"அடப்பாவி! மாமா வீட்டில என்ன நினைப்பாங்க! இப்பவே போய் சொல்லிட்டு மனனிப்புக் கேட்டிட்டு வந்துடுடா கண்ணா!"

"என்னம்மா நீ! இந்தச் சின்னச் சீப்பு காணாமல் போனதுக்காக அவங்க நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் தப்பா நினைக்க மாட்டாங்க. நான் நாளைக்குப் போய் சொல்லிக்கிறேன்."



"சின்ன தப்புதான் பெரிசாவளரும். அதனால இப்பவே போய் சொல்லிட்டு வந்திடப்பா."

"என்னம்மா நீ! இந்தச் சின்னத் தப்பு ஒரு வாரத்தில எவ்வளவும்மா வளரப்போகுது?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுப போய் விட்டான் பாபு. அடுத்தவாரம் ஞாயிற்றுக்கிழமை அம்மாவும், மகனும் மாமா வீட்டுக்குக் கிளம்பினர். அங்கு வீடே சோகமயமாக இருந்தது. மாமாவின் பிள்ளை விஜி கட்டிலில் படுத்திருந்தாள்.

"என்ன மாமா ஆச்சு?" என்று பாபு கேட்டான்.


மாமாவால் பேசமுடியவில்லை. அத்தைதான் பேசினார்.

"போனவாரம் சிங்கப்பூர் போயிட்டு வந்த நண்பன் ஒருத்தர் உங்க மாமாவுக்கு ஒரு அழகான சீப்பை அன்பளிப்பாகத் தந்திருக்கிறார். அதை இந்த விஜி ஒரேநாள்ல எங்கேயோ தொலைத்துப்போட்டாள். கேட்டால், நான் எடுக்கவே இல்லையென்று பொய்சொன்னாள். கோபத்தில நான்தான் இரண்டு அடி அடிச்சிட்டேன். அந்தப் பயத்தில அவளுககுக் காய்ச்சல் வந்திட்டுது. டொக்ரிடம் காட்டி ஊசி போட்டிருக்கோம். காய்ச்சல் இன்னும் குறையேல. இன்னிக்குள்ள குறையாவிட்டால், ஆஸபத்திரியில சேர்க்கவேணும் என்று டொக்டர் சொல்லி இருக்கிறார், என்ன பண்ணுறதென்றே தெரியல்ல" என்று அத்தை அழுதாள்.


பாபுவுக்கு 'திக்' என்றது. அம்மாவைப் பார்த்தான். கண்கள் கலங்கின. அவன் செய்த சாதாரணமான சின்னத் தவறு எத்தனை பெரிதாக வளர்ந்து இங்கே எல்லோரையும் கலங்க வைத்துவிட்டது.

"என்னை மன்னிச்சிடுங்க அத்தை. நான்தான் அந்தச் சீப்பை எடுத்தேன். உங்ககிட்ட சொல்லாம எடுத்துக்கொண்டு போனது எவ்வளவு பெரிய தப்பென்று இப்ப நான் உணர்ந்திட்டேன். இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்" என்று அழுதான் பாபு.


## இவை உங்களின் ஓவியங்கள்



கிரிசான்
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை



சங்கவி
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை



தர்சினி
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை

## விடைகள்

1. நாகமரம். 2. யானை
3. திரு D.S.சேனநாயக்கா.
4. திரு J.R.ஜெயவர்த்தனா.
5. இலங்கைக் கல்வி நிர்வாக சேவை 6. பாரசீகம்
7. யூலை11

## கணக்குப் புதிர்

1,2,3,4,5 என அடுத்து வரும் எண்களின் கூட்டுத்தொகை 15 ஆகும். அவ்வாறாயின் 20, 21, 22....60 என அடுத்து வரும் எண்களின் கூட்டுத்தொகையைக் காண்க

1. 1621 2. 1635 3. 1632
4. 1630 5. 1640

## ஜோக்



"பென்சில்"க்கு எதிர்ப்பதம் சொல்லு பார்க்கலாம்?

"ஆண்சில்" தான்.

## சொற் களஞ்சியம்

| | |
|---|---|
| அரி | – சிங்கம், அரிமா, மடங்கல் |
| அருக்கன் | – சூரியன், கதிரவன், பகலோன் |
| அழல் | – நெருப்பு, வெப்பம், சூடு |
| அழுக்காறு | – பொறாமை, வஞ்சனை, ஆற்றாமை |
| ஆணவம் | – செருக்கு, அகங்காரம், அகந்தை |
| ஆணை | – கட்டளை, அடையாளம், சத்தியம். |
| ஆதுலன் | – நோயாளி, இரப்போன், வறியவன் |
| ஆரணம் | – மறை, வேதம், சுருதி |
| ஆலம் | – நஞ்சு, கடல், மழை |
| ஆலி | – மழைத்துளி, பனிக்கட்டி, நீர்த்திரள் |
| இடங்கர் | – முதலை, தூர்த்தர், சிறுவழி |

# பெண் ஏன் அடக்கப்பட்டாள்....?

எழுச்சிகளும் புரட்சிகளும் காலங்காலமாய் இருந்து வந்தாலும் இன்னும் பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் மனப்பாங்கு சமூகத்தில் இருந்து விலகவில்லை. பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலைபோடும் நிலையும் மாறவில்லை. அவளின் அசைவுகள்கூட அலசப்படுகின்றன. உடைகள் பற்றி பேசப்படுகின்றன. அணிகலன்கள் பற்றி ஆராயப்படுகின்றன.



பெண்களை நாங்கள் வெளியில் போகவிடுகின்றோம். விரும்பிய உடைகளை அணிய விடுகின்றோம. பல்கலைக்கழகம் வரை படிக்க விடுகின்றோம். வேலை செய்ய விடுகின்றோம். ஏன் கணனியில் கூட எழுத அனுமதிக்கிறோம். இன்னும் என்ன வேண்டுமென்று இவர்கள் ஆர்ப்பாட்டக்கொடி பிடிக்கிறார்கள்... என்ற ஆணாதிக்கம் தொனிக்கும் கேள்விகள் கூட சில ஆண்களிடம் இருந்து சினத்தோடு எழுகின்றன.

பெண்விடுதலை என்றால் என்ன? அதன் தார்ப்பரியம் என்ன? என்பவை பற்றி சில ஆண்களுக்கு மட்டுமல்ல பல பெண்களுக்குமே புரியவில்லை.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வெகுவாக முன்னேறிவிட்டார்கள்தான். அதை யாரும் இல்லையென்று சொல்லமுடியாது. தனது பதினோராவது வயதிலேயே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்



கப்பட்டு தாய்மை என்னும் புனிதத்தையோ அன்றிப் புளகாங்கிதத்தையோ உணரமுடியாத குழந்தைப் பருவத்தில் ஒரு குழந்தையைத் தான் சுமந்து தாயான லிபேரியக் கறுப்பின இளம் பெண் போராளி ஒருத்தி சொல்கிறாள். 'ஒரு ஆணைவிடப் பெண்ணினால்தான் முழுமன ஈடுபாட்டுடனும் வீரியத்துடனும் புத்திசாதுரியத்துடனும் போராடமுடியுமென்றும் ஒரு ஆணைவிடப் பெண்ணிடம்தான் வலிமை அதிகம் என்றும்'

அது உண்மைதான். பெண்களின் பங்கு என்பது உலகில் மிக முக்கியமானது.

அவர்கள் இல்லாமல் ஆண்களால் பெரிதாக எதையும் சாதித்து விடமுடியாது.

இருந்தும் பெண் ஏன் ஒடுக்கப்பட்டாள்...? ஏன் அடக்கப்பட்டாள்....?

ஆதிகாலத்தில் வேட்டையாடுவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மனிதர்கள் காடு மேடு கடந்து பல தூரங்களுக்குப் போக வேண்டிய நிலையும், போனவர்கள் அன்றே திரும்பமுடியாமல் போன இடத்திலேயே தங்கவேண்டிய நிலையும் இருந்தன.

இந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மைவிடப் பலமான விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவேண்டிய கட்டாயமும் இருந்தது.

## ஏன் ஒடுக்கப்பட்டாள்....?

இங்குதான் பெண்கள் மெதுமெதுவாக வீட்டுக்குள் ஒடுங்கவேண்டிய காரணி உருவாகத் தொடங்கியது.

குழந்தை பிறந்திருக்கும் சமயங்களில் பெண்களில் குருதி வாடையும், பால் வாடையும் இருக்கும். அதேபோல மாதாமாதம் வெளியேறும் சூல் முட்டைகளின் காரணமாகவும் பெண்களில் அந்தநாட்களில் குருதி வாடை இருக்கும். இந்த வாடையை முகர்ந்தறிந்து மனிதர்களின் இருப்பிடத்தையோ அல்லது வரவையோ அறிந்துகொள்ளும் திறன் விலங்குகளுக்கு உண்டு.

ஆரம்பத்தில் பெண்கள் ஆண்கள் என்று எல்லோரும் ஒன்றாகச் சென்று வேட்டையாடி, ஒன்றாக உண்டு போற போற இடங்களிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்துத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் எவ்வளவு பாதுகாப்பாக ஒழிந்திருந்தும் எப்படி விலங்குகள் தம்மைக் கண்டுபிடித்து அழிக்கின்றன என்ற ஆராய்ச்சியை மேற்கொண்ட போதுதான் இந்தக் குருதிவாடையை வைத்து விலங்குகள் தம்மை மோப்பம் பிடிப்பதை அறிந்து கொண்டார்கள்.

அதன் பிறகுதான் அந்தக் குறிப்பிட்ட நாட்களில் பருவமெய்திய பெண்களையும், குழந்தை பெற்ற பெண்களையும் வீட்டிலே விட்டு மோப்பம் பிடித்து வரக்கூடிய விலங்குகளால் அவர்களுக்கு எந்தவித ஆபத்துக்களும் ஏற்படா வண்ணம் காவலும் வைத்துவிட்டு மற்றவர்கள் வேட்டைக்குச் சென்றார்கள்.

இது மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல விலங்குகளிடமும் இருந்தது. மிகமிக ஆதிகாலத்திலிருந்தே தம்மைவிடப் பலமான விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள குட்டி போட்ட பெண் விலங்குகளை தமது இருப்பிடங்களில் விட்டுப் போகவேண்டிய கட்டாயம் விலங்குகளுக்கும் இருந்தது.

இந்த விலங்குகளிடமிருந்தான பாதுகாப்புத் தேடல்தான் மெதுமெதுவாக பெண்கள் வீட்டுக்குள் முடங்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தத் தொடங்கியது.

காலங்காலமாக இந்த நடைமுறை தொடர்ந்தபோது எப்படித் தோல் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கேற்ப இசைவாக்கம் பெற்றதோ அதேபோல மூளையும் மெதுமெதுவாக இசைவாக்கம் பெறத்தொடங்கியது.

ஆண்களின் மூளை வேட்டைக்குப் போகும் பாதையை நினைவுபடுத்தி வைப்பதிலும் வேட்டையாடுவதிலும் என்று ஒருவிதமான ஒற்றைப்பாதையில் திடமாக கூர்மையான அவதானத்துடன் நின்றபோது, பெண்களின் மூளையோ தமது குழந்தைகளைப் பாதுகாப்பதிலும் குடும்பத்தின் உள் விடயங்களைக் கவனிப்பதிலும் என்று சற்றுப் பரந்து விரிந்தது.

இங்கே பாதுகாக்கும் தன்மை என்பது ஆண்களால் வெறுமனே ஒருவரைக் காவலுக்கு விடுவதுடன் நின்றுவிட்டது. ஆனால் பெண்களிடமோ தம்மைத் தாமே பாதுகாப்பது மட்டுமன்றி மிகமிக அவதானத்துடன் எந்த விலங்கிடமும் தமது குழந்தை பறிபோய்விடாதபடி தாமே பாதுகாக்கும் தன்மையும், தம்மை அண்டியுள்ள மற்றைய பெண்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்படாதபடி பாதுகாப்புக் கொடுக்கும் தன்மையும் என்றிருந்தது. அதுவே அவர்களிடம் ஒரு குழுமமாகச் செயற்படும் தன்மையை ஏற்படுத்தியது. இதுவே மனிதன் விலங்குகளிலிருந்து தன்னை வேறு வழிகளில் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய நிலை வந்த பின்னும் தொடர்ந்தது, தொடர்ந்து கொண்டிருக்கிறது.

(தொடரும்)




## போராடிடு பெண்ணே!



பெண்ணே புறப்படு!
இன்னுமா தயக்கம்?
ஏன் இந்த சுணக்கம்?
சமைப்பதற்கு மட்டுமா
உன் கரங்கள்.....
இல்லை.....
சரித்திரமும் படைக்கும் பெண் கரங்கள்
வாழ்க்கை இடிந்ததென...
வாடியிருக்கும் வஞ்சியே! நீ....
ஆண்கள் கொஞ்சுவதற்கு மட்டுமல்ல....
அவர்களை விஞ்சி.....
வெற்றி படைப்பதற்கும்தான்.
விண்ணில் மடிந்த கல்பனா....
மண்ணில் மடிந்த மேரிகியூரி....
இவர்கள்.... சாதனைப் பெண்மணிகள்.
கண்மணியில் உள்ள ரோகத்தை
பெண்மணியே.... உன் முயற்சியினால் அழித்திடு!
உணவை ஆக்குவது மட்டும்
உன் வாழ்க்கை அல்ல ~உலகை
உருவாக்குவதும் உன் வேலைதான்
வேதனை நீங்கி....
சாதனை பிறக்க போராடிடு...
நிச்சயம் வெற்றி கிட்டிடும்!

ந.மாலதி,தெல்லியூர்,

## சமைத்துச் சுவைப்போம்

### காரச்சீடை



தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| வறுத்த அரிசி மா | - 1/2 சுண்டு |
| உழுத்தம்மா | - 100g |
| தேங்காய்ப்பூ | - பாதித் தேங்காய் |
| எள்ளு | - 50g |
| எண்ணெய் | - 1/2 போத்தல் |
| செத்தல் மிளகாய் | - 15 |
| உப்பு | - அளவிற்கு |

செய்முறை:-

எள்ளைத் துப்பரவாக்கி வறுத்தெடுக்க வேண்டும். தேங்காய்ப்பூவை வறுத்தெடுத்து வறுத்த அரிசிமா, உழுத்தம்மா, வறுத்த எள்ளு, தேங்காய்ப்பூ அனைத்தையும் ஒன்றாகச்சேர்த்து அரைத்த செத்தல் மிளகாய்க் கூட்டையும் அளவுக்கு உப்பையும் சேர்த்து சுடுநீர்விட்டுப் பதமாகக் குழைத்து மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.

## பயனுள்ள குறிப்புகள்

❋ சிவப்பு மிளகாயை எவர்சில்வர் பாத்திரததில் போட்டு வைப்பதை விட அலுமினியப் பாத்திரத்தில் போட்டால் மிளகாய் நிறம்மாறாது.

❋ பப்பாளிப்பழம் கிடைக்கும்போது தினமும் ஒருதுண்டைச் சர்க்கரையுடன் சேர்த்துச்சாப்பிட்டால் மலச்சிக்கல் முதல் குடல்நோய்கள் அனைத்தும் தீரும்.

❋ வீட்டு வேலைகள் செய்யும்போது கையுறை போட்டுச் செய்வதே மிகமிக நல்லது. கைக்குழந்தைகள் உள்ள வீடுகளில் இது அவசியம். குழந்தைகளின் கண்ணுக்கு மை இடும்போது உங்கள் கையில் ஒட்டியிருக்கும மசாலாப்பொடி குழந்தைகளின் கண்ணுக்குப் போகக் கூடாதல்லவா?

❋ சிலர்வீட்டுச் சமையலறையில் உள்ள அஞ்சறைப்பெட்டியைப் பார்த்தால் குழப்பமாய் இருக்கும். வெந்தயத்துடன் கடுகு, மிளகுடன் சீரகம் என்று கலந்திருக்கும். போதாக்குறைக்கு பட்டை கராம்பு என்று சிதறிக் கிடக்கும். மசாலாப்பொருட்களுக்கென்று தனி அஞ்சறைப்பெட்டியும், கடுகு சீரகம் வெந்தயம் போன்றவற்றிற்கென்று தனி அஞ்சறைப் பெட்டியும் வைத்துக்கொண்டால் குழப்பம் வராது.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சனி |
| | இராசி | | செவ் புதன் சந் சூரி |
| | நிலை | | குரு |
| | | கேது | |

# இவ்வார இராசி பலன்கள்

## (19.07.2004 முதல் 25.07.2004 வரை)

### மேடம் (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இவ்வாரம் உங்களுக்குத் தொழில் மேன்மை, இலாபம் அதிகரிக்கும். ஈடுபடும் கருமங்கள் தடையின்றி ஜெயம் பெறும். களத்திரநலம், இல்லறசுகம் குடும்ப அமைதி, மனைவாசம் கிட்டும். உத்தியோகத்தர்க்கு அதிகாரம் உயரும். மேலதிகாரிகளின் அனுசரணை கிட்டும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலில் ஏற்றம் காண்பர். மாணவர் கல்வியில் புது உத்வேகமடைவர். ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் உறவு வலுக்கும்.

### இடபம் (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் உடல் ஆரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படுவதால் தேகாபிமானம் தேவை. தனம், பொருள், மனை விருத்திகள் மந்தநிலையடையும். உத்தியோகத்தரின் உதவி ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கமுடியாது. சிலரது திருமண சம்பந்த நிகழ்வுகள் தொடரும். வியாபாரிகள் புதுமுதலீடுகளை மட்டுப்படுத்தவும். விவசாயிகள் புதுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளாதிருக்க வேண்டும். மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் தேவை.

### மிதுனம் (மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம தேகம் புதுப்பொலிவடையும். நோய் நீங்கும். தனம், பொருள் வரவுண்டு. மனை, வாகனம், குடும்பம் அபிவிருத்தியடையும். தான தர்ம காரியங்களில் ஆர்வம் மிகும். தொழிலில் இலாபம் கூடும். கடன் பழு அகலும். சிவில் வழக்கு விடயங்களில் சாதகமுண்டு. எதிரிகள் தொல்லை அகலும். உத்தியோகத்தரின் செல்வாக்கு கூடும். வர்த்தக நடவடிக்கைகளால் இலாபம் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தலில் நிதி வசதிகள் கூடும். மாணவர் ஏற்றம் காண்பர்.

### கடகம் (புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

இவ்வாரம் குடும்ப அங்கத்தவரிடையே நல்லுறவு, அமைதி நிலவும். வெளிநாட்டுப் பணவரவு, நற்செய்திகள் ஆறுதல் தரும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தால் புதிய முதலீடுகளை ஆரம்பிக்கலாம். விவசாயிகள் அரச மானியங்களை உரியநேரத்தில் பெறமுடியும். கணிசமான இலாபத்தை ஈட்டிக்கொள்ளமுடியும். உத்தியோகத்தர்க்கு செல்வாக்கு அதிகரிக்கும். மாணவர் கல்வி, விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்குவர்.

### சிங்கம் (மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் குடும்ப நிர்வாகம் சிறந்து விளங்கும். கணவன் -மனைவி பிள்ளைகளிடையே பாசபந்தங்கள் நிலவும். சிலருக்கு திருமணப்பேச்சுக்கள் சாதகமாகும். வர்த்தகர்களுக்கு பழைய நிலுவைகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் உரிய நேரத்தில் வந்து சேரும். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். மாணவர் ஆசிரியரின் ஆசியையும் பாராட்டையும் பெறக் கூடுதலாக உழைக்கவேண்டும். ஆசிரியர் - மாணவர் -பெற்றோர் உறவு வலுவடையும்.

### கன்னி (உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் வாக்குவாதம், சச்சரவுகள், பிரச்சினைகள், கருத்துமோதல்கள் அவ்வப்போது தோன்றிமறையும். உடல் ஆரோக்கியம் பாதிக்கச்செய்யும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தைக் கொடுக்காது. விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக ஒத்துழைப்பை பெறமுடியாதிருக்கும். உத்தியோகத்தர்க்கு வேலைச்சுமையுண்டு. அதிகாரிகளின் நல் நம்பிக்கையைப் பெற கூடுதல் உழைப்புத்தேவை. மாணவர்க்கு ஊக்கம் தேவை.

### துலாம் (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்பத்தில் நிம்மதியும் அமைதியும் குறைவுறும். உஷ்ணரோகம் அல்லது வயிற்று ரோகம் ஏற்படவிருப்பதால் தேகாபிமானம் அவசியம். குடும்பத்தில் பணப்புழக்கம் சுமாராகவே இருக்கும். வெளிநாட்டுப் பணவரவு தடங்கலாகும். உத்தியோகத்தில் வேலைப்பொறுப்புகள் அதிகரிக்கும். வர்த்தக நடடிவக்கைகள் மந்தநிலை பெறும். விவசாயிகளுக்கு அரசமானியங்கள் கிடைப்பது கஷ்டம். மாணவர்க்கு படிப்பில் ஊக்கம் தேவை.

### விருச்சிகம் (விசாகம் 4, அனுசம், கேட்டை)

இவ்வாரம் இல்லத்தில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகள் நடந்தேறும். புத்திரர் அனுகூலம், உதவிகள் கிட்டும். பெண்களின் எண்ணங்கள் பெரும்பாலும நிறைவடையும். வர்த்தகர்களுக்கு பழைய நிலுவைகள் வந்துசேரும். புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு சந்தைப் படுத்தலாலும், நிதி வசதிகளாலும் மனநிறைவைப் பெறலாம். உத்தியோகத்தர்க்கு ஏற்றம் கிட்டும். மாணவர் படிப்பில் மேலோங்குவதற்கு நண்பர்களின் சகவாசத்தைக் கட்டுப்படுத்தவேண்டும்.

**த.சத்தியதாஸன்[சத்யா]**

### தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் தனலாபம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். மாதா சுகம், கல்வி உயர்வு கிட்டும். இல்ல அங்கத்தவரிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு முதலியன தென்படும். குடும்பத்தில் சுபகரும கொண்டாட்டங்கள் நடைபெறும். வர்த்தக நடவடிக்கைகள் விறுவிறுப்படையும். விவசாயிகள் அரசமானியங்களின் உதவியுடன் பயிர்ப் பாதுகாப்புகளை மேற்கொள்ள முடியும். மாணவர் பரீட்சைக்குரிய பாடங்களைத் தயார்ப்படுத்தமுடியும்.

### மகரம் (உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் கணவன் -மனைவியிடையே கருத்து மோதல்கள் உருவாகும். குடும்ப அமைதி குறையும். புத்திரர்களால் கவலைகள், செலவுகள் அதிகரிக்கும். சிலருக்கு வெப்ப ரோகத்திற்கு இடமுண்டு. உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைச்சுமையும், உத்தியோக ரீதியான பயணமும் கிட்டும். வியாபாரம் மந்தநிலையிலிருப்பதால் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தவேண்டும். விவசாயிகளுக்கு அரசமானியங்கள் கிடைப்பதரிது. மாணவர்க்கு கல்வியில் விடாமுயற்சி அவசியம்.

### கும்பம் (அவிட்டம், 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் மனைநலம், இல்லறசுகம், குடும்ப அமைதி உண்டாகும். குடும்பத்திலிருந்த கஷ்ட நஷ்டங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். தேகம் புதுவீரியம் பெறும். பெரியோர், நண்பர், உறவினர் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு திருமணப் பேச்சுகள் சாதகமாக அமையும். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். வர்த்தகர்களுக்கு பழைய நிலுவைகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு புதிய பயிர்ச்செய்கைகள் கைகொடுக்கும். மாணவர் படிப்பில் புதுத்தெம்படைவர்.

### மீனம் (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

இவ்வாரம் இல்லத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவுண்டு. செய்யும் தொழிலில் மேன்மையின்மை, இலாபமின்மை தோன்றும். செய்யும் முயற்சிகள் திருவினையாக்கும். குடும்பப் பெண்களுக்கு நாவடக்கம் நன்மை தரும். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழு கூடும். சிலருக்கு திருமணப் பேச்சுக்கள் தடைப்படும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்தும், விவசாயிகள் புதிய பயிர்ச்செய்கையைத் தவிர்த்தலும் வேண்டும். மாணவர்க்கு கல்வியில் ஊக்கம் தேவை.

# எண்கலவாலி

## உடல் எண் 3 உயிர் எண் 7

3,12,21,30 போன்ற திகதிகளில் பிறந்தவர்களின் திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் குரு, கேது ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர். இவர்களது மனம் எப்பொழுதும் தனிமையை விரும்பும். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாக இருக்கும் இவர்கள், ஏகாந்த வாழ்க்கையையே விரும்புபவர். பழமையும், புதுமையும் கலந்து காட்சியளிப்பர். கவர்ச்சியான முக அமைப்புக்கொண்ட இவர்கள் எல்லோரிடமும் எளிதாகப் பழகமாட்டார். தான் பேசக்கூடியவைகளை முன்கூட்டியே தயார்செய்து வைத்துக்கொண்டு பின் பேசுவர்.

பிரசசினைகள் வந்துவிட்டால் அதிகமான வாதங்கள் செய்து காரியத்தை வெற்றி கொள்வர். தேவையற்ற பேச்சுக்களை எப்பொழுதும் பேசமாட்டார். இவரது கொள்கைகள் மற்றவர்களுக்கு ஒத்துவராது. இதனால் இவரைப் பற்றி மற்றவர்களுக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்துகொண்டிருக்கும். இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு நல்ல நண்பர்கள் அமைவது சிரமம். அவ்வாறு அமைந்துவிட்டால் உயிரும் உடலும் போல இருப்பர்.

முன்கோபியான இவர்கள், யார் தவறு செய்தாலும் தவறைச் சுட்டிக்காட்டிப் பேசுவர். தனக்கு வருகின்ற கஷ்டங்களைப் பிறரிடம் கூறாது மறைத்து விடுவர். கல்வி, கலை, ஆராய்ச்சி போன்றவைகளில் சிறந்த இவர்கள் எப்பொழுதும் எதையாவது சிந்தித்தவண்ணமிருப்பர். உத்தியோகத்திலிருக்

# ஏற்றமிகு வாழ்வு

கும் சிலர் தனது ஓய்வு நேரங்களில் ஏதாவது சிந்தனை செய்தும், எழுதிக்கொண்டும் இருப்பர். தனது சக ஊழியர்களுக்கும், இவர்களுக்கும் ஒத்துவராது. ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால், ஏதாவது புதிதாகக் கண்டுபிடிக்க முயல்வர்.

நாட்டுப் பற்றும், மதப்பற்றும் மிகுந்த இவர்கள் தன் நாட்டிற்கும், மதத்திற்கும் உண்மையாக உழைப்பர். ஆனால் எவ்வளவு உண்மையாக உழைத்தும் பிரயோசனம் இல்லை என்று கடைசியில் ஒதுங்கிவிடுவர். தன்னைவிடப் பலம் வாய்ந்தவர்களாக இருந்தாலும் அஞ்சாது எதிர்ப்பர். குடும்ப வாழ்க்கையில் சிறிது குழப்பம்கொண்ட இவர்கள் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை மாற்றிக்கொண்டால் நன்மை கிடைக்கும்.

தனியாகத் தொழில் செய்யும் பலர் அதிகமாகப் பேசாத காரணத்தால், தொழிலை மிகவும் அபிவிருத்தியாக்கமாட்டார்கள். பிறரிடம் தனது கவலையைச் சொல்லிப் போக்கிக்கொள்ளாதவராகவும், தொழிலில் ஏற்படும் சிக்கல்களை அடுத்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாதவராகவும் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் சிறப்பாக இருப்பதில்லை. இதனால் பிறந்த

**Dr.ஆர்.ஐ.துரைமுருகா**

திகதிக்குப் பொருத்தமானதாகக் கீழே குறிப்பிட்டபடி பெயரை மாற்றிக்கொண்டால் நல்ல முன்னேற்றத்தை அடையலாம்.

### தொழில்

திரவப் பொருள், கல், மருந்து வியாபாரம், கல் சம்பந்தமான தொழில் போன்வற்றினாலும் நல்ல முன்னேற்றம் பெற வாய்ப்பிருப்பதால், பெயரை நன்கு அமைத்துக்கொள்வது மேன்மையைக் கொடுக்கும்.

### நோய்

மன அமைதியின்மையால் மனநோய் வரலாம். பாரிச வாயு, அதிக உஷ்ண வியாதிகள், நரம்பு சம்பந்தமான வியாதிகள் வரலாம்.

### பெயர் அமைக்கும் முறை

இவர்களுக்கு குரு ஆதிக்கமாகிய 21,39 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமாகிய 14,23,32,41,50,59,77 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண் - 3, 2
யோகமான திகதிகள் -3,12,21,30; 2,11,20,29;5,14,23
யோகமான மோதிரக்கல் - எமிதிஸ்டு, வைடூரியம்
யோகமான நிறம் - ரோஸ், ஒரெஞ்ச், கத்தரிப்பூ
ஆகாத நிறம் - சிவப்பு
ஆகாத திகதிகள் - 6,15,24

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## மூலவுயிருருவை பேணி பாதுகாத்தல் மூலம் தாவர பிறப்புரிமை மூலவளங்களை பாதுகாத்தல்

## Germplasm preservation & conservation of plant genetic resources

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

### அதிதாழ் வெப்பநிலைச்சேமிப்பு (Cryo preservation)

இது முக்கியமான **Ex-situ** பாதுகாப்பு முறையாகும். இது பெரும்பாலும் அனுசேப செயற்பாடுகளை குறைத்து பின்னர் அதனை நிறுத்துவதன்மூலம் நடைபெறுகின்றது. இதற்காக மாதிரிகள் திரவ N இல் -196°C இல் வைக்கப்படுகின்றது. இதன் பின்பு அறைவெப்பநிலைக்கு கொண்டுவந்த பின்பும் இங்கு வாழ்தகவானது பேணப்படுகிறது. குறைந்த வாழ்தகவுடைய பதியமுறை மூலம் மாத்திரம் இனப்பெருக்கமடையும் பெறுமதியான தாவரங்கள் இம்முறைமூலம் சேமிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். உறைதலின்போது இழையங்களை பாதுகாப்பதற்காக **Dmso, Glycerol** பல்வேறுபட்ட வெல்லங்கள் சேர்க்கப்படுகின்றது. இவை **Cryoprotectants** எனப்படும். இவை திரவ அவத்தையில் கூடிய கரையும் தகவு உடையன. அத்துடன் கலத்திற்கு நச்சுத்தன்மை குறைந்தவை.

**Cryoptotectants** இல் 2 வகை உண்டு.

1. **Permiating** ஊடுபுகவிடும் தன்மை உடையவை.
**Eg: Dmso, Methanol ,Glycerol**

2. ஊடுபுகவிடும் தன்மை அற்றவை.
**Eg: Sugar , Alcohol, Polyvinyl Pyrrolidone (PVP)**

கலங்கள் வேறுபட்ட முற்பரிகரிப்பு நேரங்களை வேண்டுகின்றன. இது சரியான **Cryoprotection** க்கு உதவும்.

**Dmso** ஆனது **5-10%** மும் **Glycerol** ஆனது 10-20%மும சேர்க்கப்படுகின்றது.

**Dmso** ஆனது **glycerol** ஐ விட விரைவாக கலத்தினுள் புகும் எனவே குறைந்த நேர பரிகரிப்பு போதுமானது. சிலநேரங்களில் **Cryoprotectants** இன் கலவை சேர்க்கப்பட்டு பாவிக்கப்படுகின்றது.

வளர்ப்பு ஊடகத்தில் பிரசாரண உயிர்ப்புள்ள சேர்வைகள். உதாரணம்: **Mannitol, Sorbitol Sucrose & Proline** என்பன கலங்களின் உறைதல் பாதிப்பை தடுக்கும்.

**ABA** பரிகரிப்பானது உறைதலின் பாதிப்பைத் தடுக்கும் திரவ நைதரசனில் சேமித்தபின் **3-25% Sucrose** பரிகரிப்பானது முன் வளர்ப்பு ஊடகத்தில் கலங்களின் வாழ்தகவை அதிகரிக்கும். அத்துடன் அமினோவமிலங்களின் சேர்க்கையும் இழையங்களின் வாழ்தகவை அதிகரிக்கும்.

பல்வேறு தாவரங்களை அதிதாழ் வெப்பநிலை பாவித்து பின்வரும் முறைகளில் சேமிக்கப்படுகின்றது.

1. மெதுவான உறைதல் **(Slow freezing)**

**0-5 - 2°C/min** என்ற மாறா வீதத்தில் வெப்பநிலையானது குறைக்கப்படுகின்றது. இது இறுதி வெப்பநிலையாக **-30°C- -40°C** வரை செய்யப்படும். பின்னர் திரவ Nஇல் சேமிக்கப்படும். இம்முறையானது கலத்தினுள் உறைபனி உருவாதலைத் தடுக்கும். அத்துடன் உறைதல் பாதிப்பும் தடுக்கப்படும்.

2. விரைவான உறைதல்

இங்கு நேரடியாக திரவ Nஇல் அமிழ்த்தப்படும். இங்கு குளிர்தல் வீதம் அதிகமாகும். இம்முறையினால் **carnation, strawberry,** உருளைக்கிழங்கு போன்றவற்றின் அங்குரநுனிகள் **oil palm** போன்றவற்றின் பதியமுளையமானது சேமிக்கப்படுகின்றது. இது இளைய வளர்ப்பிற்குப் பொருத்தமற்றது.

ஜெயராணி நந்தகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை,
யாழ். பல்கலைக் கழகம்

3. **Droplet freezing**

**Cryoprotectant** பரிகரிப்பிற்குட்பட்ட பிரியிழைய தாவரப்பகுதிகள் **Al foil** இனுள் துளித்துளியாக இடப்படும். இங்கு **0.5° C/min** இல் மெதுவாகக் குளிர்விக்கப்படும். இங்கு இறுதி வெப்பநிலையாக -20°C -- - **40°C** வரை செய்யப்பட்டு பின்னர் திரவ Nஇல் சேமிக்கப்படும்.

4. **Storage thawing & Regrowth** சேகரிப்பை அறைவெப்பநிலைக்கு கொண்டுவரலும், மீள்வளர்ச்சியும்.

மாதிரிகள் திரவ Nஇல் **(-196°C)** அல்லது அதன் ஆவியில் **(-150°C )** வைத்திருந்தபின் **34 - 40°C** வெப்பநிலை உடைய நீர்த்தொட்டியில் 1-2 நிமிடம் வைக்கப்படும்.

அதிதாழ் வெப்பநிலை பாதுகாப்பின் நவீன முறைகளாக **Vitrification-** (கண்ணாடித் தன்மையாதல்)

அதி செறிவுடைய **Cryoprotectant** கரைசலில் வைத்திருந்தபின் அதிதாழ் வெப்பநிலைக்கு உட்படுத்தல். இதன்போது பனி தோன்றாமல் இருக்கவேண்டும். இதன்போது கலங்கள் உறைதல் செயற்பாட்டின் போது வாழக்கூடியதாக இருக்கும்.

**Encapsulation**-வில்லையமாக்கல்

அங்குர உச்சி, முளையம், பதியமுளையம் என்பன **Sodium alginate**ஐப் பாவித்து உறையிடப்படும். பின்னர் அதிசெறிவுடைய **Sucrose** கரைசலில் அமிழ்த்தப்பட்டு நீரகற்றப்படும். இதன்காரணமாக மாதிரிகள் புறப்பிரசாரணம் மூலம் நீரை அகற்றும். மேலதிக உறைதல் ஆனது **Laminal air flow cabinet** இல் 2-6 மணித்தியாலம் வைப்பதன் மூலம் செய்யப்படுகின்றது. பின்னர் திரவ N இனுள் மாற்றப்படும்.


# விஞ்ஞானத் துளிகள்

உறைதல் சாதனம்:

இந்த சாதனத்தில் இழைய வளர்புகள் ஆனது -196°Cயில் திரவ N இல் வெவ்வேறு நேரத்திற்கு அமிழ்த்தப்பட்டு அதிதாழ் வெப்பநிலைக்கு உட்படுத்தப்படுகின்றது. பின்னர் இவை தேவைப்படும் நேரங்களில் வெளியே எடுக்கப்பட்டு அறை வெப்பநிலைக்கு மாற்றப்படும்.

முற்றும்

### இவ்வாரப் புதிர் இல:105



ஒரு விவசாயி தனது சற்சதுரக் காணியில் காற்பங்கை தனது மகளுக்கு கொடுத்தபின்பு தனது எஞ்சிய 3/4 பங்கு காணியை சரிசமமாக ஒரே உருவமைப்பாக இருக்குமாறு 4 புத்திரர்களுக்கும் பிரித்துக்கொடுத்தான். இது எப்படி என்பதை படம் போட்டுக் காட்டவும்.

இப்புதிருக்கான சரியான விடையை கழுள்ள கூப்பனில் எழுதி,

பத்திராதிபர்
யாழ். விஞ்ஞானச் சங்கம்
மே/பா. தாவரவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு 22.07.2004 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

### புதிர் இல:102

**சரியான விடை:**
1. **நாகமரம்**
2. **இரும்பு மரக்கட்டை.**

சரியான விடையெழுதி அனுப்பியோரில் பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்.

1. கே.அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

ஒருவர் மட்டுமே இரண்டும் சரியாக விடை எழுதி பரிசினைப் பெற்றுக்கொள்கிறார்.

### புதிர் இல:103

**சரியான விடைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1Kg, | 3Kg, | 9Kg, | 12Kg |
| 1Kg, | 3Kg, | 5Kg, | 16Kg |
| 1Kg, | 2Kg, | 7Kg, | 15Kg |
| 1Kg, | 3Kg, | 8Kg, | 13Kg |

சரியான விடையெழுதி அனுப்பியோரில் பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்.

1. சிவகுமாரன் சயந்தன்
அரசடி ஒழுங்கை,
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.
2. நவரட்னவேல் மீரா
யாழ்.இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
3. இரத்தினதயா வசந்தினி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

புதிர் இல: 102,103 இற்கான
பரிசுப் பணத்தை
அன்பளிப்புச் செய்வோர்:
**BEACON STUDY CENTER**
**VATHIRI, KARAVEDDY.**

குறிப்பு: புதிர் போட்டிகளில் வெற்றி பெற்றோர் தமக்குரிய பரிசுப்பணத்தினை வார நாட்கள் தோறும் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 105**

சரியான விடை :............................................
முழுப்பெயர் :............................................
முகவரி :............................................
............................................
கையொப்பம :............................................

# ரென்ஷன் வாழ்க்கை

▶ உங்களை நீங்கள் கட்டுக்குள் வைக்காவிட்டால்....
▶ உங்களை நீங்களே கட்டு மீறிப் போகவிட்டால்....
▶ உங்கள் வாழ்க்கையின் நாட்கள் குறைகிறது.
▶ வாழ்க்கை மிகவும் கஷ்டமாக இருக்கிறதே!
▶ பணம் இருக்கிறது வாழ்க்கையில் திருப்தி இல்லையே!
▶ மனைவி - தாய் எப்படி சமாளிப்பது?
▶ கணவரிடம் மறைத்து வாழும் மனைவி
▶ மனைவியிடம் மறைத்து வாழும் கணவன்
▶ அடுத்தடுத்து இழப்புகள், சோதனைகள்.
▶ அலுவலகத்தில் திருப்தியில்லாத வேலை.
▶ யாரிடமும் முகம் கொடுக்க முடியவில்லை
▶ யாரும் தன் பேச்சைக் கேட்பதில்லை
▶ எது தப்பு என்றே தெரியவில்லை
▶ அமைதி இருந்தால் போதும்.

என்ன இது? எங்கெங்கோ தொடங்கி எங்கோபோய் முடிகிறதே... என்று பார்க்கிறீர்களா? உண்மைதான். பலரிடமும் இப்போது உள்ள வியாதிகளுக்கு மூலகாரணம் ஸ்ட்ரெஸ்தான். அதாவது மனதிடம் குறைந்து, பலவீனம் தொற்றி, கோபம், ஆத்திரம், கவலை, வேதனை, கழிவிரக்கம், கண்ணீர் விடுவது... போன்ற சமாச்சாரங்கள்தான். எதையும் இலகுவாக எடுத்துக் கொண்டு யதார்த்தமாக வாழ்க்கையை நடத்துவோர்தான் கடைசி

# உங்களுக்கு மட்டுமல்ல!

வரை எந்த கோளாறும் அண்டாமல் வாழ்க்கையை நடத்துவர்.

யாருக்குதான் கவலை இல்லை? யாருக்குத்தான் ஆத்திரம் இல்லை? யாருக்குத்தான் வேதனை இல்லை? எல்லோருக்கும் எல்லாம் உண்டு. பணம் இருந்தால் எல்லா நிம்மதியும் திருப்தியும் வாழ்க்கையில் கிடைத்துவிட முடியுமா? அப்படியானால் ஏன் ரத்த அழுத்தம் வருகிறது? ஏன் இருதய நோய் வருகிறது? ஏன் திடீரென மாரடைப்பு வருகிறது?

நம் உள்ளமும் உடலும் சரிவர இயக்கினால் போதும், நம்மை எந்த வியாதியும் தீண்டாது. உடலை சரிவர வைத்துக்கொள்ள முதலில் உணவு முறை முக்கியம். அது வயதாக வயதாக சீராக பேணிக்காத்தால் போதும். அதுபோல வயதாக வயதாக உள்ளத்தை பலவீனம் அடையவிடக்கூடாது. மனத்திடம் தேவை. எதிலும் மயங்கவோ, மடங்கவோ கூடாது.

வேண்டாத உணவை தவிர்ப்பதுபோல், வேண்டாத எண்ணங்களை கண்ணால் பார்ப்பதோ, காதால் கேட்பதோ இல்லாமல் இருந்தாலே போதும். இப்போதுள்ள சுற்றுச்சூழல் குழந்தை முதல் பெரியவர் வரை யாருக்கும் ஏற்ற சூழல் இல்லை. எதிலும் மதிமயக்கும் சூழல் தான் உள்ளது. அதனால்தான் உணவு முறையில் ஏகப்பட்ட மாற்றங்கள்.

இதுதான் குழந்தையில் இருந்தே வாழக்கையை திசை மாறிப் போகவைக்கும் பழக்கம். காய்கறி உண்ணும் பழக்கமே அறவே போய்விடும் அபாயம் உள்ளது. கொழுப்பு உணவு வகைகள்தான் இப்போது அமெரிக்கா உட்பட பல நாடுகளில் குழந்தைகள், சிறுவர்களை குண்டாக்கி; பல வியாதிகளை வரவழைக்கிறது.

*(18ஆம் பக்கம் பார்க்க..)*

பொதுசன நூலகம்



என்னுடைய முயற்சிகள்
எல்லாம் பொய்யாகி
என்னைப் பற்றிய மற்றவர்களின்
எதிர்வு கூறல்கள் அத்தனையும் மெய்யாகி
என்னுடையவைகளும்
நான் தேடிக் கொண்டவைகளும்
என்னுடையவர்களும்
நான் தேடிக் கொண்டவர்களும்
என்னை விட்டு வெகுதூரம் போய்
இல்லாமையும் அவமானங்களும் வாழ்வாகி
நான் தெருவுக்கு வந்தபின்பும்
என்னை விட்டகலாத ஒரே சொந்தம்.

# அம்மா

பேதுரு யேசுதாசன்

# இலங்கையில்......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவின் பொருளாதார இராணுவ உதவிகளை ஈர்ந்துகொள்வதேயாகும்.

அமெரிக்காவைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு அரசியல் அழிவை நாகரிகமாக நடத்துவதே இலங்கை அரசின் நோக்கமாகவுள்ளது.

இதனை உணர்ந்தும் அமெரிக்காவும் இலங்கை அரசின் தில்லானாவுக்கு ஜதி சேர்ப்பதுதான் துரதிஸ்டவசமான நிலையாகும்.

சர்வதேச ஜாம்பவான் என்று தன்னைக் கருதும் அமெரிக்கா இலங்கை விவகாரத்திரல் நீதியோடு செயற்படவேண்டும். தமிழ்மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் நேர்மையோடு அமெரிக்கா உதவ முன்வர வேண்டும்.

இதனை விடுத்து திட்டமிட்ட தவறான பிரசாரத்திற்கு உட்பட்டு தமிழ் மக்களின் வேதனையைக் கொட்டிக்கொண்டால், வரலாற்றில் இன்னொரு வியட்னாமை அமெரிக்கா பார்க்கும் சூழ்நிலைகூட உருவாகலாம்.

# ரென்ஷன் வாழ்க்கை......

(17ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பெரியவர்களை பொறுத்தவரை மன இறுக்கம்தான் பிரச்சினை. வாழக்கையில் விரக்தி எளிதில் ஏற்படுகிறது. இதற்கு காரணம் மனம்தான். வெளி உலகில், டிவியில், சினிமாவில் பார்த்து அதுபோலவே தான் நடக்க ஆரம்பித்து வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். தடம் மாறிப்போகும் போதே அதைத் தடுக்க முயற்சிப்பதில்லை. கடைசியில் ஏகப்பட்ட ரென்ஷன்.

இப்படித்தான் இப்போது பலரிடம் ரென்ஷன். இது தான் பல வியாதிகளுக்கு மூலகாரணம்.

- ரென்ஷனில் ரத்த அழுத்தம் அதிகமாகிறது.
- விரக்தியில் தலைவலி துவங்கி எங்கோ போய்விடுகிறது.
- வேதனையில் சாப்பாடு குறைகறது. அல்சர் வருகிறது.
- தப்பு என்று தெரிந்தே செய்து வியாதியில் சிக்குவது.
- சின்னச்சின்ன கோளாறுதான பெரிய வியாதியில் விடுகிறது.

எதுவும் நம்மை மீறி வருவதல்ல, செய்யும் சிறிய தவறோ, பெரிய தவறோ அதனமூலம் தான் வருகிறது. அதைத் தெரிந்துகொண்டால், அதை மறைக்காமல் டாகடரிடம் போய் செக்அப் செய்வதில் தவறே இல்லை. மறைத்து வைத்திருந்தால், ஒருநாள் வெளியே தெரிந்துதானே ஆகும். இப்போதுள்ள சூழலில் யாரும் தெரிந்து தவறு செய்வதில்லை. இதுதான் தவறு என்று தெரிந்தே செய்பவர்களும் உண்டு.

உணவிலும் பழக்கவழக்கங்களிலும் நீங்களாக மாற்றம் செய்யாதீர்கள். 'வாழ்க்கையில் அது அது வரும்போது வரத்தான் செய்யும். தவறா? சரியா? என்று தெரிந்து தைரியமாக கட்டுப்பாட்டுடன் செய்யுங்கள். எதுவும் தவறில்லை. எதுவும் சரியில்லை. நீக்குபோக்குடன் வாழ்க்கையை நடத்தி, சந்தோஷமாக இருப்பதுதான் வாழ்க்கை. மனதைப் போட்டு குழப்பி, இறுக்கத்தை அதிகப்படுத்தி. பி.பி.முதல் எல்லா உடல் கோளாறையும் வரவழைத்து கொள்பவர்கள்தான் அதிகம்.

வேண்டாமே, நீங்கள் மனதை வெல்லுங்கள். உடலை வதைக்காதீர்கள். மொத்தத்தில் நீங்கள் உங்களைக் கட்டுப்டுத்தி வைத்தால், வாழ்க்கை உங்கள் கையில். ஒவ்வாத வாழ்க்கை முறைக்கும், உணவுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் நீஙகள் அடிமைப்பட்டால், அது உங்களை கட்டுப்படுத்திவிடும். அப்புறம் என்ன, உங்கள் வாழ்நாட்கள் குறைகிறது.

எது தவறு என்று ஆராயாதீர்கள்.
வரும்முன் தவிர்ப்பவன் புத்திசாலி.
வந்தபின் வதைபடுபவன்.....?

# ஒலிம்பிக்.....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

முதன்முதலாக வெண்கலப் பதக்கமொன்றைக் குத்துச் சண்டைப் போட்டிமூலம் பெற்றுக்கொண்டது. ஒலிம்பிக் வரலாற்றில் குறைவான சனத்தொகை கொண்ட நாடொன்று முதன்முதலாக பதக்கம் வென்ற சந்தர்ப்பம் இது.

மேலும், ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த MIKLOS NEMETH ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் தந்தைக்குப் பிறகு பதக்கம் பெற்ற மகன் என்ற பெருமையைப் பெற்றார்.

1948ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இவரின் தந்தை IMRE சுத்தியல் எறிதல் போட்டியில் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இவர்கள் எல்லோரையும் விட இவ்வாண்டுப் போட்டிகளில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தவர் ரோமேனிய நாட்டைச் சேர்ந்த 14 வயதே ஆன ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை NADIA COMANCI.

ஒலிம்பிக் வரலாற்றில் ஜிம்னாஸ்ரி பிரிவில் முதல் முறையாக உச்ச புள்ளிகளை பெற்றவர் என்ற சாதனையை COMANCI பெற்றார்.

நடியா (PERFECT SCOREFO 10.0) இசையுடன் கூடிய ஜிம்னாஸ்ரிக் போட்டியின்போது (உடல் சகாயம்) அவருக்காக இசைக்கப்பட்ட பின்னணி இசை பின்பு ''NADIA'S THEME' எனப் பெயரிடப்பட்டது. இதை அந்நேரம் அமெரிக்காவின் ABC தொலைக்காட்சிச் சேவை தனது நாட்டின் பிலபல வாசனைச் சவர்காரமான OPERAவின் விளம்பரத்திற்காக இந்த இசையைப் பயன்படுத்தியது. 1976ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் நடியா 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும் வென்றார்.

ஜிம்னாஸ்ரிக் பிரிவில் நடியா 7 சந்தர்ப்பங்களில் 10.0 என்ற உச்ச புள்ளியைப் பெற்றார். தடகளப் போட்டிகளில் பில்லாந்து நாட்டின் LASSE VIREN முறையே 500m, 10000m போட்டிகளில் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

பதக்கப் பட்டியலினை பெறுத்தவரை சோவியத் யூனியன் 49தங்கம், 41வெள்ளி, 35 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடத்தினைச் தட்டிச்சென்றது. இரண்டாம் இடத்தினை அமெரிக்கா மொத்தமாக 94 பதங்கங்களினைப் பெற்றதன்மூலம் பெற்றது. அத்துடன் ஜேர்மனி மொத்தமாக 90 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது.

# மொட்டொன்று......

(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் இருக்கும் பெற்றோர் அவர்களின் எதிர்காலத்துக்கு எதிரியாகி விடுகிறார்கள் என்பதை எந்தப் பெற்றோர் தான் ஒப்புக்கொள்வார்கள்.

இறுதியாக பவித்திரா பெற்றோருக்கு எழுதிய கடிதம்.

அன்புள்ள அம்மா அப்பா அறிவது,

உங்கள் பாசமிக்க மகள் பவித்திரா எழுதிக்கொள்வது. நான் பரீட்சையில் சித்தியடையவில்லை என்று எனக்குத் தண்டனை தந்தீர்கள். மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். ஆனால் இந்தச் சிறுவயதில் நான்பட்ட வேதனைகளுக்கு காரணமான உங்களுக்கு என்ன தண்டனை தரமுடியும்.

அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கவைத்தீர்கள். ஒருநாள்கூட உங்களிடம் மனம்விட்டுப்பேச நீங்கள் சந்தர்ப்பம் தரவில்லை. ஓய்வான நேரத்தில்கூட ரீ.விக்கு முன்னால் இருப்பீர்கள். என்னைக் கண்டாலே 'படிபடி'யென்று விரட்டுவீர்கள். நான் உங்களிடம் எதிர்பார்த்த அன்பைக் கொடுக்கமறந்தீர்கள். என் மனதில் பட்ட காயம் நாளுக்குநாள் ரணமாகிப் பெருத்துக்கொண்டே போனது. அதற்கு மருந்திடவேண்டிய நீங்களே மேலும் மேலும் கீறிக் காயப்படுத்தினீர்கள். நான் கல்வியில் பின் தங்கவும் இதுவே காரணம்.

இனி நான் உங்களை எந்த விதத்திலும் அவமானப்படுத்தமாட்டேன். கஷ்ரப்படுத்தமாட்டேன். ஏனெனில் என் வாழ்வு இத்துடன் முடிகிறது. என் பிரிவு உங்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம் ஆனால் பிரிவைத் தராது. என்னை மன்னித்துவிடுங்கள்.

மகள்,
பவித்திரா.

கடிதத்தை மடித்து தலையணையின் கீழ் வைத்துவிட்டு தேடிப்பொறுக்கிய நித்திரைக் குளிசைகளையும் போட்டுவிட்டு இறுதியாய் கண்களை மூடினாள். கடைசி மூச்சும் ஓய்ந்தது.

விடிந்தும் நித்திரையிலிருந்து எழும்பாத மகளின் மேல் வெறுப்பும் கோபமும் ஏற்பட, ''படிச்சுக் கிழிச்ச லட்சணத்தில இன்னும் நித்திரை...'' என்று காலம் காத்தாலேயே திட்டிக்கொண்டு பவித்திராவின் அறைக் கதவைத் தட்டினாள் சுகந்தி.

கதவு தானாகத் திறந்து கொள்ள உள்ளே சென்றவள் குப்பறப்படுத்திருந்த மகளை உலுப்பித் திரும்பினாள். அங்கு பவித்தராவின் உயிர் பிரிந்த உடல் எந்தச் சலனமுமின்றி வெறும் கட்டையாய்க் கிடந்தது. அலறிக்கத்தியபடி கணவனை அழைத்தாள்.

அங்கு வந்த சுந்தரம் அதிர்ச்சியடைந்தார். மகளைத் தொட்டுப் பார்த்து எதுவும் புரியாமல் விறைத்து நின்றார். வாய் பேச மறுத்தது.

''பெருமைக்காக படிபடியென்று விரட்டி இன்று எந்தப் பலனும் இல்லாமல் போச்சே....'' நெஞ்சிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறினாள் தாய்.

தலையணையின் கீழ் கிடந்த கடிதத்தை கண்ட சுந்தரம் அவசரமாய் பிரித்து படித்தார். அப்போதுதான் அவர் தன் பிழையை உணர்ந்துகொண்டார்.

வரட்டுக் கௌரவம் பார்க்கும் பெற்றோரால் இப்படி எத்தனை பிள்ளைகள் தவறான முடிவை எடுக்கிறார்கள்.

பொறுப்பில்லாத பெற்றோரின் போக்கால் பிள்ளைகளின் மனதில் ஏற்படும் விரக்தி அவர்கள் வாழ்வையே நாசமாக்கிவிடும். இதை பெற்றோர்கள் எப்போது உணர்வார்கள்.

சுந்தரமும் சுகந்தியும் அதை அன்றுதான் உணர்ந்தார்கள் பவித்திராவின் உயிர் பிரிந்த பின்....

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல - 19

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'காதல் இளவரசன்' என்ற பட்டபபெயரைக் கொண்ட நட்சத்திர வாரிசான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 24 ஆம் திகதிக்து முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பவேணடிய முகவரி:-



**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 19**
**'சங்குநாதம்'**
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு [illegible] மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலமபுரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல: - 19**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................
அனுப்புபவரின் முகவரி :-..........................
..........................
..........................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 17**
**சரியான விடை.**

**நடிகர் சரத்குமார்**

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல. 17 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | M.கேதானுசன்<br>சுழிபுரம் மத்தி,<br>சுழிபுரம். |
| இரண்டாம் பரிசு | :- | த.பிரதீபன்<br>வேப்பங்குளம்,<br>வவுனியா. |
| மூன்றாம் பரிசு | :- | சி.விமலாதேவி<br>இல- 606/1, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

சி.ரஜீவன், யாழ்ப்பாணம். சி.விவேகானந்தன், வியாபாரிமூலை. வி.ராதிகா, நாவாந்துறை. சு.வஸ்கலா, ஏழாலை. ம.றஞ்சன், திருமுறிகண்டி. ந.மீரா, யாழ்ப்பாணம். இ.தவசீலன், பொறப்பதி. K.புஸ்பராணி, தம்பசிட்டி. மு.ஜெயந்தி, சித்தன்கேணி. சு.பிரபாகரன், முல்லைத்தீவு. வி.கவினா, வண்ணார்பண்ணை. சி.துஷ்சாந்தினி, யாழ்ப்பாணம். து.ரெனோச், சுன்னாகம். செ.பாக்கியநாதன், சங்கானை. வி.செல்வநாயகம், புத்தூர். க.வத்ஷலா, சித்தன்கேணி. இ.விஜயசிறி, வேலணை. ஏ.சர்மிளா, அரியாலை. இ.கிந்துஜா, வேலணை. பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. சி.கேதாரணி, யாழ்ப்பாணம். ம.பாக்கியவதி, வங்களாவடி. N.ராகவன், திருவையாறு. S.தர்ஷிகா, நயினாதீவு. H.சுகிதா, வண்ணார்பண்ணை. சு.சித்திரா, யாழ்ப்பாணம். ஜெ.ஜெயமலர், இணுவில். K.யாழினி, கொக்குவில். L.அபிராமி, வல்வெட்டி. இ.சிவநாதன், யாழ்ப்பாணம். லோ.சுவஸ்திகா, உடுப்பிட்டி.




லியோன் ரேகன்
வயது:- 20
C/O ABதொலைத்தொடர்பகம்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
இணைய அரட்டை,
வழமையானவை.


ச.தனுஷ்
இல :- 419 திருநகர்,
மல்லாவி.
கவிதை, ஓவியம்.
வழமையானவை.

பி.நிரோஜினி
வயது:- 16
கலைநகர்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
வழமையானவை.

V. ஜெயப்பிரியன் (ஜெய்)
வயது:- 18
22/6 பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
துடுப்பாட்டம், அரசியல் ஆய்வு

க.கௌரிசங்கர்
வயது:- 18
C/O கணேசபிள்ளை,
புதிய செம்மணிவீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
இயற்கையை ரசித்தல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 19




அனுப்ப வேண்டிய முகவரி-
**குறுக்கெழுத்துப் போட்டி இல - 19**
**'சங்குநாதம்'**
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

முழுப் பெயர் :- ..........................
முகவரி :- ..........................
..........................
..........................

இங்கே வெட்டுக ..........................

### இடமிருந்து வலம்

(1)வான்வழி தொடர்புச் சாதனம். (4) பேச்சில் இது இருக்கவேண்டும் என்பர். (5) மாட்சிமை - இதனைக் குறிக்கும். (6) நிர்க்கதியாக வருபவருக்கு நாம் அளிக்கவேண்டியது. (7) புனிதமானதும் மருத்துவ குணமுடையதுமான செடி. (9)வலிமை - இதனைக் குறிக்கும் (வ.இ). (10) யானைக்கால் நோய்க்கு இந்த உயிரினம் காரணமெனபர்.

### மேலிருந்து கீழ்

(1) குங்குமம் - இதனை இப்படியுமழைப்பர். (2) மழைக்கு இது அறிகுறி. (3) திங்கள்களில் ஒன்று. (4) இது ஒரு தரை விரிப்பு. (8) உடலுறுப்புகளில் முக்கியமானதொன்று. (11) குருதி - இதனை இப்படியும் அழைப்பர் (கீ.மே).

### குறுக்கெழுத்துப் போட்டி இல.17இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

(1) சிந்துவெளி (4) நகல் (6) கடகம் (7) மந்தி (9)காசினி (10) துணை (11) சீதை.

**மேலிருந்து கீழ்**


(1) சிங்களம் (2) துரோகம் (3) தொல் (5)கருந்தாது (8) வனிதை (9) காதை (12) ஆணை.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | ம.பாக்கியவதி<br>வங்களாவடிச் சந்தி,<br>வேலணை. |
| இரண்டாம் பரிசு | :- | ந.கஜரூபன்<br>கொக்குவில் மேற்கு,<br>கொக்குவில். |
| மூனறாம் பரிசு | : | ஞா.இராஜதேவி<br>தெல்லிப்பளை கிழக்கு,<br>தெல்லிப்பளை. |

**போட்டியில்கலந்துகொண்டுபாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

R.ராஜசந்திரன், நாவாந்துறை. கு.சண்முகரத்தினம், சங்கானை. சி.யோகமலர், புத்தூர். க.மலர், யாழ்நகர். ந.அபிராமி, மூளாய். கோ.சத்தியப்பிரியா, யாழ்பபாணம். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. செ.பாக்கியநாதன், சங்கானை. க.வத்ஷலா, சித்தன்கேணி. மாருதி, ஆவரங்கால். பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். வ.மன்னர் அன்ரனி, குருநகர். கே.அரசேஸ்வரன், நல்லூர். சி.சியாமளா, சுன்னாகம். வ.யசோதா, கரவெட்டி. T.துவாரகா, திருநெல்வேலி. S.செல்வி, யாழ்ப்பாணம். சு.நிகேதினி, கொக்குவில். செ.நித்தியா, யாழ்ப்பாணம். V.இளங்கோ, கோப்பாய். கவிநிலா, கிளிநொச்சி. அ.மதனகௌரி, ஏழாலை. த.சிந்துஜா, வட்டக்கச்சி. தெ.நந்தரூபன், சாவகச்சேரி. ந.கிருபாகரன், புதுக்குடியிருப்பு. இ.சாந்தி, வேலணை.




எந்தக் கிரகத்திலிருந்து வந்திறங்குகிறார்கள் இந்த வாசிகள் என்று யோசிக்கிறீர்களா?

ஜெர்மனியில் 'மண் உலகம்' என்ற மணற் சிற்பங்களின் திருவிழா நடைபெற்றது. அதில் 75க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று மணற் சிற்பங்களைச் செய்தனர். அங்கு செய்யப்பட்ட மணற் சிற்பங்களில் ஒன்று மின்னொளியில் ஜெலிக்கும் காட்சியே இது.

இது ஷோவுக்கு வைத்திருக்கும் பொம்மை அல்ல. உண்மையான மங்கை. 2004-2005க்கான குளிர்காலத்திற்கான ஆடை அலங்கார அணிவகுப்பு பாரிசில் நடைபெற்றது. அதில் பிரெஞ்சு கலைஞர் கிறிஸ்டியன் லாக்ரோக்ஸ் என்பவர் செய்த அலங்காரத்துடன் பார்வையாளர்கள் மத்தியில் வலம்வரும் மங்கை.





கல்கத்தாவில் உருவாக்கப்பட்ட ஏவுகணைகளைச் செலுத்தும் வசதிகொண்ட ஐஎன்ஸ் பெட்வா என்ற போர்க்கப்பல் தனது பணியை செவ்வனே செய்யத் தயார்நிலையில் காத்திருக்கும் காட்சி.

அரக்கனின் சிலையின் முன் இவ்வளவு மகிழ்ச்சியாக நிற்கும் இந்த மங்கை யார்? அண்மையில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற சர்வதேச எயிட்ஸ் மாநாட்டில் பங்கேற்ற மிஸ் யூனிவர்ஸ் பட்டத்தை வென்ற ஆஸ்த்திரேலிய அழகியான ஜெனிஃபர் ஹாக்கின்ஸ்.



தென்ஆபிரிக்கக் கடற்கரைப் பகுதியில் திமிங்கலம் ஒன்று துள்ளி எழும்பி பிரம்பிப்பூட்டும் காட்சி.



இப் பத்திரிகை [illegible] இல:15, [illegible] யாழ்ப்பாணம். [illegible] அச்சகத்தில் 16.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது